# முக்கனி

## பேரறிஞர் அண்ணா



அபிராம் பப்ளிகேஷன்ஸ்

# முக்கனி

பேரறிஞர் அண்ணா, எம். ஏ.

அபிராம் பப்ளிகேஷன்ஸ்
307, லிங்கி செட்டி தெரு.
சென்னை-600001.

முதற்பதிப்பு ; 1962
இரண்டாம் பதிப்பு : 1983

உரிமை : மரகதப் பண்ணை
வில்லிவாக்கம்,
சென்னை.

விலை ரூ. 5-00

அச்சிட்டோர் :

வெற்றி அச்சகம்
சென்னை - 600 005

# வணக்கம்

நாட்டை வளர்க்கும் வகையில் நாட்டு மக்களை முன்னேற்றும் முறையில் இன உணர்ச்சி ஊட்டும் இயல்பில் ஏடுகள் எழுதப்படுதல் வேண்டும்.

நாட்டின் நிலை, அந்நாட்டில் வாழும் மக்களின் நாகரீகம், பண்பாடு ஆகியவைகளை அறிய ஏடுகள் துணையாயிருத்தல் வேண்டும்.

இங்ஙனமில்லாத ஏடுகள் எத்துணை கலையழகு மிளிர்வனவாயினும் நாட்டிற்கு நலன் பயப்பவையன்று; நாட்டிற்கும் ஏட்டிற்கும் தொடர்பு இருத்தல் வேண்டும் என்னும் உலக அறிஞர்கள் ஒப்பும் உயர்ந்த கருத்தை, திராவிட நாட்டு கலைச் சிகரமாய் விளங்கும், பேச்சுப் புலவர் திலகம்

'அறிஞர் அண்ணா'

அவர்கள், அவ்வப்போது ஆற்றிய சொற்பெருக்கினை, அன்று கேட்டவர்கள் மட்டுமன்றி பண்டிதர் முதல் பாமரர் ஈறாக அனைவருக்கும் பயன் தருதல் வேண்டும் என்னும் கருத்துடன் "முக்கனி" என்ற பெயரால், இந்நூல் வெளிவருகிறது. அனைவரும் படித்துப் பயன் பெறுவார்களாக.

அன்பன்

டி. எம். பார்த்தசாரதி

# கனி—1

**நாடு** மக்களால் நிறையப்பட்டிருக்கும் ஒன்று. ஏடு நாட்டு மக்களால் கற்கப்படுவது; கையாளப் படுவது; செய்யப்படுவது; போற்றப்படுவது. அந்தந்த நாட்டிலுள்ள ஏடுகளைப் பார்த்தால் அந்தந்த நாட்டு மக்களைப்பற்றி, நாகரீகத்தைப்பற்றி, வாழ்க்கை வளங் களைப்பற்றிப் பாங்குற, எளிதாக, ஏமாற மார்க்கமின்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். ஆம்! நாட்டிலுள்ள ஏடுகள், நாட்டிலுள்ளதை, நடப்பதை—மக்கள் வாழ்க்கை முறைகளை வகுத்துக் காட்டும் கண்ணாடியாகக் காட்சியளிக்க வேண்டும்; நாட்டு மக்களை மேன்மையுறச் செய்யும் தூண்டா விளக்காய்த் துலங்குதல் வேண்டும்; நாட்டிற்கும் ஏட்டிற்கும் தொடர்பிருக்க வேண்டும்; நாட்டோரை நடு நிலை பிறழா நல்ல நீதிபதிகளாக்க உறுதுணை செய்யும் ஊன்றுகோலாக உதவ வேண்டும்.

நான், இன்று நாட்டோடு, நாட்டு மக்களோடு நீங்காத் தொடர்பு கொண்டு பழகி வருகிறேன். நீங்களும் உங்கள் கல்வி முடிந்தவுடன் அத்தகைய தொடர்பு கொள் வீர்களென்னும் துணிபுடையோன். நான் மக்களுடைய அன்றாட வாழ்வை அலசிப் பார்க்கிறேன்; அறிவோடு ஆராய்ந்து பார்க்கிறேன். எனவே, நாட்டாரோடு

நாட்டாரும் நாட்டு மக்களை அறிந்த நானும், மாணவத் தோழர்களாகிய நீங்களும் சந்தித்து அளவளாவுதல் முற்றும் முறையே.

நான் இன்று நாட்டில் நடமாடிவரும் நானுவித ஏடுகளில் சிலவற்றைப் படித்திருக்கிறேன்; சிலவற்றைப் பார்த்திருக்கிறேன்; பலவற்றைப்பற்றி பண்பாளர்கள் பன்னிப் பன்னிப் புகழ்வதைப் பலமுறை கேட்டிருக்கிறேன். அத்தகைய வித்தகரால் போற்றப் பெறும் பண்டைய நூல்களில் ஒன்று நந்தம் 'தொல்காப்பியம்'. தொல்காப்பியம் தொன்மை நூலென்றும், தமிழரின் தனித் தமிழ் நூல் என்றும், விழுமிய கருத்துக்களை இழுமென்மொழியால் எடுத்தியம்பும் ஆற்றல் வாய்ந்த அரும்பெரும் பொக்கிஷம் என்றும், தமிழனின் தனி நாகரிகத்தை நாட்டோர் நன்கு உணர நயமாக நவிலும் நிகண்டெனவும், ஒப்பிலாப் பண்டைத் தமிழ் இலக்கணமென்றும் நான் அறிவேன். எப்படி? படித்துப் பாங்குற சுவைத்ததினுலா? அல்ல! படித்த பண்டிதர்கள், பேராசிரியர்கள் முதலியோர்கள் புகழுரையைக் கேட்டதினுல்தான் நான் கூறுகிறேன். சிறிதும் கூச்சமின்றி கூறுகிறேன் தொல்காப்பியம் படித்ததில்லை என்று. அது பற்றி நான் சிறிதும் வெட்கப்படவில்லை; வெட்கப்படக் காரணமும் இல்லை. ஏன்? தமிழே தம் தனம் எனக் கருதும் தமிழ்ப் பண்டிதர்களிலேயே பலர் தொல்காப்பியத்தைப் பழுதற நன்குணர்ந்தோர் இல்லை. ஏன் கிடையாது? தொல்காப்பியம் பழம்பெரும் நூலென்றும், இன்னும் பலவிதமாகப் புகழப்படுகிறதேயன்றி அது சிற்றறிவுடைய மக்களுள்கூடப் புரிந்து கொள்ளக் கூடிய விதமாய், நாட்டிலே மக்களுடைய மார்க்கெட்டிலே வந்து நடமாடவில்லை; நடமாடும்படி செய்யப் பெரும் புலவர்கள் விடுவதில்லை; அதற்காகப் பெருமுயற்சி எடுப்பதில்லை.

வாழ்க்கையில் நாம் சிறந்த பொருள்களை, வாழ்க்கைக்கு வளமான பொருள்களைச் சிறிதும் வாட்டமின்றிப் பெற முடியாது; ஓயாத உழைப்பும், சலியாத முயற்சியும் வேண்டும். சான்ருக முத்துக்களைப் பெற வேண்டுமானுல் கடலின் கொந்தளிப்பையும், சுறுமீன்களின் உபத்திரவத்தையும் அகற்றி ஆண்மையோடு முத்துக் குளிக்க வேண்டும். கண்களைப் பறிக்கும் பற்பலவித ஆபரணங்கள் செய்யத் தங்கம் வேண்டுமானுல், பாறையின் வெடிப்பிற்கும் மணலின் சரிவிற்கும் துணிந்த பல்லாயிரவர், பொற்சுரங்கங்களிலே அல்லும் பகலும் அனவரதமும் பாடுபடவேண்டியிருக்கிறது. அது போலவேதான் ஏடுகளிலும் இலக்கியங்களில் சிறந்தவற்றை, மனிதனை மனிதத்தன்மையுள்ளவனுக விளங்கத் தூண்டும் இலக்கியங்களை, அறிவை அகலப் பரப்பும் அந்தாதிகளை அனைவருக்கும் பயன்படக்கூடிய நிலையில் வெளிப்படுத்த வேண்டும். இப்பேருழைப்பை மேற்கொள்கையில் பற்பல இடுக்கண்களோடு இடறி மோத நேரிடும். பலரின் பரிதாபத்திற்கும் கேலிக்கும் கண்டனத்திற்கும் உள்ளாக நேரிடும். எடுத்த காரியத்தை எதிர்ப்புக்கும் ஏளனத்திற்கும் அஞ்சாமல் புகழ்ச்சிக்கும் பூசலுக்கும் மண்டியிடாமல் தொடுத்து முடிப்பர். அது தான் முறை.

நந்தமிழ் நாட்டில் தமிழ் மறையெனப் பல்லோராலும் போற்றப்படும் திருக்குறளைத் திருத்தமாக அறிந்தவர் மிகமிகச் சிலர். அத்தகையோரை விரல்விட்டு எண்ணிவிடலாம். பலர் அதன் உள்ளுறை என்னவென்பதையும் அறியார். பண்டிதர்களுட் பலர் அதனைப் பெருமைக்காகப் படிக்கின்ருர்களே ஒழியக் கருத்தூன்றிக் கற்பவர் மிகச் சிலரே. நானும் திருக்குறள் அறிவேன் என்று பேசிப் பெருமிதம் அடைவோர் பலராவர். அவர்தம் நிலை கண்டு இரங்கார் உளரோ!

இலக்கிய ஏடுகள் மக்களின் மார்க்கெட்டிலே மலிந்து நடமாடவேண்டுமானுல், இலக்கியம் கோபுர உச்சியி லிருந்து குப்பை மேட்டுக்கு வரத் தயாராக இருக்க வேண்டும். கற்ருேரும் மற்ருேரும், பண்டிதரும் பாமரரும், பணக்காரனும் ஏழையும் படித்துணரும் பாங்கிலே, எளிய நடையிலே இயற்கைக் கருத்தைக் கவின்பெற எடுத் துரைக்கும் ஏடுகள் எழுதப்பெறல் வேண்டும். ஆனுல் நம் நாட்டு இலக்கிய கர்த்தாக்கள் செய்துள்ள இலக்கிய சேவை இதற்கு நேர்மாருனது. பண்டிதரும் பகுத்தறிய முடியாத பண்புடனே நம் நாட்டுப் பண்டிதர்கள் நூல் எழுதியிருக் கின்றனர். சிற்றறிவினர் சிந்திக்கவும் கூடாத சிறப்புற்று விளங்குகின்றன இந்நாட்டு ஏடுகள்.

இன்றைய இலக்கியங்களிலே சிலவற்றின் மூலத்தை விட அவற்றின் விரிவுரைகளும் விருத்தியுரைகளும் பன் மடங்கு கடினமாகத் திகழ்கின்றன. மற்றும் இக்காலப் பண்டிதர்கள் தம் நேரத்தை, "இந்த உரை நல்லது" 'இது இன்ஞரால் சொல்லப்படுவதால் சிறப்புடைத்து; அது அன்ஞரால் சொல்லப்பட்டமையால் ஒவ்வாதது' என இத்தகை போராட்டங்களிலே கழிக்கின்றனர். சிறிதும் நாட்டைப்பற்றி நாட்டமின்றி கடமையைப்பற்றிய கருத்தின்றி இத்தமிழ்ப் பண்டிதர்கள் ஒருவர்மீதொருவர் பொருமையும் பொச்சரிப்பும் பூண்டு, ஒருவரையொருவர் தாக்கிப் பேசி எழுதும் இழிகுணத்தையே மேற்கொண் டுள்ளனர். எனது மதிப்பிற்குரிய தலைவர் பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் கூறுவார், "இந்தத் தமிழ்ப் பண்டிதர்கள் ஒரு பன்னிருவர் சேர்ந்து ஒரு சிறு மாநாடு நடத்திஞலும், அருகே ஒரு ஸ்பெஷல் போலீஸ் படை வேண்டும், அவர்களிடை நிகழும் சண்டை சச்சரவைத் தீர்க்க" என்று. அது கேட்டு நான் மனம் மிக மருளுவ துண்டு.

காஞ்சியிலே பொங்கல் விழாக் கொண்டாடினர். நானும் போயிருந்தேன். புலவர் மே. வீ. வேணு கோபாலன் தலைமை தாங்கினார். நம் மதிப்பிற்குரிய நண்பர் புலவர் மா. இராஜமாணிக்கம் சொற்பொழிவாற்றுங்கால் ஓர் ஐய வினா தரப்பட்டது. கூட்டத்திலுள்ள சிலரால், "சிவம்" என்னும் சொல் வடமொழியா? அன்றித் தமிழா? என்பதே அவ்வைய வினா. அதற்குத் திரு. இராசமாணிக்கம் அவர்கள் 'சிவம்' என்பது தனித் தமிழ்ச் சொல்தான் என்றார். தலைவர் திரு. வேணுகோபாலன் அவர்கள் தம் முடிவுரையில் சிவம் என்னும் சொல் தமிழன்று; அது வடமொழிதான் என்று கூறினார். உடனே இராசமாணிக்கனார் எழுந்து வேணுகோபாலரைப் பார்த்து "அது தமிழ்ச் சொல்தானே! மற்றும் அது மறைமலையடிகள் கருத்தாயிற்றே" என நவில, வேணுகோபாலர் சபையோரைப் பார்த்து "அந்த மறைமலையடிகள் கருத்திருக்கட்டும்; இந்த வேணுகோபாலன் சொல்லுகிறேன் 'சிவம்' என்னும் சொல் வடமொழிதான் என்று" எனக் கூறி முடித்தார். இவ்விதம் வழக்காடும் விதத்தை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டு பண்டிதர்கள் மீளாக் குழப்பத்தில் திளைக்கின்றனர் அவர்களின் பெருமையெல்லாம், பன்னூர் பாண்டித்யமெல்லாம் மற்றவர்களின் நூல்களில் குற்றங் குறை காண்பதில்தான் உளதெனா உள்ளத்தில் உறுதி கொண்டுள்ளனர். மற்றொருவர் சொல்லில், நூலில், காவியத்தில் குறை காணுவிடில் தம் திறமை முற்றும் முதிர்ந்ததல்ல என்ற மூட நம்பிக்கையை மூலதனமாகக் கொண்டிருக்கின்றனர். என்னே இவர்தம் அறிவும் ஆற்றலும், மதிப்பும் பண்பும் இருக்குமாறு?

மற்றும், ஒருவர் எழுதும் ஏட்டிற்கு மற்றொருவர் மறுப்பும், அம்மறுப்பிற்கு மறுப்பாரும் பிறிதொரு ஏடு எழுதுவதும் இந்நாட்டின் அன்றாட நிகழ்ச்சிகளாய் நீடிக்கின்றன. சான்றாக இன்று தலைமை தாங்கும்

அறிஞர் ஒரு நல்ல ஏட்டை நாட்டிற்கு நல்கினர் என நினைமின். மற்றும் அதில் யாதொரு குற்றம் குறைகளுமில்லை யெனவும் சொல்மின். அதிலே சொற் செறிவும் பொருட் செறிவும் பொருந்தியிருக்கலாம்; இலக்கியாசமும் காவியக் குழைவும் எதுகை மோனைகளின் அமைப்பும் சரிவர அமைக்கப்பட்டிருக்கலாம். கருத்துப் பிழை கடுகத்தனையும் காணுதிருக்கலாம்; என்ருலும் புலவர் எவரையேனும் அதுபற்றி அபிப்பிராயம் கேட்டால் அவர் அது முற்றும் நல்ல நூல் என்று தீர்ப்புக் கூறுகிருர். குறையேதேனும் கண்டால் அன்ருே அவர்தம் அறிவுடைமைக்குப் பூஷணம்; புலமைக்கு அணிகலன்; ஆராய்ச்சிக்கு எடுத்துக்காட்டு? எனவே, அவர், "இந்த நூலாசிரியர் செய்ததெல்லாம் சரிதான். ஆனுலும் நூல் முற்றிலும் அவருடைய சொந்தமன்று; முற்றும் இரவல்—அதில் நூற்றுக்கு இருபது பாகம் திருக்குறளையும், இருபது பாகம் சிலப்பதிகாரத்தையும், 20 பாகம் சங்க நூற்களையும் பத்து பாகம் மணிமேகலையையும் இவ்வண்ணமாக ஒரு நூலிலிருந்து மாணிக்கத்தையும் பிறிதொரு நூலிலிருந்து வைரத்தையும் பொறுக்கி எடுத்துக் கோத்திருக்கிருர்" என்று அவர்பால் குற்றங் காண்பர். இதுவே தம் கடன் எனப் பணியாற்றும் புலவர் பெருமக்களை என்னென்று இயம்புவது?

இலக்கியப் பண்டிதர்களும் பண்டித மணிகளும் பாவலர்களும் மற்றுமுள்ள கலைஞானிகளும் கலாரக்ஷகர்களும் நாட்டைப்பற்றி, நாட்டிலே வதியும், தமிழ் நாட்டிலே வாழும் நாலரைக் கோடி மக்களைப்பற்றிக் கவலையுருர்; எண்ணியும் பாரார்; எவர் சொல்லையும் கேளார்; நாட்டிற்கும் ஏட்டிற்கும் தொடர்பு உண்டா? இல்லையா? என்று தம் கண்கொண்டு பாரார். ஆனல், "எல்லாமறிவோம் நாம்" என இறுமாந்து இன்புறுவர். நாட்டில் நடமாடும் ஏடுகளின் வழி, அவை ஊட்டும்—

உணர்ச்சிகளூடே, அவை ஏற்றும் எண்ணங்களின் ஏவற்படிதான் நாட்டு மக்கள் செயலாற்றுவர் என்பது இவர்தம் சிந்தனைச் சுடரிலே சிறிதும் தோன்றுவதில்லை. நாட்டின் நிலைக்கேற்ற நிகண்டுகள் நிச்சயம் தேவை — என்பதை இவர்கள் நினைத்துப் பார்த்ததும் இல்லை. நாட்டு ஏடுகள் எடுத்தியம்புவது என்ன? நாட்டிலே, நகரிலே, வீட்டிலே நடப்பது என்ன என்பதை இவர்கள் உணர்கின் றூர்களில்லை.

பழையவற்றிற்கு விளக்கம் கூறுதல், விருத்தியுரை கூறுதலன்றி, இந்தக் காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்ற முறையிலே நடையிலே வேறு பல நூல்கள் செய்ய இக் காலப் புலவர்களால் முடியாதா? முடியும். ஆனால் அவர்கள் பழையனவற்றைப் புது மெருகிட்டுப் பார்த்துப் பார்த்துப் புளகாங்கிதம் அடைவதே தம் செயற்கரும் செயலெனக் கருதுகின்றனர். மக்கள் சிந்தனையைத் தூண்டும் நூல்கள் இயற்றுவதற்கு, மக்கள் வீரம் அடைவதற்கு, நீதியை நடு நின்று நோக்குவதற்கு, சாதி பேத சமயச் சண்டையை ஒழிப்பதற்கு, பொருளாதார மாறுபாட்டை மடிப்பதற்கு, புத்துலகம் சமைப்பதற்கு, கயமைத்தனமான கண்மூடிக் கபோதிப் பழக்கவழக்கங்களை மதத்தின் பேரால், சமயத்தின் பேரால், சாஸ்திரத்தின் பேரால், பழமையின் பேரால் பின்பற்றி, வறுமையில் — மடமையில் கண்மூடித்தனத்தில் மக்கள் மருண்டு உழலும் மாயாமார்க்கத்தை வேரறுப்பதற்கு அவசியமானவற்றை அணைத்து, அல்லாதவற்றை யகற்றி, எதையும் பகுத் துணர்ந்து பார்க்க வழிகோலும் ஏடுகள் இயற்றினார்களா? இயற்றுகின்றார்களா? இக்கால இலக்கியக் கர்த்தாக்கள் இனியேனும் இயற்றுவார்களா? நாட்டிற்கும் ஏட்டிற்கும் தொடர்பில்லா வகையிலே, நாட்டின் இனத்திற்கு இம்மி யும் பயன்படாக் காவியங்கள் நமக்கேன்? ஏட்டில் எடுத்தியம்புவது ஒன்றாயும் எண்ணத்திலே வேறாயும் அன்றாட வாழ்க்கையில் நாட்டில் நடப்பது பிறிதொன்

ரூயும் உள்ள ஏடுகள் அமைக்கப்படும்வரை இனம் எழுச்சியுறுமா? மக்களிடையேயுள்ள மடமைத்தனம் மறையுமா? ஏட்டின் மூலம் நாட்டின் நிலை அறியலாம் மேனாடுகளிலே. இது சர்வ சாதாரணம்; அவ்விதம் நாட்டின் நிலை நவிலா ஏடு மாளட்டும். இலக்கியம் இருக்கட்டும்; கலை கலையட்டும். நமக்கு வேண்டுவது ஏட்டைப் புரட்டினால் நாடு, நாட்டின் மக்கள், மக்கள் வாழ்க்கை, அவர்தம் வாழ்க்கை வளம், நாகரீகம் இன்ன பிற யாவும் தெள்ளிதில் விளங்குதல் வேண்டும்; அது ஏட்டோடு நிற்றல் கூடாது, நடைமுறையில் நடப்பதையே நவிலும் நூலாதல் வேண்டும்.

ஒரு காலத்திய ஏடுகள் பிறிதொரு காலத்தின் நிலைக்கும், கருத்திற்கும் பொருந்தாவெனின் அவை மாற்றப்பட வேண்டும். அந்தந்த காலத்திற்கும் கருத்திற்கும் ஒத்த ஏடுகள் உண்டாக்கப்பட வேண்டும். மக்கள் உள்ளத்தில் உண்மையை உற்றவாறு ஊட்டும் ஏடுகள்தான் தேவை. மடமையை மடிய வைக்கும் வழி கோலும், வழி காட்டும் வளம் பொருந்திய காவியங்கள், கதைகள் தேவை. அங்ஙனமில்லாத ஏடுகள் நமக்கு வேண்டாம். மடமைக்கு வித்திடும் மாண்புள்ள மறைகள் வேண்டாம். இலக்கியத்தால்தான் நாடு முன்னேற முடியுமா? சான்றாக, துருக்கியும், ஆஸ்திரேலியாவும் பண்டைய இலக்கியப் பெருமை வாய்ந்த நாடுகள் அல்லவே! மக்கள் அங்கு மாக்களாகி விட்டனரா — இலக்கியமில்லாத காரணத்தால்? கருத்துக்கினிப்பூட்டும் காவியங்களோடு காலத்திற்கேற்ற கதைகளும் நாளடைவில் தோன்றத்தான் செய்யும். நாட்டிற்கும் ஏட்டிற்கும் தொடர்புள்ள நாடுகள் என்றும் நலியா. நாட்டிலே சிறந்த ஏடுகள் எல்லையற்றவை இருப்பினும் அந்நாட்டிற்கும் அவ்வேடுகட்கும் சிறிதும் சம்பந்தமின்றிச் சதுர் ஆடிக்கொண்டிருந்தால் அந்நாடு நாளடைவில் நசித்துப் போகும்; கலை நாகரீகம் யாவும் மறைந்தொழியும்.

சான்ருக, இன்னும் பழம்பெரும் இலக்கியங்களைப் பெற்றுள்ள கிரீஸ், சைஞ தேசங்களைப் பாருங்கள். அந் நாடுகளிலேயுள்ள ஏடுகள் மிகச் சிறந்தவை. தத்துவத்திலே தரணி முழுவதும் ஆள்பவை. எனினும் அந்நாடுகள் சிறப்பற்றுச் சீர்கேடுற்றிருப்பதேன்? இலக்கியமெல்லாம் இனத்தை மறந்ததுதான் காரணம்; ஏடுகள் எல்லாம் நாட்டின் நிலையை எண்ணுத ஏமாளித்தனத்திஞல்தான் என்ருல் அது மிகையாகாது.

நாடு மேன்மையுறுவதும் தாழ்வுறுவதும் ஏட்டிற்கும் நாட்டிற்கும் உள்ள தொடர்பைப் பொறுத்துத்தானிருக்கிறது. நாட்டிலே நலிந்தோர் மிகுதியானகாலத்து, ஏட்டில் அவர்தம் வறுமைக்குக் காரணம் கூருது, இழிவுக்கு மருந்து இயற்ருது, பூங்காவையும் கோயிலையும், இளங்காதலரையும் காதல் நெறியையும், அரசரையும் அந்த உலகத்திலே (தேவலோகத்திலே) அனுபவிக்கப்போகும் இன்பத்தையும் பற்றி இணையிலாக் காவியங்கள் எண்ணிறந்தன இயற்றப்படுமேல் அவ்விலக்கியங்களால் எவர்க்கும் என்ன பயன் விளையும்? வறுமையால் வாடும் மக்கள் அவற்றைப் படித்தால் அவர்தம் வாட்டம் வாடுமா அன்றி வளருமா? என்று சிந்தியுங்கள் தோழர்களே!

நம் நாட்டு இலக்கியங்களிலே காண்பது ஒன்று; நாட்டிலே நடப்பது பிறிதொன்று. நான் ஊர் சுற்றிச் சுற்றி களைப்பால் கால்வாய் ஓரங்களில் களைப்பாறும் போதும் இரயிலிலே பிரயாணம் செய்யும்போதும் மற்றும் பலப்பல காலங்களிலும் சிந்தித்திருக்கின்றேன்; சிந்தித்து வருகின்றேன்; பல நாட்கள் தூக்கம் வராமலே துன்பப்பட்டும் இருக்கின்றேன். இந்த நாட்டு ஏடுகளில் காணும் கவின்பெறும் காட்சிகளை நாட்டிலே ஏன் காண முடியவில்லையே என்று.

நான் நம் நாட்டு ஏடுகளிலே படித்திருக்கிறேன், நம் நாடு நன்செய்யாலும் புன்செய்யாலும் நாற்புறமும் சூழப்பட்டதென்று; நாடெங்கும் செந்நெல்லும் செங் கரும்பும் மற்றும் பல விளைபொருள்களும் மலிந்துகிடக்கு மென்று. ஆனால் ஊரிலே, நாட்டிலே, நகரிலே நான் காணுவது நேர்மாறான காட்சிகள், படிப்பது பசிப்பிணி யறியா மக்கள், பார்ப்பது பசியால் மிக நொந்து மெலிந்து வாடி வதங்கும் பல்லாயிரக்கணக்கான பாட்டாளிகள். ஏட்டில் காண்பது காதல் கேட்பது யாவும் உண்ண உணவின்றி — இருக்க இடமின்றி — உடுக்க உடையின்றி ஆயிரக் கணக்கான மக்கள் பரதவிக்கும் பரிதாப நிலைமை. நீர்வளம், நிலவளம் மிகுந்த செல்வமுடையதாய்ச் சீர் பெற்றிலங்கும் நாடு என ஏட்டிலே நவிலப்படும் நாட்டிலே ஏன் இந்தத் தோற்றங்கள்; எண்ண முடியாத ஏழை மக்கள்! பசிக்கு உணவில்லாத பச்சிளங் குழந்தைகள் என்று கேட்கிறேன்.

ஏன் பல இலட்சக்கணக்கானவர்கள் சிங்கப்பூர், மலாய், நெட்டால் முதலிய நாடுகட்குத் தத்தம் பெண்டு பிள்ளைகளோடு தன்னந் தனியாகவும் தாம் பிறந்த நாட்டை விட்டு அல்லற்பட்டு அரை வயிற்றுக்காவது வழி கிடைக்காதா என்று வாட்டத்தோடு போகின்றனர்? இறைவனைப் பாடும் இலக்கியக் கர்த்தாக்கள், பகலவனைப் பாடும் பண்டிதர்கள், காதலைப் பாடும் கலைவாணர்கள், இயற்கை எழிலையும் நட்பின் மேன்மையையும் நாடறியச் செய்யும் நாவலர்கள், பண்டையப் பெருமையைப் பாடும் பாவலர்கள், பரமன் திருவிளையாடலைத் திருத்தமாகப் பதிப்பிக்கும் திருக்கூட்டத்தார்கள், அய்யன் உரை அந் தாதி பாடி எல்லாம் வல்ல எம்பெருமானை ஏத்தியேத்தித் தொழும் பணியிலே ஈடுபட்டு "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற அடியை இழைத்து இழைத்துப் பாடிச் சுவைக்கும் பக்திமான்கள் எவராவது, இந்த

நாட்டிலே செல்வம் கொழுத்திருக்க, எம்பெருமானுக்கு எல்லையற்ற திருக்கோயில்கள் எழுப்பப்பட்டு அன்றாடம் ஆறுகால பூசை தவறாது நடத்துவர். அதற்கென மலைபோல் செல்வம் முடங்கிக் கிடக்க, இத்தனை குடும்பங்கள் மண்ணோடு மண்ணாய்ப் பசியால் வாடி மடிகின்றனவே என்பதை நினைத்ததுண்டா? பாடிப் பாரோரின் பகுத்தறிவுக்குச் சிந்தனை தந்ததுண்டா? வறுமையை நீக்க வழிகோலியதுண்டா?

மக்கள் பக்குவமடைய, மனோ உறுதி கொண்டு வாழ்க்கையில் வழுக்காது விழிப்போடு செல்ல சமுதாயத் தொண்டு செய்யும் ஏடுகள் தேவையாகும். இந்தநேரத்திலே இதிகாசப் புராணங்களைப் பாடிக்கொண்டு, கம்பன் காவிய ரசனையில் கருத்தைச் செலுத்திக் கொண்டு, மதத்திற்கு மாசுவரா வகையிலே, ஆண்டவன் லீலையை அப்பழுக்கின்றி உள்ளது உள்ளபடி நவிலும் நல்லெண்ணம் ஒன்றைமட்டும் உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு, காலத்திற்கும், கருத்திற்கும், நிலைமைக்கும், சுற்று சூழ்நிலைக்கும் ஏற்ப ஏடுகளை உண்டாக்காமல், மகிமையில் கண்மூடி மோகங் கொண்டு—இனத்தை இழிவு செய்யும் இலக்கிய ஏடுகளை ஏத்தி ஏத்தித் தொழும் இலக்கிய வீரர்களே! உங்கள் கடமை இதுவா? இது முறையா? அடுக்குமா? என்றும் நிலைக்குமா இந்த நீதி? நீங்கள் சிந்தியுங்கள், நாட்டிற்குத் தொடர்பில்லாவிட்டால் நாட்டு மக்களுக்கு வழிகாட்டும் வகை என்னவென்று? இனநலனைக் கருதா இலக்கியப் பணியால் இனம் இன்புறுமாவென்று? இனத்திற்கு நலன் பயக்கும் ஏடுகளை இயற்றுதலே நம் கடமை. அதுவே நம் வேலை. அதுவே மனித சமுதாயத்தொண்டு. முற்காலத்தில் தமிழன் தன்னலங் கருதாது உழைத்தான் தரணியிலுள்ளோரின் நலனுக்காக என்பர். சூதும் வாதும் விருப்பும் வெறுப்பும் அறியான் தமிழன்; மானமே பெரிதென மதித்தான் தமிழன்; கப்பலோட்டினான் தமிழன்;

கடாரம் வென்றான் தமிழன் என்று புலவர் பெருமக்கள் இஞ்ஞான்று பறை சாற்றுகின்றனர். இவ்வரிய உண்மைகளுக்கு நந்தம் பண்டை இலக்கியங்களிலே தக்க சான்றுகள் உள. அத்தகைய இலக்கியங்கள் இன்று மக்களின் கடை வீதியிலே மலியாமல், ஏதோ சிற்சில புராண இதிகாசங்களும் ஆண்டவன் திருவிளையாடல்களைப் பாடும் பாசுரங்களும் மட்டும் மலிந்திருக்கக் காரணம் என்ன? ஏன் இந்த நிலை?

நமது பண்டிதர்கள் இலக்கிய ஏடுகளை மதம் எனும் போர்வையால் மறைத்துள்ளார்கள். இந்த நாட்டு ஏடுகளால் நாட்டு மக்கள் பயனுற வேண்டுமாயின், இந்த நாட்டு மக்கள் நற்பண்புள்ள ஏடுகளைப் பெற்று வாழ்வில் ஏற்றமுற வேண்டுமானால், இந்துமதப் போர்வையைக் கிழித்தெறிய வேண்டும். இந்துமதமெனும் மாசு இலக்கியங்களைவிட்டு அகலா முன்னம் நமக்கு நன்மைபயக்கும் நல்ல இலக்கியங்களோ ஏடுகளோ இல்லாமற் போகும். இலக்கியமின்றி இயங்க முடியாத மதம் வேண்டாம் நமக்கு. மதமன்றித் திகழவொண்ணாத இலக்கியமும் வேண்டாம் நமக்கு. இந்து மதப் போர்வையைப் போர்த்துப் போர்த்து மக்களை மடையர்களாக்கி விடுகின்றன, இந்நாட்டு ஏடுகள். மக்கள் இந்நாட்டு ஏடுகளைப் படித்துப் படித்து வாழ்வைப் பெரிதென எண்ணாது, மகேஸ்வரன் முன் மண்டியிட்டுப் பாமாலை பாடினால் மட்டும் போதும், மண்டபங்கள் கட்டினால் மட்டும் போதும், திருவிழாக்கள் தினந்தினம் நடத்தினால்தான் நாட்டுக்கு நன்மை என்று எண்ணுகின்றனர் — நம்புகின்றனர். தம் அறிவு, ஆக்கம், சொல், செயல், சிந்தனை, ஊக்கம், உறுதி, உழைப்பு, கல்வி, கேள்வி முதலியவற்றால் முற்போக்கடைய முற்படாமல் அவைகளை வீணே, ஆண்டவனின் அற்புத லீலா விநோதங்களைப் படிப்பதிலும் பாடுவதிலும் விழாக் கொண்டாடுவதிலும் செலவிடுகின்றனர்; ஸ்தலப்

புராணங்களைப் படித்துப் படித்து ஸ்தோத்திரத்திலேயே மூழ்கிக் கிடக்கின்றனர்.

இந்த நாட்டிலே நம்மவர் வீடு கட்டுவர்; அதிலே பலப்பல அறைகளும் அமைப்பர், மாட்டுக் கொட்டகை ஒருபால், பொக்கிஷ அறை ஒருபால், சமையல் அறை மற்ருெருபால், பெண்டிர் வீட்டு விலக்காஞல் வதிய மற்ருெருபால் அறை அமைப்பர் வீட்டினிலே. மற்றெதை மறக்கினும் ஆண்டவனுக்குப் பூஜை செய்ய அறை அமைக்க மட்டும் மறவார்; ஆனல், அறிவூட்டும் ஏடுகள் நிறைந்த படிப்பறையைப்பற்றி பகற்கனவும் காணர். படிப்பறை மிகவும் முக்கியமானது; அவசியமானது; அலட்சியப்படுத்தக்கூடியதன்று. ஆயினும் அது அவர் தம் சிந்தனையில் தோன்ருது. இவையாவும் மதப் பைத்தியத்தின் விளைவுதான் எனில் மிகையாகாது. வீட்டிலே ஏடுகள் என வைத்திருக்கும் ஒருசிலர் தமிழ்ப் பண்டிதர்களே. அவையும் அவர்தம் சொந்தமல்ல. கலாசாலை நூல் நிலையத்திலிருந்து இரவலாகப் பெற்றவை தான். அவை அடுக்காக அவர்தம் மனையிலே மாண்புற விளங்கும். மதம் கலவாத நூல்கள் யாதொன்றும் அவர் தம் மனையில் காணக் கிடைக்கா. நூல்களின் அருமை பெருமை தெரியாப் பள்ளி நூல் நிலையங்களிலே அவை கிடப்பதைவிட நமது இல்லத்தில் இனிது வீற்றிருக்கட்டுமே என்று அவற்றைப் பூரிப்போடு இப்பண்டிதர்கள் போற்றி வைத்திருப்பர்.

இந்துமத நூல்கள் கடவுளரைப்பற்றிக் கூறும் கருத்துக்கள் முன்பின் முரண்பாடு உடையவைகளாக இருக்கின்றனவே; மூடனும் கண்டு ஏளனம் செய்யும் ஏமாற்றங்கள் நிறைந்துள்ளனவே; நீக்ரோவும்கூடத் தான் கடவுளுக்கு இத்தகைய அநாகரிக, அற்புத, ஆபாச லீலைகள் வேண்டாம் என்று வெறுத்துத் தள்ளும் அளவுக்கு ஆபாசங்கள் — இங்குப் பெருகியுள்ளனவே; ஆசார சீலமென்னும் கடவுள் திரு அவதார லீலை யென்றும்

கூறிக் கடவுளரைக் கயமைக் குணத்திற்கு உட்படுத்தியுள்ளனவே, இந்த ஏடுகள் வேண்டுமா? அவசியமா? என்று எண்ணுங்கள்; சிந்தியுங்கள்; சீர்தூக்கிப் பாருங்கள் தோழர்களே!

முழுமுதற் கடவுள், எம்பெருமான் கயிலைவாழ் கருணாமூர்த்தி; பார்வதி சமேதரன், அம்மையப்பன், அர்த்த நாரீஸ்வரன் அருள் திருவிளையாடல்களைக் கேளுங்கள்! அவருக்கு அன்பான பக்தன் இயற்பகை என்பார் சிவனடியார்கள் கேட்டதை எல்லாம் இல்லையென்னது அவர் கொடுத்து வந்தாராம். இயற்பகை ஈசன்பால் மாருக் காதல் கொண்டு அவனருளையே சிந்தித்து வாழ்த்துவார் நின்ற காலையில் சிவனார் புறப்பட்டார். எங்கு? தமதன்பன், இரக்கும் சிவ நேசர்க்கு இல்லையென்னதீயும் இயற்பகையின் பக்தியைப் பரிசோதிக்க. சிவனார் இயற்பகையிடம் சென்ருர். சென்று "இல்லையென்னதீயும் இயற்பகை நீதானே?" என்று கேட்டார். அதற்குத் தலை வணங்கிய இயற்பகையை நோக்கி, "ஆயின் உம் இல்லக் கிழத்தியை எம்மோடு அனுப்புக" என்ருர். இயற்பகையும் மிக மகிழ்ந்து தம் மனையாளை அவருடன் அனுப்பினர். இது முறையன்றெனத் தடுத்த முதியோரையும், "அடாது" என அறிவுறுத்திய அறிவாளரையும் 'கூடாது' எனக் கூறிய சுற்றத்தாரையும் கொன்று குவித்து, இயற்பகையார் தம் மனையாளுடன் சிவனார் சிறிதும் தடையின்றிச் செல்லுமாறு செய்தார். பின்னர், சிவனார் தம் திருவுருவங் காண்பித்து அவரை ஆட்கொண்டாராம். என்னே சிவனாரின் அன்பு!

தோழர்களே! உங்கள் சிந்தனைக்குச் சற்று வேலை கொடுங்கள். இயற்பகை மதத்தின்பால் தம் மதியை அடகு வைத்திருந்தமையால் தம் வாழ்க்கைத் துணைவியைக்கூட பிறனுடன் பிரியத்தோடு அனுப்பி வைக்கும்

நிலையை அடைந்தார். மனைவியை வேண்டிய சிவனார் தாம் நேரில் வந்து கேட்டனரா? இல்லை. பிராமண வடிவங் கொண்டு வந்தார். இதற்கும் பொருள் திரு. வி. க. நடையிலே கூற வேண்டுமானால் — காமாந்த காரங் கொண்டு கூடழிந்த தோற்றத்தோடு கூடிய பிராமணன் என்பதாகும். இத்தகைய பிராமணன் கேட்ட போது கூசாமல் — எண்ணாமல் — ஏதும் கேட்காமல் தம் மனையாளைத் தந்தார் இயற்பகையார். சிவனாருக்கும் வேறு வகைச் சோதனைகள் கிடைத்தில போலும் பக்தனைப் பரிசோதிக்க, காமாந்தகாரங் கொண்ட பிராமணனுடன் மனைவியை அவனை ஏதுங் கேட்காமல் அனுப்பி வைத்த பண்பு எதை விளக்குகின்றது? பெண்கள் ஆண்களுக்கு அடிமை என்பதையல்லவா? கணவன் பக்தியைத்தானே பரிசோதிக்க வந்தார் கடவுள்? தன்னை ஏன் பரிசோதிக்க வேண்டும்? தான் ஏன் கணவனை விட்டு அகல வேண்டும் என்ற கருத்து அவர்தம் மனைவியாருக்குத் தோன்றவில்லை!

சான்றாக, பாரதத்திலே ஐவருக்கும் தேவியான பாஞ்சாலியை எடுத்துக் கொள்வோம். அவளைப் பாண்டவர் சூதிலே தோற்றனர். வென்ற துரியோதனன் வீரத்துடன் தம்பிக்குக் கட்டளையிட்டான், திரௌபதியை சபைக்குக் கூட்டிவா வென்று. துர்ச்சாதனன் திரௌபதியை அழைத்தான். அவள் தான் வீட்டு விலக்கா யிருப்பதால் அரச சபைக்கு வரலாகாது என்றாள். துர்ச்சாதனன் அவள் தங்கள் அடிமையென்றும், தருமன் முதலானோர் அவளைத் தங்களிடம் சூதாட்டத்தில் பணைய மாகத் தோற்றமையால் அவள் தங்கள் சொற்படி நடக்க வேண்டுமென்றும் நவில்கின்றான். கணவனால் கண்யமாகப் பந்தயத்திலே தோற்கடிக்கப்பட்டதுதான்; கணவன் சொற்படி — கருத்துப்படி நடக்கக் கடமைப்பட்டவள் என்று அறிந்த பின்னரும், அவள் கேட்கிறாள்: 'பாண்டவர் என்னை முன் தோற்றனரா, அன்றித் தங்களைத் தோற்றபின்

என்னைத் தோற்றனரா?' என்று. தங்களைத் தோற்ற பின் தன்னைத் தோற்றனர் என்பதறிந்தவுடன், தாங்கள் அடிமையான பின் தன்னைப் பந்தயம் வைக்க அவர்கட்கு உரிமையில்லை; ஆகவே, தான் துரியோதனாதியர்களுக்கு அடிமையாக நியாயமில்லையே என்று தன் கருத்தைக் கூறினாள் திரௌபதை; அரசசபையில் முறையிட்டாள், பின்பு பலாத்காரமாக அவள் துகில் உரியப் பட்டபோது கண்ணன் அருளை வேண்ட, "சேலை அவிழ்த்த நேரத்திலே தட்டாது காட்சியளிக்கும்" தனது இயற்கைக் கேற்ப மாதவனும் மங்கை மானங்காத்தான் என்று கதை சொல்லப்படுகிறது. கடமையைக் கருத்தோடு சேர்த்து வாதிட்ட பாஞ்சாலியின் அளவுக்காவது, இயற்பகையாரின் இல்லக்கிழத்தி பிராமணரை நோக்கி, 'ஐயா! என் கணவர்தான் உமக்கடிமை; நானல்ல; அவருக்குத்தான் சோதனை; எனக்கல்ல," என்றாவது கூறியிருக்கக் கூடாதா?

இன்றேல் சதி அனுசூயைபோல் சற்றுத் தம் அறிவால் அன்பர் (கணவர்) செய்கையையும் ஆண்டவனின் வேண்டுகோளையும் இயற்பகையின் மனைவி அலசிப் பார்த்திருக்கலாகாதா என்று கேட்கிறேன். அனுசூயா பதிவிரதா சிரோன்மணி; இரும்புக் கடலையைச் சிற்றுண்டியாக்கித் தரும் பாங்குடைய பத்தினி; விருந்தினரை உபசரிக்கும் உத்தமி—அவர்தம் பெருமை ஏழுலகங்களிலும் எட்டிப் பரவியது. அனுசூயையின் பெருமை தமக்கு இழிவைத் தருகின்றது; அதனால் தம் சீரும் சிறப்பும் சிதைகின்றன என்று கருதினர் மும்மூர்த்திகளின் மனைவியர்; அழுக்காறு கொண்டனர். ஆகவே, தத்தம் துணைவரை ஏவி அனுசூயையின் பெருமையைக் குலைத்துச் சிறுமைப்படுத்தச் சொல்லினர். மூலக் கடவுளர் மூவரும் தத்தம் இல்லக் கிழத்திகளின் ஏவலைச் சிரமேற்கொண்டு சென்றனர், அனுசூயையின் வீட்டிற்கு. அனுசூயையின் கணவர் வெளியே சென்றிருக்கும்போது துறவிகள்போல மாற்றுருக்

கொண்ட மும்மூர்த்திகளும் மங்கை நல்லாளை நண்ணினர்; பிச்சை கேட்டனர். "தருவேன்" என்றாள் மங்கை. "சரி, எங்கள் இச்சைப்படி பிச்சை இடுவையோ?" என்றனர் மும்மூர்த்திகள். "ஆகா, அவ்விதமே உங்கள் இச்சைப்படி பிச்சையிடுவேன்" என்றாள் நங்கை, உடனே மூர்த்திகள் மூவரும் "அங்ஙனமாயின் நிர்வாணமாக நின்று நீ எமக்குப் பிச்சையிடுக!" என்றனர். வந்த விருந்தினரை உப சரித்தல் தம் கடமை; மேலும் அவர்கள் இச்சைப்படி பிச்சையிடுவதாகவும் உறுதி கூறியிருக்கின்றாள். எனினும் அனுசூயை அவர்மீது ஐயங்கொண்டாள். அவர்களை நோக்கி "நீங்கள் கேட்ட வண்ணம் செய்தல் முறை. ஆனால் அது நீதிக்கு முரண்பாடானது; அறிவுக்கு ஒவ்வாதது" என்று மறுத்தாள். உடனே கோபங் கொண்டனர் மும்மூர்த்திகளும். "எங்களை யார் என்று என்று நினைத்தாய்? நாங்கள் மும்மூர்த்திகள்; சொன்ன சொல்லை மீறினால் நாங்கள் சபிப்போம் உன்னை" என்று உறுமினார்கள். மும்மூர்த்திகள் வந்து கேட்கிறார்களே என்று அனுசூயை பயம் கொள்ளவில்லை; மதி மயங்கவும் இல்லை; "மும்மூர்த்திகள் நீங்களல்ல; மும்மூர்த்திகள் என்று நவின்று நாட்டை நாசம் செய்யவந்த வேடதாரி களே நீங்கள்; அல்லது மும்மூர்த்திகளேயாயினும் அறிவு மழுங்கி ஆராய்ச்சி மடிந்து நீங்கள் மற்றவராய் வந் திருத்தல் வேண்டும். இது கேட்கத் தகுதியற்றது என்ற பாகுபாடு அறியா மூடர்களே! உங்களை நம்பேன்" என்று கூறினாளாம். சொன்ன சொல் தவறாதிருக்க வேண்டு மல்லவா? பின்னர்த் தனது கற்பின் மகிமையால் அவர்களைக் குழந்தைகளாக்கிக் கொண்டு பிச்சையிட்டதாகக் கதை சொல்லுகிறது. அதன் உண்மை ஒரு புறமிருக்கட்டும். கடவுளே நேரே வந்து கேட்டபோதும் தரும நியாயம் எடுத்துச் சொல்லி வாதாடின அந்த அளவுக்காவது இயற் பகையாரின் மனையாள் கேட்டிருக்கலாம். மனைவியைத்

தாவென்னும் மாண்புமிக்க மகேஸ்வரனையும், "நிர்வாண மாய் பிச்சையிடு" என்று கேட்கும் நீதியற்ற கடவுளையும் பாடும் நிகண்டுகளா நமக்குத் தேவை?

இதே பரமசிவன், திருவிளையாடல் புராணத்திலே புரிந்துள்ள லீலையைக் காண்போம். தாய்ப் பன்றி இறந்து விட்டது. பன்றிக் குட்டிகள் பசியால் தவிக்கின்றன. கண்டார் முப்புரம் எரித்த பெருமான். உளமுருகினார்; உடனே தாம் பன்றியின் உருவம் தாங்கினார்; பன்றிக்குட்டிகளின் பசி தீர்த்தார்; அவற்றைச் சீராட்டிப் பேணி வளர்த்தார், பின்னர், அவற்றைப் பாண்டியனிடம் கொண்டு சென்று ஆண்டு பாண்டியன் அவையிலே வீற்றிருந்த மந்திரிகளை நீக்கி அவர்களுக்குப் பதிலாக இவைகளை அங்கு மந்திரிகளாக அமர்த்தினார். அதனுடன் விட்டாரா? அம்மந்திரிமார்களின் பத்தினிகளையும் அவைகளுக்குப் பத்தினிமார்களாக்குமாறு செய்தார் என்று திருவிளையாடல் புராணம் செப்புகின்றது. இது நாடறிந்த உண்மை. இது தகுமா? முறையா? அறிஞர் ஆற்றும் அறமா? ஆண்டவன் செய்யும் அற்புதமா? ஆபாச வேலையல்லவா இது? அக்கிரமல்லவா இது? மக்களை மடையராக்கும் வழியல்லவா இது? இதனைப் பாடும் ஏடும் வேண்டுமா நமக்கு? நவிலுங்கள், நாட்டின், எதிர்காலப் பெரியோர்களே!

கடவுளரின் கயமைத்தனத்தையும் கபோதிக் குணத்தையும் ஏடுகளினின்று எடுத்துக் காட்டப்புகின் அஃது ஓர் எல்லைக்குட்படாது நீண்டு செல்லும். மதம் கலந்த அநாகரீக, ஆபாச புராணங்கள் நிறைந்த கதைகளைப் பாடுதற்கே ஏடுகள் பயன்படுமானல் அறிவு என்றுவது நம் நாட்டில் உதிக்குமா? ஆண்மை பெருகுமா? ஆற்றல் அதிகரிக்குமா? வாழ்க்கையில் வளம் காண முடியுமா என்று கேட்கிறேன்.

இத்தகைய ஏடுகள் மதியை வெருட்டி, மக்கள் அறிவை மயக்கி, ஆண்டவன் அருளால் அனைத்தையும் அரைக் கணத்தில் பெறலாம் என்ற ஆசையைக் கிளப்பி, மக்கள் முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து மக்களை முழு மூடர் களாக்குகின்றன.

நமது தற்காலப் புலவர்கள் பண்டைத் தமிழ் மன்னர்கள் வீரத்தை விளக்கும் கவிதைகளை ஏன் பாடக் கூடாது? செங்குட்டுவனின் வடநாட்டு யாத்திரையையும், ஆரிய மன்னரான கனக விசயரைப் போரில் வென்ற வீரத்தையும் அவர்தம் முடியினிலே கண்ணகி சிலைக்குக் கல் தூக்கி வரச் செய்த பெருமையைப்பற்றி ஏன் ஒரு பரணி பாடக்கூடாது? ஏன் கடாரம் வென்ற தமிழரசர்களைப் பற்றி ஓர் காவியம் இயற்றக் கூடாது? பர்மா வென்ற பராந்தகனைப்பற்றி ஏன் ஓர் புகழ் மாலை இயற்றக் கூடாது? அறிவு பற்றியும், ஆராய்ச்சியின் மேன்மை பற்றியும், அன்றாட வாழ்க்கை வளம் பற்றியும் பலப்பல ஏடுகள் ஏன் எழுதக் கூடாது? இவர்களால் முடியாதா? முடிக்கும் ஆற்றல் இல்லையா? முடியும், ஆனால் முயற்சியில்லை — முயலுவது கிடையாது. பாட வேண்டு மென்றால் பரமன் திருவிளையாடல்களும், ஸ்தல மகிமைகளும்தான் கிடைக்கின்றனவா? அன்றாடம் கஞ்சிக்கு அலையும் தோழர்களைப்பற்றி உள்ளமுருகப் பாடிப் படிப்பவர் மனத்தில் இரக்கமுண்டு பண்ணலாமே! நாட்டிலே உள்ள ஒருசிலருக்கு மட்டும் பயன்பட்டு, பலருக்குப் பயன்படாமல் கோயில்களிலும், மடங் களிலும், ஜமீன்தார்களிடையேயும் முடங்கிக் கிடப்பதை ஊரறியச் செய்யலாகாதா? நாட்டிலே — ஆண்டி அரசன், ஏழை — பணக்காரன், பறையன் — பார்ப்பான் என்றும் மாறுபாடுகளின் இழிதன்மைகளை ஏடுகளின் மூலம் எடுத்தியம்பி மக்களிடையே மறுமலர்ச்சிக்கான கிளர்ச்சி உண்டு பண்ணக் கூடாதா?

"தமிழ் நாடு போனாலும் போகட்டும்; கம்ப ராமாயணமே வேண்டும்" என்று நாட்டுப் பற்றின்றி கூறினாராம் ஒரு புலவர். அவர் பழைய பத்தாம் பசலிக் கொள்கையையே பெரிதும் கடைப்பிடித்து நிற்பாராயின் நான் உறுதியாகச் சொல்கிறேன். அப்பண்டிதர்களின் காலமும் இத்துடன் முடிவடைந்தது என்று. ஏன்? இன்று உலகில் பலப்பல பகுதிகளிலும், ஏடுகள் காலத்திற்கும் கருத்திற்கும் நிலைமைக்கும் ஏற்ப மாறிக் கொண்டே வருகின்றன.

சான்றாக. கசபியான்கா என்ற சிறுவனின் கதையை எடுத்துக் கொள்வோம். கசபியான்கா என்னும் சிறுவன் தன் தந்தையோடு கப்பலில் சென்றான்; கடல் நடுவே கொடிய கப்பற் சண்டை நடந்தது. கசபியான்காவின் தந்தையும் ஒரு கப்பற்தலைவன். அவன் தன் மகனைக் கூப்பிட்டு ஓரிடத்திலே அதனை நிறுத்தி, "குழந்தாய், நான் அழைக்குமளவும் இவ்விடம் விட்டு நகராதே" என உரைத்து ஏதோ அலுவலாக அப்பாற் சென்றான். சிறுவன் கசபியான்கா நல்ல பிள்ளை. தந்தை சொல் தட்டாத தனயன்; கடமையை உணர்ந்த பாலன் — சண்டையில் அவனது தந்தை உயிர் நீத்தார். இது அச்சிறுவனுக்குத் தெரியாது; திடீரென்று கப்பல் தீப் பிடித்துக் கொண்டது. கப்பலில் உள்ளோர் யாவரும் பலவற்றாலும் உயிர் தப்பி ஓடினர்; பாலன் கசபியான்காவைப் பலரும் அழைத்தனர்; அவன் போக மறுத்தான். தீ நாற்புறமும் அவனைச் சூழ்ந்து கொண்டது; அதுகாலை பலரும் அவனை வற்புறுத்தினர் உடனே வருமாறு; அவன் தன் தந்தையின் கட்டளையை மீறி நடக்க முடியாது என்று உறுதியாகக் கூறிவிட்டான். அனைவரும் போய் விட்டனர்; கசபியான்கா, 'தந்தாய்! தந்தாய்! நான் போகலாமா?' என்று பன்முறை கூவினான். தந்தை உயிரோடு இருந்தாலல்லவா பதில் கிடைக்கும்? எனவே,

தந்தை சொல்லை தலைமேற்றாங்கி அவ்விடத்திலேயே நின்று கசபியான்கா தீயில் மடிந்தான், தந்தையின்பால் அவன் செலுத்திய அன்பைக் கண்டு பலரும் அவனைப் போற்றினர்; கவிகள் அவனை ஏத்தி ஏத்திப் பாடினர்; அப்படிப்பட்ட கசபியான்காவைப்பற்றி, இந்த நாளில் — அந்த நாட்டுப் புலவர்கள் ஏடுகளிலே பொறிக்கும்போது "கசபியான்கா தந்தைசொல் மிக்க மந்திரமில்லை என்ற கடமையைக் கடைப்பிடித்தானேயன்றி அறிவைப் பயன்படுத்திஞனில்லை" என்று குறிப்பிடுகின்றனர். தீயின் வேகத்திலே கடலின் கொந்தளிப்பிலே கப்பல் உடையும் ஓசையின் நடுவிலே தந்தையின் மறுமொழி தனக்கு எட்டாதிருக்கலாம்; அன்றித் தன் கூக்குரலும் தந்தைக்கு எட்டாதிருக்கலாம்; அன்றி அத்தகைய பேராபத்தினின்றும் தப்ப தந்தை சொல்லை மீறிஞல் குற்றமில்லையென்று கொண்டிருக்கலாம்; கசபியான்கா கடமையைத்தான் கவனித்தான்; அறிவை உபயோகிக்கவில்லை. மேஞட்டிலே முற்போக்கான முறைகள் கையாளப்படுகின்றகாலை, நம் நாட்டில் பழமை பாடித் திரியும் பண்டிதர்களின் பரிதாப நிலை கண்டு நாம் இரங்காது வேறு என்ன செய்வது!

மற்றும், கம்பராமாயணத்திலே கம்பன் கிட்கிந்தையை வருணிக்குங்கால் அதனை ஒரு சிறந்த நாடாகக் காண்கிருன். ஆங்கு வதியும் மக்கள் சகலகலா வல்லவர்கள் என்றும், சாஸ்திர விற்பன்னர்கள் என்றும், நீதி தவருது ஆண்டனர் என்றும், பலப்பல ஆடை அபரணங்கள் அணிந்திருந்தனர் என்றும் பெண்கள் மிக அழகுள்ளவர்கள் என்றும், பேசுவதில் ஆற்றல் மிக்கவர்கள் என்றும் கூறி முடிவில் அவர்கள் குரங்குகள் — விலங்குகள் என்று கூறுகின்ருன். இது முன்னுக்குப் பின் முரண்பாடல்லவா?

நற்குணங்கள் யாவும் படைத்த நாகரிக மக்கள் என்றும் கூறிய அதே வாயால் அவர்களைக் குரங்குகள் என்று அடுத்தாற்போன்று கூறுவது முறையா? அறிவுடையோர் ஒப்பும் உண்மையாகுமா? நேர்மையா? மற்றும் கம்பன் — இலங்கையை வருணிக்கும் போது மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் அமைந்த நகரமென்றும் கூறுகிறான். நகரெங்கும் ஆடல் பாடல் நிறைந்திருந்தன; ஆங்காங்கு வீணை முதலிய இசைக் கருவிகளின் ஓசை எழுந்தது என்று சிறப்பாகக் கூறுகிறான். ஆனால், அங்கு வசித்தவர்கள் இரக்கமில்லாதவர்கள் என்று கூறுகின்றான்; ஆண்கள் மகா கோர உருவினர்; நீண்ட வாயும், கோரைப் பற்களும், செம்பட்டை மயிர்களும், கரிய மேனியும், பெரு உடலும் கொண்டு விகாரமாய் விளங்கினர் என்கின்றான்; ஆனால் பெண்களைப் பற்றிக் கூறும்போது மட்டும் இயற்கையான குணத்திற்கேற்ப — தேவ மாதர்க்கு ஒப்பானவர்கள் என்று கவி தீட்டியிருக்கிறான். ஆண்கள் அழகற்ற விகார உருவினர்; ஆனால் பெண்கள் அழகுள்ள அணங்குகள். இதிலே ஆண் — பெண் பொருத்தம் உண்டா? அன்றி நாட்டுத் தற்கால முறைப்படி, காதலின்றி கணவன் மனைவியாகச் சேர்க்கப்பட்டாலுங்கூட அவர்கட்குப் பிறக்கும் ஆண்கள் எல்லோரும் அழகற்ற அநாகரிகர்களாயும், பெண்கள் எல்லோரும் அழகுமிக்க அணங்குகளாகவா விளங்குவர்? என்று சிந்தித்து பாருங்கள்! இத்தகைய கருத்துக்கள் காலத்திற்கும் நிலைமைக்கும் ஏற்றவாறு மாற்றப்பட வேண்டுமா — வேண்டாமா? என்று ஆராய்ச்சி செய்யுங்கள்! உங்கள் அறிவிற்கு வேலை தாருங்கள், தோழர்களே!

தவிர, நீதி நீதி என்று கூறுகிறார்களே, நீதி என்றும் நிலையுடையதா? நிகண்டு கட்டுப்பட்டு நிற்கக் கூடியதா? அல்லவே அல்ல. ஒரு காலத்திய நீதி மற்றொரு காலத்தில்

மாற்றப்படலாம், காலத்தையும் கருத்தையும் கொண்டு நீதி என்று அறுதியிட்டுக் கூற எவராலும் முடியாது. மறு முறையும் கூறுகிறேன் ஏடுகளிலே எழுதப்பட்ட நீதிகள் என்றும் நிலேயுடையவனல்ல என்று. எந்தெந்தச் சமயத்தில் மாற வேண்டுமோ, மாற்றப்பட வேண்டிய மனப்பண்பு மக்களிடை மலர்கின்றதோ, மாற்றித்தான் தீரவேண்டும் என்ற நிலேமை நாட்டில் நீடிக்கிறதோ அன்றெல்லாம் அது மாறும்; மாறிக்கொண்டே போகும்.

* * *

உலகிலே உத்தமர்களின் ஓயா உழைப்பாலும் அறிவாளிகளின் குன்று ஆராய்ச்சியாலும் உண்டாக்கப்படும் விஞ்ஞானக் கருவிகள், ஆகாய விமானங்கள், பறக்கும் குண்டுகள் முதலிய இன்னபிற புதுமைகள் எல்லாம் நம்முடைய பண்டைய புராண இதிகாசங்களிலிருந்து காப்பியடிக்கப்பட்டவை என்று கழறுவது நம்மைநாமே ஏமாற்றிக் கொள்ளல்போன்ற ஏமாளித்தனமல்வா! நாட்டிலே ஆகாய விமானம் ஆகாயத்திலே பறக்கும். கிராமத்தான் அதுகண்டு அதிசயமுறுவான், ஆ! ஆ!! இந்த வெள்ளேக்காரன் என்ன கெட்டிக்காரன் என்பான். அத்தருணம் அண்டையிலே இருக்கும் இராமநாத சாஸ்திரிகளோ அல்லது சோமசுந்தர குருக்களோ எவராவது உடனே உரைப்பார்; என்ன அப்பா பெரிய அதிசயத்தைக் கண்டு விட்டாய்? நம்முடைய புராணத்திலே இல்லாத ஆகாய விமானமா? இராமாயணத்திலே புஷ்ப விமானத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருப்பதை நேற்றுக்கூடக் கேட்டாயே; அதற்குள்ளாகவா மறந்து விட்டாய்! அந்தக் காலத்திலே இல்லாத விமானமா? இவை எல்லாம் நம் வேதங்களிலிருந்து காப்பியடித்தவைதான். இன்னும் ஓர் சிறிய விஷயம் பார். அதோ பறப்பது என்ன? கருடன். கருடன் என்ன நேராகப் பறக்கிறது? பார்ப்பதற்கு ஆகாய விமானம் போல இல்லேயா? அந்தக் கருடனேப் பார்த்துத்தான் அவனும் (வெள்ளேக்காரனும்) காப்பியடித்திருக்கிறுன். அந்தக் 'கருடன் மெக்கானிசம்'

தான் அந்த ஏரோப்பிளேனில் இருக்கிறது. வேறென்ன? என்று வாய் வேதாந்தம் பேசுவார். "அப்படியா சங்கதி! நான் என்னமோண்ணு பார்த்தேனே" என்று ஓர் அலட்சியப் பேச்சுபேசிவிட்டு வழிநடப்பான் கிராமத்தான். இத்தகைய உரையாடல் ஊரிலே, நாட்டிலே இல்லையென யாரும் இயம்ப முடியாது! இத்தகைய மனப்பான்மை நாட்டிலே வளரும் மட்டும் நாடு முன்னேறுமா?

மேலும் தற்காலத்திலே உள்ள குண்டு, தீக்குண்டு முதலியவெல்லாம் பழைய கால வாயுவாஸ்திர அக்கினியாஸ்திரங்கள்தான் என்று வீண்பெருமை பேசுகின்றனர் பழமை விரும்பிகள். அத்தகைய அஸ்திரங்கள் அந்தக் காலத்தில் இருந்தனவோ இல்லையோ? அது நமக்குத் தெரியாது. ஆனால் இக்காலத்தில் இல்லை என்பது எல்லோரும் அறிந்த உண்மை. ஆனால் நாம் நமது அன்றாட வாழ்க்கையில் அவைகளைக் காணலாம். எங்கு? ஏழைப் பாட்டாளி மக்களின் வீட்டில். ஏழைப் பாட்டாளி நாளெல்லாம் உழைத்து நலிந்து மாலையில் ஆயாசம்தீர சுராபானத்தைத் (கள்ளை)ப் பருகி ஆனந்தமாக உள்ளே நுழைந்து தம்மனைவியை வம்புக்கிழுத்து அவள் கன்னத்தில் அறையும் அறைதான் அக்கினியாஸ்திரம். அதைப் பெற்று அவள் அழுவதால் வழியும் கண்ணீர் நமக்கு வருணாஸ்திரத்தின் வனப்பை நினைவிற்குக் கொண்டு வருகிறது. அதைக் கண்டு அக்குடியன் விடும் பெருமூச்சே வாயுவாஸ்திரமாகும். இத்தகைய அஸ்திரங்களைத்தான் அன்றாட வாழ்க்கையில் நாம் காண்கிறோம்; அக்கினியாஸ்திரத்தைக் கண்டு தீக்குண்டு உண்டாக்கினர் என்று கூறுவது அறியாப் பாலகரும் எள்ளி நகையாடத்தக்க ஏமாற்று வித்தை. புதியனவெல்லாம் நம் நாட்டுப் பழம்பெரும் பொக்கிஷங்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்டவை என்று பேசிப் பூரிப்பதிலே பெருமை ஏதாவது உண்டா? இல்லை; மூக்காலும் இல்லை. இதனால் வீண் வீறாப்பு பெருகுகிறது;

மதி தேய்ந்து மந்த மடைகிறது. பழயனவற்றில் பெருமை யுண்டு; புதியனவெல்லாம் பழமையைக் கண்டுதான் செய்தவை என்ருலும் அவை இன்று எங்கே, எங்கே, எங்கேயென்று கேட்கிறேன் தோழர்களே! அவற்றை அந்நியனிடம் சோரம் போகவிட்டு அண்ணுந்து ஆர்ப் பாட்டம் செய்கிருயே அது உனக்குப் பெருமையா? சிறுமையா? உன் வீட்டிலே வீரம் இருக்கிறது என்று உரத்துப் பேசுகிருயே அந்த வீரம் இன்று எங்கே? எங்கு போய் ஒளிந்தது? சமத்துவம் பண்டைய ஏடுகளிலே சரமாரியாகப் பரவியிருக்கின்றதென்கிருயே, அந்த சமத்துவம் இன்று நாட்டிலே சல்லடை போட்டுச் சலித்துப் பார்த்தாலும் சல்லிக்காசு பெறுமான அளவுகூட அகப்படவில்லேயே; இந்த நிலைமையில் பழமை வீரம் பேசுவது பயனளிக்குமா என்று ஆராய்ந்து பார்! நாட்டுக்கு நலன் தருமா? பயனளிக்காது என்பதில் பிழையில்லே; நலன் தராது என்பதில் தப்பில்லே; இதனுல் தமிழன் மானம் பறி போகிறதென்பதில் தடையில்லே.

எடுத்துக்காட்டாக மாட மாளிகைகளிலே மனைவி மக்களோடு மாண்புற வாழ்ந்த மனிதன் ஒருவன், கால நிலைமையாலோ, கர்வத்தாலோ கயமைத்தனத்தாலோ, பிறரின் படுமோசத்தாலோ வறிஞனுனன் என வைத்துக் கொள்வோம். அவனது மாட மாளிகை மாற்றுனுக்கு உரிமையாகி விட்டது. சிலகாலம் சென்றபின் அங்கு வறியனுன முன்னுள் செல்வன் தன் நண்பன் ஒருவனேடு அவ் வீதிவழியே செல்லப் புறப்படுங்கால் அவனது மனம் அவனே அவ் வீதிவழியில் காலெடுத்து வைக்க விடாது. அவன் தன்மானமுடையவனுயிருந்தால் தவறி அவ்வழி புக நேரினும் அவ்வீட்டை ஏறெடுத்தும் பாரான் தன்மானமுள்ளோன். தன்நண்பன் அம்மனையின் மாண்பைக் குறித்துப் பேசினும் தலே கவிழ்வான்; மனையைப் பார்க்க மனமில்லாததால் நண்பன் அதுபற்றித் தன்னேடு உரையாடல் புரியினும் இரண்டொரு சொற்களால் தன்

நிலையை உணர்த்தாது உணர்த்தி வேறு வேறு போக்கிலே உரையாடலைத் திருப்பி அவ்விடம் விட்டு விரைவிலே நகர்வான். அதுதான் மனிதனின் தன்மான உணர்ச்சி! அது ஒவ்வோர் உயிருக்கும் வேண்டும்; மிக இன்றியமையாதது கூட. ஆனால் தன்மானமற்ற தன்மையாளன் தூரத்தேவரும் பொழுதே நண்பன் வேறுவழி செல்லப்புகினும் தடுத்து "என் மனை மகாநேர்த்தியானது. இதோ இந்த வீதியில் தான். அது அழகே அழகு அதனை வைத்து அநுபவிக்கக் கொடுத்து வைக்க வேண்டும்: சுற்றிலும் பூங்காவென்ன; நடு நடுவேயுள்ள கண்ணாடிகளின் நேர்த்தி என்ன" என்று இன்னும் பலப்பல பேசுவான். முடிவிலே 'அது ஒரு காலத்திலே நம்மிடமிருந்த மனைதான்; அப்பொழுதிருந்த சீரும் சிறப்புமென்ன; என்னை இவன் ஏமாற்றி இம்மனையைப் பற்றிக் கொண்டான்; இருந்தாலும் நான் அனுபவித்து ஆண்ட மனைதானே" என்று உள்ளம் நெகிழ்வான். உற்சாகம் காட்டுவான். இதுபோன்ற தன்மைதானே பழம் பெருமை பேசும் தற்கால வீரர்களின் செயல்!

இன்னும் சற்று விளங்க உரைக்க வேண்டுமானால், சான்று சற்றுக் கடுமையாக இருக்கும் என்ற போதிலும் உங்கள் மன்னிப்புக் கிடைக்குமென்ற மனப்பான்மையோடு ஒன்று கூறுகிறேன். சோலையிலே இருவர் உல்லாசமாக உலவுகின்றனர். உரையாடல் மிக உன்னதமாயிருக்கின்றது. இருவரும் இளவயதினர்; இளமை விருந்தை நுகர்கின்றனர் வசந்த காலத்திலே ஒருவர் ஆண்; மற்றொருவர் பெண். மனமொத்த காதலர்கள் என்று தான் மாசற்ற மனத்தினர் எண்ணுவர்; அதுசமயம் இருவர் அவ்வழியே வருகின்றனர். ஆனால் இருவரில் ஒருவர் மற்றவரைப் பார்த்து "என்ன ஐயா! ஏதோ ஒரு மாதிரிப் பார்க்கிறீர்; அந்த அழகி யாரோ வென்று நினைக்காதீர்! அவளோடு சல்லாபமாக இருக்கிறாளே,

அவள் என்னுடைய மனைவியாக இருந்தவள்தான். அவள் அழகென்ன! அற்புத குணமென்ன! எனக்கும் அவளுக்கும் இருந்த பொருத்தம்தான் என்ன!'' என்று எக்காளமிடுவதற்கு ஒப்பாகுமென்று கூறுகின்றேன். இது ஒழுங்கா? உள்ளது பார்த்துப் போகலாம் வா; ஆகா! அதன் தன்மானமுடையோர் செயலாகுமா? நேர்மையோடு நினைத்துப் பாருங்கள் நேயர்களே!

பெரும் பெரும் பண்டிதர்களும் புலவர்களும் நாவலர்களும் இத்தகைய பழம் பெருமையில் பாசம் வைத்து நாட்டைக் கருதாமல் நாட்டிற்குத் தொடர்பில்லாத, நாட்டு மக்களுக்குப் பயன் தராத ஏடுகள் செய்வதிலேயே காலத்தைக் கழிக்கின்றனரே! இந்த நிலை கண்டு என்மனம் பெரிதும் வருந்துகின்றது; எண்ணத்தில் ஏக்கம் உண்டாகிறது. என்று நீங்கும் இந்த வீண் பெருமையென்று சிந்தித்த வண்ணமே இருக்கிறேன். எனினும் காலம் இதனை மாற்றும்; வருங்கால உலகம் இதற்கோர் வழி கோலும் என்ற நம்பிக்கைதான் மேலும் மேலும் சலியாதுழைக்க என்னை ஊக்குகின்றது; மக்களின் வாழ்க்கை உரிமைக்குப் போரிடும் உணர்ச்சியில் என் உள்ளம் ஊடுருவிச் செல்லுமாறு செய்கின்றது.

சமீபத்தில் நான் ஒரு பண்டிதருடன் உரையாடிக் கொண்டிருந்தேன். அதுபொழுது உலகிற் சிறந்த சொற் செல்வர்கள் யார் என்ற விவாதம் ஏற்பட்டது. பண்டிதர் பதற்றமின்றிக் கூறினார் டெமாஸ்தனிஸ், பார்க், அநுமான் ஆகிய மூவரும் சொற் செல்வர்கள் என்று, அநுமான் சிறந்த சொற் செல்வனும். இது கேட்டு என் நிலை கலங்கிற்று. பழமை மோகம் பண்டிதர்களின் பகுத்தறிவை எத்துணைப் பாழ்படுத்தியுள்ளது? பாழ்படுத்துகின்றது? என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணானேன் என் செய்வது? டெமாஸ்தனிஸ் சிறந்த சொற்செல்வன் என்பதை

ஒப்புக்கொள்ளலாம். பர்க் விஷயத்தில்கூடச் சிறிது ஐயப்பாடு நேர்கிறது; "பர்க் பேசுகின்ற பொழுது உணவுக்கு மணி அடிக்கிறது" என்ற வாசகம் நினைவிற்கு வருகின்றது. பர்க் பேசுவதில் வல்லவன். ஆனாலும் கேட்போர் உள்ளத்தைத் தன்பால் திருப்பும் திறனற்றவன் என்றுதான் கொள்ள வேண்டி இருக்கின்றது. ஆனால் கடல் தாண்டிச் சீதையின் இருப்பிடமறிந்து இலங்கையைக் கொளுத்தின அநுமானையும் இவ்வரிசையில் சேர்ப்பதா என்பதை நினைக்குந்தோறும் நகைப்பு மேலிடுகின்றது. அநுமானது திருவுருவப் படத்தைப் பார்க்கும் எவராவது, அவனது வாய் வனப்பைக் காணும் எவராவது அநுமானும் சொற்பெருக்காறறவலன் என்று நினைப்பாரோ? நினைக்கத்தான் இடமிருக்கின்றதா? தாடைகளின் அமைப்பை விடுத்து, சொற்செல்வன் என்று கொண்டாலும் கொள்வோம். உலகச் சொற்பொழிவாளர் வரிசையிலே அநுமான் ஒருவன் என்று நாம் கூறினால், அதைப் பிற நாட்டினர் கேள்விப்பட்டு நம்மை நோக்கி, "உங்கள் அநுமானின் சொற் செல்வங்கள் எங்கே? சொற் பெருக்கங்கள், சொற் போர்கள், அறிவுரைகள், அறிவுரை ஆராய்ச்சித் தொடர்கள் எங்கே? நாங்கள் காணவேண்டும் அவனுடைய ஆற்றலை; எடுத்துக் காட்டுங்கள் அவனுடைய ஏடுகளை" என்று கேட்டால் இதற்கு யாதுவிடை பகருவர் புலவர்பெருமக்கள்? ஏதாவது இருந்தால்தானே பதில் வரும்! கம்பன் கவிதைபால் கரைகாணாத காதல் கொண்ட—நாட்டு வளமறியாத புலவர்களின் கண்களில் படும் சொற்செல்வர் வேறு எவ்விதமிருப்பர்?

பண்டிதமணிகளும் பழமை விரும்பிகளும் பழைய ஏடுகளில் உள்ள புன்மையை விடுத்து, கருத்துக்குக் களங்கம் விளைக்கும் இடங்களை நீக்கிவிட்டு, மக்களுக்குப் பயன்படுமாறு அவற்றைச் செய்து தரலாகாதா? நீதிபற்றித் தனி

ஏடு ஒன்று அமைக்கலாம். அதிலே புலவர்களின் கருத்தை ஒருங்கு திரட்டிக் குவிக்கலாம். காதல் பற்றித் தனி ஏடு செய்யலாம். அதிலும் பல பண்டிதர்களின் கருத்துக்கள் இடம் பெறச் செய்யலாம். அது போலவே நட்பு, மதம், போர், அரசாட்சி முதலியன பற்றிய விழுமிய கருத்துக்களைப் பண்டைய ஏடுகளிலிருந்து எடுத்துத் தனித்தனியே தொகுத்து மக்களிடை பரப்பலாகாதா? தொல்காப்பியம், திருக்குறள் ஆகிய இவற்றை எளிய கல்வியுடையோரும் எளிதில் புரிந்துகொள்ளும்வண்ணம், எளிதில் விளங்கும் வண்ணம் விளக்கமான நடையிலும் குறைந்த விலையிலும் சிறு சிறு தொகுதிகளாக வெளியிட முடியாதா? பழமையைப் பாகுபடுத்திப் பகுத்தறிவுக் கண்களுடன் பார்க்கத் துணிவில்லையானால், பழமை பாழாகும் என்பதைக் காலப் போக்கு அவர்களுக்கு எடுத்துக் காட்டும், ஆராய்ச்சிக்கு முதலிடம் தாருங்கள் பண்டிதர்களே!

பண்டிதர்களே! புலவர்களே! நாவலர்களே! இலக்கியக் கர்த்தாக்களே! உங்களுக்கு ஒரு வேண்டுகோள். சிந்தியுங்கள் என்பதுதான் அது. அறிவோடு சிந்தியுங்கள், நடுநிலை நின்று எண்ணுங்கள்! ஏடுகளால் நாட்டிற்கு விளைந்த நன்மையைக் கணக்கெடுத்துப் பாருங்கள்; [illegible]ர்த்துச் சிந்தித்துச் சீர்தூக்கி நல்ல முடிவுக்கு வாருங்கள். அதன் வழி நடவுங்கள்; பகுத்தறிவைப் பயன்படுத்துங்கள்; காலத்திற்கும் கருத்திற்கும் ஒத்த இலக்கியங்களை இயற்றுங்கள். இன்றேல் உங்கள் காலம் பழைய புராணங்களோடு நிற்கவேண்டிய தவிர்க்க முடியாத நிலைமை ஏற்படும் என எச்சரிக்கை செய்கிறேன். எச்சரிக்கையைக் கோமாளியின் கூத்தென்று ஏமாளித்தனமாக எண்ணாதீர்கள்; நிலைமை நிச்சயம் மாறும் என்பதைப் பற்பல நாட்டு வரலாறுகளும் படித்துப் பார்க்கின் உணரலாம். காலம் அறிந்து கருத்தை மாற்றிக்கொள்ளுங்கள்; நிலைமை அறிந்து நீதிவழங்குங்

கள்; நாட்டை அறிந்து ஏடுகள் இயற்றுங்கள்; மதத்தைப் புகுத்திக் கலையைக் கறைப்படுத்தும் கயமைத்தனத்தைக் கைவிடுங்கள்; கைவிடாமல் நிர்வாணப்பிச்சை கேட்கும் ஆண்டவனைப் பாடின் மக்களை நிர்வாண காலமாகிய காட்டுமிராண்டிக் காலத்திற்கு இழுத்துச் செல்லும் இழி செயல் புரிந்தோராவீர்; மக்கள் மதியைக் குறைத்த குறை மதியாளராவீர்.

மதத்திற்கெனத் தனி ஏடு இயற்றுங்கள், மதம் வேண்டுமானால்; அழகான கதைகளிலே, ஆராய்ச்சிமிக்க ஏடுகளிலே ஆண்டவன் அவதார லீலைகளைப் புகுத்தி அறிவைப் பாழ்படுத்தாதீர்! அது அறமல்ல—அறிவுடைமையுமல்ல—ஆராய்ச்சிக்கு அணை போடாதீர்கள். ஆண்டவனுக்குடைய ஏடுகள் என்று தனியே தயாரியுங்கள்! எம்பெருமானுக்கே அர்ப்பணம் என்ற நிலைமை வேண்டாம்; அதை மாற்றுங்கள். அதுதான் நீதி—நேர்மையும்கூட. நாட்டின் தன்மையைக் கருதி நலமுள்ள ஏடுகளைப் பண்டிதர்கள் தராவிடில் நாளடைவில் நாடு இழிநிலை யடையும். செவி சாய்ப்பார்களா இலக்கிய கர்த்தாக்கள்? செயலில் இறங்குவார்களா—கற்றுணர்ந்த கலாவல்லுநர்கள்?

மாணவர்களே! உங்கள் நேரத்தை நெடுநேரம் எடுத்துக் கொண்டேன். ஏதோ விருந்து கிடைக்குமென்று வந்தீர்கள். ஆனால் மருந்துதான் கொடுத்துள்ளேன். மருந்து என்றதும் மருளவேண்டாம். மருந்தை உண்டு உணர்வோடு ஒன்றிச் சுவைக்குங்கால் உண்மை தெரியும். கெட்டவற்றைச் சிந்தனையிலே கொண்டு சீர்தூக்கிப் பாருங்கள்! அறிவுக்கு ஒத்ததைக் கொள்ளுங்கள். | நாட்டிற்கும் ஏட்டிற்கும் தொடர்பு வேண்டாமா? நாட்டுக்கு நலன் கருதா ஏடுகள் நமக்குத் தேவையா? மதங்கலந்த ஏடுகள் மதியை வளர்க்குமா? அன்றி மடமையைப் போற்றி மதியைக்

குறைக்குமா? என்று எண்ணுங்கள். ஆண்டவனின் அற்புத குணங்கள் என்பவை அறிவுக்கு, ஆராய்ச்சிக்கு ஒப்ப முடிந்தவைகளா என்று சிந்தியுங்கள்! இலக்கியப் பண்டிதர் களின் இயல்பு நல்ல முறையிலே இருக்கிறதா வென்று யோசியுங்கள்! எது முறையோ அதன் வழி நடவுங்கள்—எதிர்ப்புக்கு அஞ்சாதீர்கள்; ஏளனத்தைக் கேட்டு ஏமாறு தீர்கள்; மதத்தின் முன் மண்டி இடாதீர்; கடவுளைக் கண்டு கருத்தழியாதீர். அறிவே துணை. மானமே மனிதனை மனிதனாக்குகிறது என்பதை உணருங்கள். உலுத்தர் பேச்சை உதறித்தள்ளுங்கள்! சமத்துவம் நாடுங்கள்! சகோதரத்துவம் கோருங்கள்! சாதிமத பேதத்தைச் சாடுங் கள்! தோல்வி கண்டு சலிப்புறுதீர்கள்! மாற்றார் மமதை யைக் கண்டு மனம் மருளாதீர்கள்! சிந்தித்து முடிவுக்கு வாருங்கள்—அதன் வழி செயலாற்றுங்கள்! செம்மல்களே! உங்கள் யாவருக்கும் எனது நன்றி. எனது மதிப்பிற்குரிய வரும், உங்கள் ஆசிரியரும், எனது முன்னாள் ஆசிரியருமான திரு. கந்தசாமி முதலியார் அவர்கள் தலைமையில் பேசும் பெரும் பேறு வாய்த்தமைக்குப் பெரிதும் இறும்பூதெய்து கின்றேன். அவருக்கு எனது நன்றி கலந்த வணக்கம்.

# கனி—2

தோழர்களே!

நான் பேசப்போகும் "நல்ல தீர்ப்பு" ஆசிரியருக்கும் மாணுக்கர்களுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிய தன்று. ஆனுல், அது என்னைப்பற்றிய தீர்ப்பேயாகும். தலைவர் அவர்கள், ஏதோ எனக்கு இங்கு பேச 144 போடப் பட்டதாகச் சொன்னுர்கள். ஆசிரியர்களுக்கு என்னிடம் உள்ள அருசையோ அல்லது ஆத்திரமோ இதற்குக் காரணம் அன்று; ஆனுல், அவர்கள் என்னை சரியாகப் புரிந்து கொள்ளாததே காரணமாகும். மேலும், நான், நாட்டிலே புதுயுகப் புரட்சிக் கருத்துக்களைக் கொண்ட ஓர் இயக்கத் தோடு தொடர்பு கொண்டுள்ளேன். என்னைப்பற்றி நீங்கள் தவருக அறிந்தீர்கள்; அறிவிக்கப் பட்டீர்கள்! ஆனுலும், இன்று நாம் ஒன்று கூடியுள்ளோம், ஊடலுக்குப் பின் கூடல்போல. ஆகவே, இளந்தோழர்கள் இன்று நான் கொண்டுள்ள கருத்துக்களைக் கேட்டு, அவற்றின் வாதப் பிரதிவாதங்களைக் கேட்டு, அவைகள் சரியா தவரு என்று ஒரு 'நல்ல தீர்ப்பு' வழங்கவேண்டும். அது எனக்காக அல்ல; உங்களுக்கு, உங்கள் நாட்டின் நலனுக்கு, உங்கள் நாட்டு சமுதாயத்திற்கு நீங்கள் அளிக்கும் 'நல்ல தீர்ப்பா' கும்.

தீர்ப்பு என்றால் பலவிதம் உண்டு. ஆண்டவன் அடியார்க்கு அளிக்கும் தீர்ப்பு ஒருவிதம்; அரசன் குடிகளுக்கு அளிக்கும் தீர்ப்பு மற்றொரு விதம்; சட்டசபைத்தீர்ப்பு மற்றொரு தன்மையானது; வலியோர் எளியோருக்கும், முதலாளி தொழிலாளிகளுக்கும் அளிக்கும் தீர்ப்பு பிறிதொரு தன்மையானது. இவையாவும் நல்ல தீர்ப்பு என்றே அவரவர் நவிலுவர். ஆனால் தீர்ப்பு காலத்திற்குத் தக்கவாறும்-நிலைமைக்குத் தக்கவாறும் கருத்துக்குத் தக்கவாறும் மாறும்-மாறித்தான் தீரும்; மாறித்தான் தீரவேண்டும். ஒரு காலத்திலே நல்ல தீர்ப்பாக விளங்கியது பிறிதொரு காலத்திலே நல்ல தீர்ப்பு அல்ல என்று எள்ளி நகையாடப்படும்.

நம் நாட்டிலே பசுவின் கன்றைக் கொன்ற மகனை தேர்க்காலில் வைத்து மடித்தான் மனுநீதி கண்ட சோழன். இது அவனுக்கு, அவனது கருத்துக்கு, அக்கால நிலைமைக்கு ஏற்றபடி நல்ல தீர்ப்பு. ஆனால் அவ்விதம் செய்ய, இக்கால தந்தையர்கள், தாய்மார்கள், சகோதர சகோதரிகள் ஒருப்படுவார்களா? அந்த காலத்து நல்ல தீர்ப்பு இந்த காலத்திற்குப் பொருந்துமா? கிரேக்க நாட்டிலே, பகுத்தறிவாளன் சாக்ரடீஸ் நாட்டிலே பகுத்தறிவை வளர்த்தான்; மக்கள், நாட்டின்—சாதாரண மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அழகு, சத்தியம், ஆண்டவன் முதலியவைகளைப்பற்றி ஒருவித உணர்ச்சியை எழுப்பி உண்மையை உள்ளபடி உணர ஊக்கினான். ஆனால், அக்கால உலகம் அவனுக்கு அளித்த தீர்ப்பு, அவனைச் சிறையிலே அடைத்துச் சிந்தனையைச் சிதைக்க முயன்றது; நஞ்சை நாவால் சுவைக்கவைத்து நமனுலகுக் கனுப்பியது. இதுவும் அப்போது "நல்ல தீர்ப்பு" தான்.

இங்கிலாந்திலே சுதந்திரத்தை நாடி உழைத்த பொயடீஷியா என்னும் மாதை உரோமானியர் மகா கொடுமைப் படுத்தினர். அது அவர்களுக்கு அப்போது "நல்ல தீர்ப்பே."

அரசனின் தெய்வீக உரிமை கொண்டாடிய சார்லஸ் மன்னன் தன் அரண்மனை முன்னிலையிலே தூக்கிலிடப் பட்டான். இதுவும் "ஒரு நல்ல தீர்ப்பே."

பிரான்சிலோ நாட்டு மக்களை அடைக்க உதவிய (பாஸ்டில்) சிறையை வீழ்த்தி புரட்சியைப் போற்றி நாட்டோர் நன்மையை நாடி, சீமான்களையும் பூமான் களையும் அதே பாஸ்டில் சிறையில் அடைத்தோரை அந்நாடு தூக்கிலிட்டு "நல்ல தீர்ப்பு" செய்தது. அது ஒரு காலம்.

ஆனால், ரஷ்யாவிலோ மன்னன் முதல் மடாதிபதிகள் வரை மக்கள் நலனுக்கு மாறானோரை மட்டந்தட்டிச் சுட்டு வீழ்த்தி—நாட்டிலே சமத்துவத்தை நிலை நாட்டின புரட்சி வீரர்களைப் போற்றாதார் யார்? இது அந்த காலத்துக்கேற்ற ஒரு "நல்ல தீர்ப்பு" என அவர்கள் கருதுகின்றனர்.

நான் மறுமுறையும் கூறுகின்றேன்; தீர்ப்பானது— காலத்தையும் தீர்ப்பளிப்போரின் தன்மையையும் தழுவிய தாகவே இருக்கும்.

சான்றாக, ஆசிரியர்கள் என்னை அழைக்க அலட்சியம் செய்தது அவர்கள் நிலைக்கு, தன்மைக்கு நல்ல தீர்ப்பாக லாம்! இது மாணவரின் நல்ல தீர்ப்புக்கு மாறாக இருந் திருக்கலாம். ஆனால் என்னைச் சரியாக அறியாமல் தீர்ப்பளித்தது "நல்ல தீர்ப்பு" என நான் கருதமாட்டேன்.

சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் தீர்ப்பு எதுவானாலும் அதுதான் "நல்ல தீர்ப்பு;" நல்ல தீர்ப்பு நல்லவர்கள் செய்யும் தீர்ப்பாக என்றும் இருக்காது. ஏனெனில், நல்லவர்கள் தீர்ப்பு, என்றும், இரக்கமுடையதாகவே இருக்கும்.

இன்றைய சமுதாயம் செல்லரித்து, சீர்கெட்டுச் சின்ன பின்னப்பட்டுச் சிதறிக் கிடக்கிறது. எனவே, இன்று நல்ல தீர்ப்பு, சமுதாயப் புரட்சி புரிந்து—சமுதாயத்தையே உருக்கி வேறு அச்சில் வார்ப்பதாகத்தான் இருக்கும். இது புரட்சி வேகத்தால் தான்முடியும். இத்தகைய சமுதாயப் புரட்சியை இளந்தோழர்கள் ஈவு இரக்கமின்றி, மாறுதலுக்குக் கட்டுப்பட்டு நடத்தவேண்டும். மக்கள் மாறுதலை எதிர்த்து வாழ முடியாது. ஒன்று, மாறுதலோடு ஒன்றி வாழ முடியும். இன்றேல் மாறுதலோடு மோதி மடிய வேண்டும். இன்றைய சமுதாயம் வழுக்கு நிலம் போன்றது. வழுக்கு நிலத்திலே ஒருவன் எத்தனைக் காலம் விழிப்போடு நடக்க முடியும்? கனத்த காற்றடித்தால் அவன் வழுக்கி விழுவது திண்ணம். ஆகவே அவன் வழுக்கு நிலத்தைச் செம்மைப்படுத்துவதுதான் சிறந்த வழி; மாற்றியமைப்பதுதான் மனதிற்குகந்த மார்க்கம்; அதுதான் என்றும் வழுக்கி விழாதிருக்கும் வழி.

நம்நாட்டு சமுதாயம் ஜாதி வேற்றுமையினாலும் பொருளாதார மாறுபாட்டினாலும் செல்லரித்துக் கிடக்கிறது. மேலும் செல்லரித்துக்கொண்டே வருகிறது. தீண்டாதார் என்போரைச் சகல துறைகளிலும் சாதியின் பேரால் என்றென்றும் தீண்டாதாராக்கியுள்ளோம்; அடிமைப் படுத்தியுள்ளோம்—இது நல்ல தீர்ப்பா?

இதற்குச் சில தோழர்கள், இந்த நிலை பிற நாட்டிலும் இருக்கிறது எனக்கூறிக் கவலையை மாற்ற முயல்வர். ஆனால் அந்நாட்டு சமுதாயத்தைவிட இந்நாட்டுச் சமுதாயம் சிறப்பற்று—சீர்கேடுற்றிருப்பதேன்? இங்கு ஒரு ஜாதியான் மற்றொரு ஜாதியானைத் தொட்டால் தீட்டு, தலை முழுக வேண்டும். ஆனால், இன்று ஒருவரையொருவர், வெட்டு, குத்து, அடி என்று ஆர்ப்பரிக்கும் ஹிட்லரோ, சர்ச்சிலோ, ரூஸ்வெல்ட்டோ அல்லது அந்த நாட்டு மக்களோ சாதாரணமாக ஒருவரையொருவர் தொட்டால் தீட்டு,

தலை முழுகவேண்டும், மதம் மாசற்றது என மனம் பதைக்க மாட்டார்கள். அங்கு மக்கள் இனம்—எல்லோருக்கும் மரியாதை. இங்கு தில்லைத் திருத்தல ஜோதியிலே கலந்த நந்தன் காலம் முதல் அம்பேத்கார் வைசிராய் ஜோதியிலே கலந்த இன்றுவரை ஒரே தீர்ப்பு; தீண்டாதே என்ற தீர்ப்பு. இது நல்ல தீர்ப்பா?

அமெரிக்காவிலே நீக்ரோ இயற்கையிலேயே அழகற்று அமைக்கப்பட்டான். அதை மாற்ற முடியாது. ஆனால், நம் நாட்டு சகோதரர் யாவரும் நம்மைப் போன்றவர்களே என்பதை எவராலும் மறுக்க முடியுமா? அமெரிக்காவிலே நீக்ரோவோடு உண்ணல், உறவாடல் உண்டு; கலப்பு மணம் உண்டு; கல்விக்கலையுண்டு; ஆனால் இங்கோ?

நம் நாட்டுத் தலைவர்கள் ஆப்ரிக்காவிலே, ஆப்ரிக்கர் இடத்திலே வாழும் கடல் கடந்த கருப்பர் உரிமைக்காகப் போராடுவர். ஆனால், இந்த நாட்டிலே பிறந்து, இந்த நாட்டிலே உழைத்து, இனப்பற்று, உணவு—உடை—உறை விடமற்று—வறுமையால் வாடி, நலிந்து, மெலிந்து, நசித்து இந்த நாட்டிலேயே என்றென்றும் தீண்டாதானாகவே மரிக்கும் தோழர்களைப் பற்றிக் கவனித்ததுண்டா? மேற் கண்ட அநாகரிகத்தின் அடிப்படையை, அஸ்திவாரத்தை, ஆணிவேரை அறுத்தெறிய முற்பட்டதுண்டா? ஏன் இல்லை இளந் தோழர்களே! இதுபற்றி நீங்கள் நல்ல தீர்ப்பு அளிக்க வேண்டுகிறேன். இன்றில்லாவிட்டாலும் நாளை, நாளை இல்லாவிட்டாலும் நாட்பல கடந்தாகிலும், கல்லூரியை விட்டகன்ற பிறகாவது சிந்தித்து ஒரு நல்ல தீர்ப்பு அளியுங்கள்! ஊருக்குழைப்போராகிய எங்களை வீணே தடுக்காது வாளாவிருப்பதே நீங்கள் நாட்டுக்கு நல்கக்கூடிய நல்லறமாகும். நாங்கள் ஒன்றும் எங்களைச் சகலகலா வல்லவர்கள் என்றோ, பண்டிதர்கள் என்றோ பறைசாற்றவில்லை. அறிவுக்கு அறம் என்று பட்டதை அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறோம். அல்லாததை

அக்கணமே அடாத்து என்று அறிவுறுத்துகிறோம். உதாரணமாக—திருமணக் காலங்களிலே, பட்டப் பகலிலே, பகலவன் ஒளியிலே நம்மவர் விளக்கு ஏற்றி வைக்கின்றனர். இந்த விளக்கு ஏன்? எதற்காகவென்று கேட்கிறோம்? ஆண்டவன் அளித்த அருணனிருக்கும்போது ஏன் இந்த விளக்கு என்று கேட்கிறோம்; சீர்தூக்கிப் பாருங்கள் என்று. சீர்தூக்கிப் பார்த்து உங்கள் சொந்த முடிவுக்கு வாருங்கள்.

மற்றும் கடவுளே இல்லை என்றோ, கடவுள் இருக்கிறாரென்றோ நான் கூறவில்லை—அறிவோடு, ஆற்றலோடு, ஆபாசமற்ற கடவுள் இல்லை நமக்கு, இருக்கவில்லை நமக்கு என்றுதான் கூறுகிறேன். மாசுமருவற்ற மதம் இல்லை நமக்கு. இனப்பற்று மிகுந்த இலக்கியம் இல்லை நமக்கு. அன்பு தரும், அறிவூட்டும் சமுதாயம் இல்லை நமக்கு. மனிதர் மனிதத் தன்மையோடு வாழச் சுயேச்சை சுதந்திரம் இல்லை நமக்கு.

நமக்கிருக்கும் இலக்கியமெல்லாம் ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலியோரின் அற்புத லீலைகளைப்பற்றியவைகளாகவும், ஆண்டவனின் பத்தவதாரங்களை விளக்கி—அதிசய, அநாகரிகமான, அற்புதங்கள் நிறைந்தவைகளாகவும், கலையின் பெயரால் இனக்கொலை செய்பவைகளாகவுமேதான் இருக்கின்றன. அறிவுக்குப் பொருந்தாதவையும், ஆராய்ச்சிக்கு நிற்காதவையும், அறிவையே அகற்றி மடைமையை மக்கள் மனதில் புகுத்தும் போலிகளாகவே—நமக்கிருக்கும் இலக்கியங்கள் உள்ளன.

கிறித்தவனுக்கோ ஒரே ஒரு பிதா பரமண்டலத்திலே உண்டு. இஸ்லாமியனுக்கோ ஒரே கடவுள்; அதுவும் உருவமற்ற அரூபி. ஆனால் நமக்கோ, மூலக் கடவுளர் மூவர், அவருக்குக் குடும்பங்கள் பல; அதிலும் நிரந்தரக் குடும்பங்கள் சில; தற்காலிகக் குடும்பங்கள் பல. உதாரணமாக, சிவனுருக்குப் பார்வதியும் கங்கையும் நிரந்தரக் குடும்பங்களாகும். தற்காலீக்க குடும்பங்களோ தாருகாவன

ரிஷிபத்தினிகளைப்போல சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வாறு இருக்கும். ஏன் இதைக் கூறுகிறேன்? நமக்கும், கிறித்தவனுக்கும், இஸ்லாமியனுக்கும் கடவுள் உணர்ச்சி யில், தன்மையில் உள்ள வேற்றுமையைக் காட்டத்தான். நம்முடைய கடவுட்டன்மை கயமைத்தனமாக உள்ளது, கபோதித்தனமாக உள்ளது என்பதை உறுத்திக் காட்டத் தான். இவ்விதக் கயமைத்தனத்தையும், கபோதிக் குணத்தையும் விடுத்து கடவுளை 'சர்வ வியாபகன், உருவ மற்ற அரூபி, அருளுடையவன், என்று மட்டும் ஏன் கூறலாகாது? இதற்குப் புராணமேன்? மதம் ஏன்? மக்களிடை மாற்றம் (சாதிபேதம்) ஏன்? கடவுளைப் பற்றிய இந்தத் தீர்ப்பு "நல்ல தீர்ப்பா" நவிலுங்கள் நாட்டோரே!

நமக்குக் கடவுள் வேண்டும்; நல்ல கடவுள் வேண்டும்; அறிவுக்குப் பொருத்தமான, ஆராய்ச்சிக்குட்பட்ட, நிகண்டிலே நீசத்தன்மையற்ற கடவுள் உணர்ச்சி வேண் டும் என்றுதான் கூறுகிறேன். நல்ல தீர்ப்பு அளிக்கும் கடவுள்தான் வேண்டும். இங்கே ஒன்று கூற ஆசைப் படுகிறேன். சிலர் கூறக் கேட்டிருக்கிறேன். சிவன் பார்ப்பனரல்லாதாருக்கே உரித்தானவரென்று; அவர் களையே அவர் உயர்வாக மதித்தாரென்று; காரணம், கண்ணப்பரைத்தான் — பார்ப்பனரல்லாத ஒரு வேடு வரைத்தான் — எம்பெருமான் — அப்பா! அம்மா! என்று அழைத்து அன்பு கூர்ந்தாராம்; மற்றும் செட்டிகுல மங்கையாகிய காரைக்கால் அம்மையாரைத்தான் அம்மே! அம்மே! என்று தம் அமுதவாக்கால் அழைத்தாட்கொண் டாராம். மற்றெவருக்கும் இப்பேறு கிடைக்கவில்லையே! என்னே நம்பால் நம் சிவனார் கருணை! என்று எண்ணி எண்ணி இறும்பூதெய்துகின்றனர். சற்று சிந்தித்துப் பாருங்கள் தோழர்களே, கண்ணப்பர், 'அப்பா' என்ற அழைப்புப் பெறத் தம் கண்களைப் பெயர்த்து அப்ப நேர்ந்த கஷ்டத்தை! காரைக்கால் அம்மையார், 'அம்மே'

என்ற ஆசீர்வாதம் பெற, பேயாகி, உடலை வருத்தி, நாடி நரம்பற்று, உருக்குலைய நேர்ந்ததை; இப்பேறு பெற இவர்கள் பட்ட துன்பம் எவ்வளவு? ஆனால், அதே சிவனைப் பார்ப்பனர் எத்துணை எளிதில் அடைகின்றனரென்பதைத் திருவிளையாடல் புராணத்திலே பாருங்கள்! பார்த்துக் கைலாயத் தீர்ப்பு நல்ல தீர்ப்பா என்று கூறுங்கள்.

மதுரையில் சொக்கர் ஆலயத்தில் அம்மையும் அப்பனும் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருக்கின்றனர். திடீரென்று அப்பன் எழுந்தார். அம்மை கேட்க, 'ஒரு பக்தன் நம்மை நாடி வருகிறான்; அவனை ஆட்கொள்ள வேண்டும்' என்று கூறி விடையேறி அம்மையோடு விண்ணிலே சென்றார்—அவனது பக்திக்கு மெச்சி பக்தன் செய்த பாபங்களுக்குப் பிராயசித்தம் கூறினார். அது என்ன? 'பொற்றாமரைக் குளத்திலே மூழ்கு! பசுவுக்கு அறுகம் புல்லைப் போடு! ஆலயத்தை மும்முறை வலம் வா! நீ செய்த பாவம் தீர்ந்து எம்மை அடைவாய்!' என்றார். பக்தன் அவ்வாறே செய்து பரமன் அருள் பெற்றான். எப்படிப்பட்ட பக்தன்! பஞ்சமா பாதகங்களைச் செய்த பக்தன்; தந்தையைக் கொன்று தாயைப் புணர்ந்த பக்தன்; இப்படிப்பட்ட பக்தனுக்கு அரனின் அருள் அரைக் கணத்திலே கிட்டும்! ஏன்? அவன் பார்ப்பனன். இது கைலாயத் தீர்ப்பு! இது பக்தியாசாரத்தீர்ப்பா? ஜாதியாச்சாரத் தீர்ப்பா?

கிறித்துவன் ஞாயிற்றுக் கிழமைகளில் கோவிலுக்குப் போவதால் பொருளுண்டு. ஏனெனில், அவனுடைய இயேசுநாதர் அவனுக்காகத் தம் இரத்தத்தைச் சிந்தினார். அதிலே அவனுக்குப் பெருமைகூட, தனக்காக உயிர்துறந்த உத்தமனைக் காணச் செல்வதிலே.

முஸ்லீம் ஒரு நாளைக்கு ஐந்துமுறை தொழுகிறான் என்றால், அதுவும் அவனுக்குப் பெருமைதான். ஏன்? அவன்

கடவுள் உருவம் அற்ற அரூபி, அவனுடைய வழிகாட்டி முகம்மது நபி, மக்களுக்காக மக்காவிலிருந்து மதினுவரை ஓடினுர்; அஞ்ஞானத்தை நீக்கி அறிவைப் புகட்டினுர். ஆனுல் நம்முடைய கண்ணன் காட்டிய வழியோ! சிறு வயதிலே வெண்ணெய் திருடி மத்தடி உண்டான்; சற்றுப் பெரியவனுன போது கோபிகளுடனே பற்பல லீலைகள் புரிந்தான்; சேலைகள் திருடினுன்: பின் இராதை, ருக்மணி முதலியோரை மணந்தான்; கடைசியாக பாரதப் போரிலே சிறந்த இராஜ தந்திரத்தைக் கண்டான். நான்கு வருணத்தை நான்தான் படைத்தேன் என்று கீதை செய்தான். இந்த வழி நல்லதா? நமக்குத் தேவையா?

அழகான கதைகளோடு, அற்புதங்கள் நிறைந்த புராணங்களோடு, இலக்கியங்களோடு கடவுளை ஒட்ட வைத்து, கடவுளுக்குக் கயமைத்தனத்தையும், கபோதித்தனத்தையும் கற்பித்து நாட்டை நல்குவது நல்லதா? அது மட்டுமல்ல; ஆண்டவனுக்கு அழகான மோகினி ரூபம் முதல் அழகற்ற வராகம்வரை படைத்துள்ளோம். ஏன் இவ்விதம் கடவுளை கபோதித்தனமாகக் கயமைத்தன்மைக்கு உட்படுத்த வேண்டும்?

பாருங்கள்—இன்று திருவரங்கத்திலே நடக்கிறது மட்டையடித் திருவிழா. அன்று ஆண்டவன் அரங்கநாதன் அக்காலத்திலே ஆலயத்திற்கு வருவார். கதவு மகாலட்சுமியினுல் அடைக்கப்பட்டிருக்கும். பகவான் கதவைத் தட்டுவார், பட்டாச்சாரி ரூபத்திலே. அம்மை உள்ளிருந்து சிறிது கதவை திறந்து (இன்னெரு பட்டாச்சாரி ரூபத்திலே) பார்த்து கணவன் மேல் சந்தேகப்பட்டுத் திறக்க மறுப்பார். உலகம் உண்ட மாதவன் உத்தமி லட்சுமியைக் கதவை திறக்க வேண்டுவார்; அம்மை வெளியே வந்து ஆண்டவனை மட்டையால் தட்டி உள்ளே

அழைத்துப் போவார். இது எவ்வளவு மடத்தனம் என்று மனதில் சிந்தியுங்கள் மாணவர்களே! இவ்விழா ஒரு முறையல்ல; ஒவ்வோர் ஆண்டும் நடைபெறுகிறது.

தூய கடவுளுணர்ச்சி பெற விரும்பும் நாம் இத்தகைய கயமைத்தனமான, காலித்தனமான, கபோதித்தனமான திருவிழாக்களைக் கடவுள் பெயரால் கொண்டாட விட்டு வைப்பது நல்லதா? அது கடவுளையே கயவனுக்கு கிறதல்லவா? இவ்விதம் நடப்பது நல்ல தீர்ப்பா?

நமக்கும் கிராமங்களிலே உள்ள மக்களுக்கும் இருக்கும் வித்தியாசங்களைக் கவனியுங்கள். நாம் எல்லோரும் பூமி உருண்டை வடிவம் என்று நன்றாய் அறிவோம். தந்தி, டெலிபோன், வயர்லஸ் முதலியவைகளைப்பற்றி நன்றாய் அறிவோம். ஆனால், கிராமத்திலே சென்று கிராம மணியக் காரனைப் பார்த்து, பூமி உருண்டையா தட்டையா என்று கேட்டால், பூமி என்னமோ தட்டைதான். அது, நம்ம பெரியவர்கள் எல்லாம்கூட எழுதி வைத்திருக்கிறார் கள். இரண்யன் தம்பி இரண்யாட்சதன்கூடப் பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு போனானும். அதை மகா விஷ்ணு பன்றியாகப் போய் திரும்பக் கொண்டுவந்தாராம். அதுதான் உண்மை என்று நம்அய்யர், அர்ச்சகர், புராணிகர் எல்லாம் சொல்கிறார்கள். ஆனால், இப்ப என்னமோ நம்ம பையன் பூமி உருண்டை என்று படிக்கிறான். அது கிறித்தவ படிப்பில்லையோ என்று பதில்சொல்வான். மேலும் அவனைப் பார்த்து, டெலிபோன், தந்தி, ரயில் ஓடுவது எப்படி என்றெல்லாம் கேட்டால் அவைகளைப் பற்றித் தனக் கொன்றும் தெரியாது என்பான். இவைகள் தற்கால வாழ்வுக்கு வேண்டியவை, தெரிந்து நன்கு புரிந்துகொள்ள வேண்டியவை. ஆனால், தெரியுமா என்று கேட்டால்— தெரியாது என்பான். இவ்வாறு தெரிந்துகொள்ள வேண்டியவை அவனுக்குத் தெரியாது. ஆனால், அவனைப் பார்த்து உலகம் எத்தனை என்றாலோ, பூலோகம், புவர்

லோகம், சுவர்க்கலோகம், நாகலோகம், நரகலோகம் என்று சொல்வான். நம்ப ராஜ யார் என்றால் தெரியாது; எங்கோ சீமையில் இருக்கிறராம் என்பான். ஆனால் தேவலோக ராஜா யார் என்றால் உடனே தேவேந்திரன் என்றும், எமனுக்கு என்ன வாகனம் என்றால், எருமைக்கடா என்றும், பூலோகமா இது பரலோகமய்யா! சுவர்க்கலோகம்தான் சுகலோகம், நரகலோகமா அப்பா! பயங்கரம் என்றும் பதில்கள் மிக வேகமாகக் கிடைக்கும். இப்படிப்பட்ட புரிந்துகொள்ள முடியாத, அவசியமற்ற விஷயங்கள் அவனுக்கு அனுபவித்தவன்போல மனப்பாடம். ஆனால் அறிவு வளர்ச்சிக்கும், அன்றாட வாழ்க்கைக்கும் வேண்டியவற்றில் அவன் அரைக் கால் பங்குகூட அறிந்திருக்கமாட்டான். ஏன் இவ்விதம் நகரிலே ஒரு நீதியும்—நாட்டில் ஒரு நீதியும் வழங்கப் படுகிறது? இந்த நீதி வருணாசிரம தருமம் வானுறவோங்கி வளம் பெற்ற காலத்தில் நல்ல தீர்ப்பாக இருந்திருக்கலாம்; இன்று இருக்க முடியுமா? மேலும், நீதி என்றும் நிலை பெற்றதா? நீதி நிலைமைக்குத் தக்கபடி மாறும் நிகண்டுக்குக் கட்டுப்பட்டு நிற்காது. சான்றாக, ரயிலுக்குத் தாமதமாகச் செல்பவன் ரயில் தவறினால் ரயில் சீக்கிரம் போய் விட்ட தென்று குறை கூறுகிறான். அது அவன் நிலைக்கேற்ற நீதி. ஆனால், அதே ரயிலில் அரைமணி முன்னதாகச் சென்று அமர்ந்திருப்பவன் அதைக் கட்டை வண்டிக்கும் கூட்ஸ் வண்டிக்கும் ஒப்பிடுகிறான். இது இவனது நிலக்கேற்ற நீதி.

கண்ணகி காலத்தில் கோவலன் நடத்தை நீதியாக இருக்கலாம். ஆனால் அது இக்காலத்திற்குச் செல்லாது. இக்காலக் கண்ணகி—கோவலனை சும்மா விடமாட்டாள். அல்லது அவன் தாய் தகப்பனும் சும்மா விடமாட்டார். அது போலத்தான் ராமன்—சீதை, நளாயனி, நளன்—தமயந்தி முதலியோர் காலத்து நீதி, அவ்வக் காலத்திற் கேற்றதாக இருந்தது. அது இப்போது செல்லாது.

நீதியின் சக்கரம் சதா உருண்டு கொண்டே இருக்கும். அதனை நாம் நம் அறிவைக்கொண்டு—நம் நிலைக்கேற்பத் திருப்ப வேண்டும்.

கடவுளைப் பற்றிய நீதியும் காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்றபடிதான் இருக்கவேண்டும். முற்காலத்திலே கடவுளைப் பற்றிய நீதி அவரவர் நிலைமைக்கு ஏற்றபடிதான் இருந்திருக்கிறது. சான்றாக, சைவம் தழைத்தோங்கத் தொண்டாற்ற வந்த சமயாச்சாரியர்களுள் ஒருவரான திருநாவுக்கரசரால் உருவம், நிறம் அற்றவனாகக் (இத்திறத்தான் இவ்வண்ணத்தான் எடுத்தியம்ப வொண்ணாத) காணப்படும் கடவுளை, மற்றொரு சமயாச் சாரியாராகிய சம்பந்தர், தோடுடைய செவியனாக்கி. விடையேற்றி, தூவெண்மதிசூட்டி, காடுடைய சுடலைப் பொடி பூசி, உள்ளங்கவர் கள்வனாக்கிக் காண்கிறார். இதில் எவருடைய தீர்ப்பு நல்ல தீர்ப்பு? இதில் எவருடைய தீர்ப்பைப் பின்பற்றுவது? கூறுங்கள்!

துறவறத்தைப்பற்றித் தாயுமானவர் கூறும்போது "கனியோ, காயோ, உதிர்சருகோ, கந்த மூலமோ, அதுவும் இன்றேல் நீரோ அருந்தி உயிர் வாழ்!" என்று கூறுகிறார். அவர் துறவியாயினும் முதலில் நினைப்பது நம்மைப்போலவே கனிவகை. இதிலென்ன துறந்த தன்மையுள்ளது? துறவறத்தைப்பற்றி பட்டினத்தடிகள், "இருக்குமிடந் தேடி என் பசிக்கு உருக்கமுடன் உணவு தந்தால் உண் பேன் இன்றேல் என்தேகம் இளைத்தாலும் ஏகேன். சிவன் மேல் ஆணை!" என்று மடாதிபதி மனப்பான்மையோடு பாடுகிறார். இதில் எந்தத் துறவறம் துறந்த நிலையில் உள்ளது?

நமக்குக் கடவுளுணர்ச்சி வேண்டும்; அது மாற்றி அமைக்கப்படல் வேண்டும்; கயமை—கண் மூடித்தனமற்ற தாக இருக்க வேண்டும். எல்லாம் வல்ல எம்பெரு

மானுக்குக் கோயில் ஏன்? குளம் ஏன்? பூமி ஏன்? மதம் ஏன்? சாஸ்திர சம்பிரதாயச் சடங்குகள் ஏன்? என்று நான் கேட்கிறேன். இவைகளால் எவ்வளவு பணம் பாழ்! பகுத்தறிவு பாழ்! கருத்துப் பாழ்!

பொருளாதாரத் துறையில் கல்வி கற்கும் மாணவர்களே! உங்களுக்கு ஒரு வேண்டுகோள். உங்கள் வாழ்க்கையில் என்றாவது ஒரு நாள் சிந்தியுங்கள்! இந்தக் கோயில், மதம், சாஸ்திரம், சம்பிரதாயச் சடங்குகளின் பேரால், நாட்டு மக்கள் செய்யும் செலவு எவ்வளவு என்று; அது நாட்டின் சமுதாயத்திற்கு எவ்வித நலனுமின்றி எவ்விதம் நாசமாக்கப்படுகிறது என்றும், கோயில்களின் பேரால் எத்தனைக் கோடி பணம் முடங்கிக்கிடக்கிறது என்றும், அதைக் கொண்டு எத்தனை எத்தனை பிர்லா திட்டம் போட்டு நிறைவேற்றலாம் என்றும் சிந்தியுங்கள்! சிந்தித்து அவை சரியா என்று ஒரு நல்ல தீர்ப்பு அளியுங்கள்!

நாட்டிலே நஞ்சை அதிகம். அதனால் ஆண்டவனுக்காக அதே நிலத்தைப் பண்படுத்திப் பாடுபடும் பண்ணையாளுக்கு அந்த பரமசிவன் பாதி வயிற்று கஞ்சி அளிக்கிறானா? இல்லை, ஏன்? தங்கம் விளையும் நாடு நந்தமிழ்நாடு. ஆகவே, தில்லை தாண்டவ மூர்த்திக்குத் தங்க ஓடு போட்ட சன்னிதானம். சரி; ஆனால் பாறை வெடிப்புக்கும் மணலின் சரிவுக்கும் அஞ்சாது பூமியிலிருந்து தங்கம் வெட்டி எடுப்பவன் தொழிலாளி. அவன் அறிவானா தங்க நகை? அணிய அவனுக்கு வசதியுண்டா? அல்லது அரை வயிற்றுக் கஞ்சிக்காவது இல்லாமல் இருக்கிறதா? அதுதான் இல்லை. அவன் தன் குடும்பத்தை அரைவயிறாவது நிரப்ப என்றும் அலைந்தாக வேண்டும். தான் எடுக்கும் தங்கத்தின் தரமும் அவனுக்குத் தெரியாது; மதிப்பை அவன் மனத்தாலும் அறியான். அவன் பாடுபடுவதெல்லாம் — வற்றின அரை வயிற்றுக் கஞ்சிக்குத்

தான். அவன் அறிந்ததெல்லாம் கந்தல் ஆடை, பொத்தல் குடிசை, இருண்ட வீடு, சுவையற்ற கஞ்சி, ஒட்டிய வயிறு, குழி விழுந்த கன்னம் முதலியவைகளே. நாட்டிலே ஏன் இந்த வேற்றுமை? ஏன் இந்த நிலைமை?

சமீபத்தில் நான் ஒரு பேசும் படக்காட்சியைப் பார்த்தேன். அதில் ஒரு ஆங்கில நாட்டு பெவின் திட்டத்திலே ஒரு பகுதியைச் செய்திப் படமாகக் காண்பித்தனர். அதில் ஒரு கையற்றவனுக்கு இடுப்பிலே கை செய்து வைத்து மற்றொரு கையில் அரம் கொடுத்து அசைத்துத் தொழிற்சாலைகளிலே தொழில் செய்யக் கற்பிக்கின்றனர்; காலில்லாதவனுக்குச் செயற்கைக் கால்களை ஈடு செய்கின்றனர் தம் அறிவைப் பயன்படுத்தி.

ஆனால் நம் நாட்டிலே! ஒரு மதவாதி ஓட்டலுக்குள் சென்று வயிறு புடைக்கத் தின்றுவிட்டு, வாயில் வெற்றிலை மென்றுகொண்டே வெளியே வருவார். வெளியே கையற்ற, காலற்ற, கண்ணற்ற பிச்சைக்காரர்கள் அவரிடம் காலணா வேண்டுவர். அதற்காக அவரை சாமீ என்பர்; மகாராஜா நீ நல்லாயிருக்கணும் என்று புகழ் மாலை பாடுவார். ஆனால் அவர்கள் நிலைகண்டு அவர் இரங்கார்; தாங்கள் செய்த கருமத்தை அவர்கள் அநுபவிக்கிறார்கள் என்று அவர் கருதிக்கொண்டு வறிதே செல்வார்; அவர்கள் அங்கம் பழுதுபட்டிருப்பதைப்பற்றிக் கவலைப்பட மாட்டார். ஆனால், அதே மதவாதி, கந்த கோட்டத்திலே உள்ள குதிரை வாகனத்தின் வாலோ, காளை மாட்டின் வாலோ, மயில் வாகனத்தின் தோகையோ ஒடிந்து விட்டதாகத் தெரிந்தால், அதற்காக மிக்க கவலைப்படுவார்; மனம் பதைப் பதைப்பார். உடனே ஒரு திருவோலை ஏந்திக் கொண்டு வீடு வீடாக, ஊர் ஊராக, நகர நகரமாக வேனும் சுற்றித் திரிந்து மக்களின் மடமையைத் துணைக் கொண்டு வாகனத்தைப் புதுப்பிக்கும் திருப்பணிக்காகத்

திரவியம் சேர்த்து ஒடிந்த பாகத்தை ஈடு செய்வார். வாகனத்தின் வால் உடைந்தது என்று சொல்வது பிழை; ஆனால் உடைக்கப்பட்டு விட்டது என்பதுதான் உண்மை உரை; உறுதியும்கூட. இத்தகைய குறைமதியாளர்கள் மக்கள் கை காலற்றிருப்பதைக் கண்டு கவலையுறார்; அவர் தம் விதியை-இவர் தம் மதியால் மாற்ற முன் வருவார். ஆனால், எல்லாம் வல்ல எம்பெருமானின் எருதுவாகனம் பழுதுபட்டால் அதைப் புனருத்தாரணம் செய்யப் புறப்படுவார் புளகாங்கிதத்தோடு. என்னே இவர்தம் இழிநிலை! இத்தகைய மக்கட் சமுதாயம் முற்போக் கடையுமா? அல்லது பெவின் திட்டப்படி கை காலற் றோரைக் கருத்துடன் கவனித்து ஆவன செய்யும் நாடு முன்னேறுமா? நல்ல தீர்ப்பு அளியுங்கள் தோழர்களே! மக்களை மக்களாகக் கருதி, மகேஸ்வரனுக்கு மண்டபங்கள் கட்டும் மக்கள், மடமையை விட்டு என்றாவது மதியைப் பெறுவார்களா? நம் உழைப்பு, ஊதியம், அறிவு, ஆற்றல், சிந்தனை, சிறப்பு, கருத்து, கல்வி யாவும் இனத்திற்கு இம்மியும் பயன்தராத இழிமுறையிலே சென்றால், இத்தாலி நாட்டைக் கண்டு டாண்டன் என்னும் கவி 'எழிலுள்ள நாடே! எடுத்தாள்வோர் நாடாளுயே!' என்று இரங்கியதுபோல் நாமும் நாட்டைக் கண்டு இரங்கத்தான் வேண்டும்.

மற்றும் நமது இலக்கியங்கள் நமக்குத் தேவையா? அவற்றால் மதி பெருகுமா? மடமை மறையுமா? என்று ஒரு நல்ல தீர்ப்புக்கு வரவேண்டும்.

புராண இதிகாசங்களைப் பாடும் இலக்கியங்களின் அவசியத்தைப்பற்றிக் கூறி, அவற்றைப் படிக்க வேண்டும் என்று பறைசாற்றினோர் யாவரும் வெவ்வேறு காரணங்கள் கூறினர். அதில் எதை நம்புவது? எதைப் பின்பற்றுவது? அதுதான் முடிவா? முதலாவதாக, "அவைகள் புண்ணிய

சரித்திரங்கள். அதனால் அவற்றை அறியவேண்டும்" என்றனர். இது திரு. மறைமலையடிகள் காலமாகும். பின்னர், "அவற்றில் உள்ள பாத்திரங்கள் சற் பாத்திரங்கள்; ஆகவே அவற்றைப் படிக்கவேண்டும்" என்றனர். இது, திரு. வி. கலியாணசுந்தரனார் காலம். அடுத்த படியாக "அவ்விலக்கியங்களிலே காவியரசம், கலை உணர்வு, பண்பாடுகள் சொட்டுகின்றன. அதனால் அவற்றைப் படிக்க வேண்டும்" என்றனர். இது, திரு. ரா. பி. சேதுப் பிள்ளையவர்கள் காலமாகும். இதனை இன்னும் சிலர் வேறு மொழிகளிலே கூறுவர். அதாவது "அவைகளிலேயுள்ள பாவத்திற்காகப் படியுங்கள்" என்று. இது, டி. கே. சிதம்பரநாத முதலியார் காலம். இவை யாவற்றையும் கடந்து 'மேலே கூறப்பட்டவைகட்காவது படிக்கா விட்டாலும் அவைகளிலுள்ள நீதிகட்காகப் படியுங்கள்" என்கின்றனர். இது, திரு. சோமசுந்தர பாரதியார் போன்ற புராணமும் பகுத்தறிவும் கலந்தோர் காலம்.

புண்ணிய சரிதம், சற்பாத்திரங்கள் நிறைந்த சரிதம், காவியரசம், கலையுணர்வு, பண்பாடு பொருந்திய காவியம், பாவமுள்ள காவியம் என்ற நிலைகளெல்லாம் கடந்து நீதிக்காகவாவது இவைகள் நிலைத்திருக்க வேண்டும் என்ற நிலைமைக்கு வந்துள்ளது இன்றைய இலக்கியங்களுடைய நிலை மற்றும் சில பகுத்தறிவாளர் கேட்கும்போது மட்டும் இவர்கள் சில தத்துவார்த்தங்கள் கூறித் திகிடுதத்தம் செய்கின்றனர். இவர்கள் கூறும் தத்துவார்த்தங்கள் நாட்டு மக்களிடை பரவியுளதா என்றால், இல்லை, இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அப்படியிருக்க, இவர்கள் கூறும் தத்துவங்களால் யாருக்கு என்ன பயன்? சான்றாக, புலவர்கள், "இராவணனுக்குப் பத்துத்தலைகள் இல்லை. அது கவியின் கற்பனைத் திறன். இராவணன் பத்துப்பேர் ஆற்றலையுடையவன். பத்துவித குணமுள்ளவன். ஆகவே, அதனைப் பத்து முகங்கள் என்று பாடியுள்ளார். அதிலுள்ள

பண்பாடு, பாவம்தான் என்னே! என்னே!" என்று இறும்பூதெய்துவர். நான் கேட்கிறேன் உங்களை, நீங்கள் கிராமத்திற்குச் சென்று கிராமத்தானிடம், "இராவணனுக்குப் பத்துத் தலைகள் இல்லை. அது வெறும் கற்பனை கருத்துக்குக் களிப்பூட்ட கையாளப்பட்ட கைத்திறன்! நாங்கள் இராமாயணத்தை நன்ருகப் படித்தோம்; பட்டம் பெற்றுள்ளோம்" என்று கூறுவீர்களா? பத்துத் தலைகள் என்பது பிழை என்பதைக் குறித்துப் பேசப் புகுந்த உங்களால் அவர்கள் கல்லடிகட்குப் 'பத்துப்' போட முடியுமா என்றுதான் ஏங்குகிறேன். ஏன்? எதனுல்? அவன் உங்கள் பேச்சை நம்பாததினுல், ஏன் நம்ப மாட்டான்? அவன் ஏட்டிலே படிப்பது பத்துத் தலைகள் என்று; புராணப் பிரசங்கத்திலே கேட்பது இராவணனுக்கு பத்துத் தலைகள் என்று. ஆகவே உங்கள் தத்துவார்த்தத்தால் என்ன பயன் என்று கேட்கிறேன். எனவே இவை மாற்றப்பட வேண்டுமென்ருல் குற்றமா?

"பார்ப்பானை அய்யரென்ற காலமும் போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே,'

என்று காலத்திற்கு ஏற்ற கருத்துடன் பாடிச் சென்ருர் பாரதியார். அதைக் கண்டு உங்கட்கு உண்மை தெரியவில்லையா? நம்முடைய இலக்கியங்களிலே உள்ள நீதி நமக்குத் தகுமா? நமக்குத் தேவையா? என்று நல்ல தீர்ப்பு அளியுங்கள். எடுத்துக் காட்டாக, கம்ப ராமாயணத்திலே உள்ள நீதியைக் காண்மின். இராமனுக்கு முடிசூட்டுவிழா நிச்சயிக்கப்பட்டது. தசரதன் தன் மந்திரி சுமந்திரனை அழைத்து இராமனுக்கு அரச நீதிகளை அறிவுறுத்துமாறு ஆணையிட்டான். சுமந்திரன் இராமனுக்கு கூறுகிருன்; "அந்தணர் ஏவுகின்ற முறைப்படி நட" என்று. இது இந்த காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்றதா என்று சிந்தியுங்கள். இந்த தீர்ப்பு "நல்ல தீர்ப்பா?"

இங்கு நம் புலவர் குழாங்கள் ஒன்று கூற முன்வருவர் மிக ஆவலுடன். அதாவது கம்பன் கண்ட அந்தணர் பார்ப்பனக் குலத்தைக் குறிப்பதல்ல—ஆனால்,

"அந்தண ரென்போர் அறவோர்–மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"

என்ற திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக உள்ள அறிவாள ரையே அண்டும் என்பர். அந்தணர் என்னும் சொல் இங்கு அறிவாளரைக் குறிப்பதன்று! குலத்தை குறித்ததேயாகும் என்றே துணிதல் வேண்டும். எடுத்துக் காட்டாக வேண்டுமானால் சுந்தரர் பாடிய திருத்தொண்ட திருவந்தாதிக்கு வாருங்கள். அதிலே,

'தில்லைவாழ் 'அந்தணர்' தம்
அடியார்க்கும் அடியேன்'

என்ற அடியிலே அந்தணர் என்பது நம் புலவர் பெருமக்கள் புகலும் புனிதரையே குறிக்கிறதா என்று பாருங்கள். இல்லை! அது குலத்தைத்தான் குறிக்கிறது என்பது முக்காலும் உண்மை. அவ்விதம் குலத்தைக் குறிக்கவில்லை என்றால், அறிவாளராகிய தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்று கூறிய அதே வாயால் அடுத்த அடியிலேயே "திருநீலகண்ட 'குயவனார்க்கும்' அடியேன்" என்று கூறி குயவனார்க்கு என்ற குலத்தைக் குறிக்கும் சொல்லை வைத்திருக்கமாட்டார். ஏன்? 'அந்தணர்' என்பது செந்தண்மை பூண்டொழுகும் செம்மல்களையே குறிப்பதானால், திருநீலகண்டரையும் அந்தணரென்று குறித்திடுதல் வேண்டும். அவ்விதம் குறிக்காதது ஏன்? அவர் அந்தணர் என்று அழைக்கப்பட அவ்வளவு அருகதையற்றவரா? சிவநேசச்செல்வர் அல்லவா? அம்மையப்பனின் அருள்திரு திருவிளையாடல் அவரை அண்டவில்லையா? இல்லை என்று எவரும்

மறந்தும் மறுக்க முடியாது. எனவே, இங்கு அந்தணர் என்பது குலத்தைக் குறிக்கும் சொல்லே என்று கொள்வதே முறை.

நிற்க, சுமந்திரன் இராமனிடம் 'அந்தணர் ஏவுகின்ற முறைப்படி நட; ஏன் எனில், விதிம் அவர் ஏவ நிற்கும், அவரால் அரசை ஆக்கவும் அழிக்கவும் முடியும்' என்று கூறுகிறுன், இது நல்ல நீதியா? நடக்குமா? நடக்க விடலாமா? என்று சிந்தியுங்கள் எதிர்கால நீதிபதிகளே!

பிறிதொரு புலவர், 'கம்பன் காவியத்திலே தமிழ் நாட்டைக் கண்டான்' என்று கம்பன்பால் மாருக் காதல் மிகக் கொள்கின்றுர். ஆனுல் தமிழ் நாட்டிலே கம்பன் கண்ட காட்சிகள் இருந்தனவா? பாருங்கள்! கம்பன் காவியத்திலே மாதர் வர்ணனை மிக மோசம். மனத்தாலும் நினைக்கொணுத மாசுடையது. மிதிலே, அயோத்தி முதலிய நகரங்களிலே மாதர்கள் மது குடித்து தம் நிலே மறந்து ஆடிக்கொண்டிருந்தனர்; பெண்கள் பந்தயம் வைத்து சூதாடினர். பந்தயத்தில் தத்தம் காதணி, கையணி முதலிய யாவற்றையும் தோற்றபின் தத்தம் மேலாடைகளையும் பணயம் வைத்து ஆடுகின்றனராம்! இதுதாஞ கம்பன் கண்ட தமிழ்நாட்டு மகளிர் மாண்பு? இத்தகைய இழிசெயல்கள் தமிழ்நாட்டிலே இருந்தனவா? இருந்தது என்று இயம்ப பண்டை ஏட்டில் இடம் உண்டா? அல்லது இத்தகைய தமிழ்நாடு நமக்கு வேண்டுமா? வேண்டும் என்று எவரும் விழையார் என்பது திண்ணம்.

மற்றும் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் மகா மோசம்; மற்றெங்கும் காணமுடியாத காமரசக் களஞ்சியம். எல்லாம் பாரீஸ் நிர்வாணப் படங்களைப் பாடும் பாசுரங்களாகவே பரிணமிக்கின்றன. சான்றுக 'அவருக்கு, மங்கையர் கழலடி வருடி கருத்தறிந்த

பின் அரைதனிலுடைதனை அவிழ்த்து ஆங்குள அரசிலை தடவி' எனப் போகிறது. இவைகளை வேண்டாம் என விழைவோர் ஏன் இவைகளை விரித்துப் பாடவேண்டும்? இவைகள் பக்திப் பாடல்களா? கொக்கோக வைபவம் என்று கூறினால் மிகப் பொருத்தமாக இருக்கும். அதற்குத் தனித்தனி இலக்கியங்கள் இருக்க வேண்டும்.

நமக்குக் காமரசம் கலவாத, மதம் கலவாத, மதியை வளர்க்கும் இலக்கியங்கள் தேவை. காலத்துக்கும் கருத்துக்கும், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் தொடர்புள்ள ஏடுகள் தேவை.

'ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்' என்ற மனப்பான்மை தேவை. அருளை மட்டும் கேட்கும் ஆண்டவன் தேவை, கோயில், குருக்கள், குடும்பம், கூத்தி, மானியம், அதிர்வெடி கேட்கும் ஆண்டவன் வேண்டாம் நமக்கு. கோயிலுக்கு வெளியே வறுமை, கொடுமை, இல்லாமை. கோயிலிலே மலைபோன்ற செல்வம், இன்பம் என்றிருக்கும்—நிலையற்ற நிலைமை வேண்டாம். கடவுளுக்கு பேசும்சக்தியிருந்தால் அவர் உங்களைப்பார்த்துக் கேட்பார், 'அடே அறிவற்றவனே! நான் இந்த அண்ட சராசரங்களைப் படைத்தேன், நீரைப் படைத்தேன், அதிலே முத்தைப் படைத்தேன், அறிவைப் படைத்தேன், எதையும் எண்ணிச் செய்ய, பகுத்துச் செய்ய உனக்குப் பகுத்தறிவைப் படைத்தேன். ஆனால், இவற்றிற்குப் பதிலாக நீ எனக்கு அரை வீசை வெண் பொங்கல் படைக்கிறாயா? நாட்டிலே உள்ள நலிந்தோரைப் பார் என்றுதான் கூறுவார், அவர் அறிவுள்ள கடவுளானால்.

கடவுளை நாங்கள்தான் குறை கூறுவதாக நினைக்க வேண்டாம். நெடுங்காலத்திற்கு முன்னரே உங்கள் இரட்டைப் புலவர்கள் கூறியுள்ளதை நினைவிற்குக்

கொண்டு வாருங்கள். அவர்களில் ஒருவர் பாடுகிறார் பசியால் மிக நொந்து, 'தேங்கு புகழாங்கூர் சிவனே யல்லாளியப்பா நாங்கள் பசித்திருக்க ஞாயமோ' என்று. நாத்திகம் பேசி நாத்தழும் பேறிய நாங்கள் பசித்திருக்க லாம். ஆனால் சிவநேசர்களான இரட்டைப் புலவர்கள் பசித்திருக்கலாமா?

இதற்கு சிவனே விடையளிப்பது போன்று மற்றொரு புலவர் பாடுகிறார்.

—போங்காணும்

கூறுசங்கு தோல்முரசு கொட்டோசை யல்லாமற்
சோறுகண்ட மூளியார் சொல்—என்று!

மற்றும் அதே இரட்டையர்கள் வறுமையால் வாடி வருந்தினபோது பாடுகின்றனர்.

கேட்ட வரமளிக்கும் கீர்த்தியுள்ள தெய்வங்காள்!
கூட்டோடே எங்கு குடிபோனீர்—என்று.

அதுவும் கூட்டோடே—குடும்பத்தோடே எங்கே குடி போனீர்கள் என்று கேட்கின்றனர். இதற்குத் தெய்வத்தின் விடையாக மற்றவர் பாடுகிறார்.

—பாட்டாய் கேள்
செல்கால மெல்லாஞ் செலுத்தினோம் அல்காலங்
கல்லானோஞ் செம்பானோங் காண்—என்று.

இது எத்துணை உண்மை என்று சிந்தியுங்கள்!

மற்றும் சிலர், 'நம் நாட்டில் எல்லாம் உளது. நமது அதர்வண வேதத்தில் இருந்துதான் ஜெர்மானியன் பறக்கும் குண்டு, ஆகாய விமானம் முதலியவற்றைத் தெரிந்து கொண்டான். நம் நாட்டில் இல்லாத

விமானமா? என்னென்ன அஸ்திரங்கள் இருந்தன. அக்கினியாஸ்திரம், வாயுவாஸ்திரம், வருணாஸ்திரம் என்று! இன்று என்ன புதுமையாய் வந்துவிட்டது?' என்று நாட்டைப் பற்றிப் பெருமையோடு பேசுகின்றனர். ஆனால், அந்த பழம் பெருமை எங்கே இப்போது? ஏன் அந்நியனுக்கு கோட்டைவிட்டு ஆந்தைபோலவிழிப்பது? இதனால் உண்மையிலேயே நமக்குப் பெருமையா? இல்லை சிறுமைதான்: சுயமரியாதைக்குப் பங்கம்தான். இது, அந்நியனுடன் கொஞ்சிக் குலாவும் அழகிய அணங்கைக் கண்டு அருகில் இருப்பவனிடம், 'இவள் யாரோ என்று எண்ணாதேயும்; இவள் நம்முடைய மனைவியாக இருந்தவள்தான்! இப்போது இவளை அவன் ஏமாற்றி அழைத்துச் சென்றுவிட்டான். ஆனாலும் என்ன? என்னிடம் இருந்தவள்தானே! இதனால் எனக்கு எவ்வளவு பெருமை?' என்று கூறுவதற்குச் சமமாகும் என்பது திண்ணம்.

மக்கள் சமுதாயத்தைச் சீர்திருத்தப் பலப்பல அறிஞர்கள் அரிய பெரிய வேலை செய்தனர். ஆனால் அவர்கள் யாவரும் தோற்றனர், அடிப்படையை ஆராயாததால். எனவே, இளந்தோழர்களே! வருங்கால உலகம் உங்களைத்தான் நம்பி இருக்கிறது. ஆகவே, நீங்கள் உங்களுக்கு அளித்துக்கொள்ளும் 'நல்ல தீர்ப்பால்' இனத்தை எதிர்காலத்திலே எழுச்சியுறச் செய்வீர்களாக! பெரியோர்களை நம்பின காலம் போய்விட்டது. புதுமை, இளைஞர்களால்தான் நிகழவேண்டும்; நிகழமுடியும். சீனாவிலே சன்யாட்சென், இளைஞர்கள் உதவியால்தான் பழைய சீனாவை முடித்துப் புதிய சீனாவை உண்டாக்கினார். ஆண்களின் ஜடையைக் கத்தரித்தார். ஒரே ஆண்டவனை வழிபடும்படி செய்தார்.

'ஐரோப்பாவின் நோயாளி'யாகக்கருதப்பட்ட துருக்கி இன்று தலை நிமிர்ந்து நிற்பதற்குக் காரணம் கமால்பாஷா இளைஞர்கள் உதவியை பெற்றதாலேதான்.

( தோழர்களே! நீங்கள் "நல்ல தீர்ப்பு" அளியுங்கள். இன்று மக்கள் சமுதாயத்தை மாற்றவல்ல தீர்ப்பு, மனிதனை மனிதனாக வாழ வைக்கும் தீர்ப்பு, விதியை விரட்டும் தீர்ப்பு அளியுங்கள். அதை அமுலுக்குக் கொண்டு வாருங்கள்! அதற்குத் தடையாக கடவுளே வரினும் கலங்காதீர்! சிவனே வரினும் சிதறுதீர்! மதமே வரினும் மயங்காதீர்! கலை கலை என்று இனக்கொலை செய்தால்—கலைக் கொலை செய்யுங்கள்! மானமே பெரிதெனமதியுங்கள்! சிந்தித்து நல்ல தீர்ப்புக் கூறுங்கள்! செயலில் காட்டுங்கள்!! )

—நன்றி. வணக்கம்.

# கனி—3

தோழர்களே !

**நான்** குடந்தை வந்து நெடு நாட்களாகின்றன. குடந்தை வாசிகள், மகாமக காலத்தில்—மாபாதகங்களைத் தீர்த்து வைக்கும் மகிமை பெற்ற மகாமக குளத்தில் மூழ்கித் தத்தமது பாபங்களை எல்லாம் போக்கிவிட்டிருக்கும் புனிதமான காலத்திலே வந்துள்ளேன். ஆம்; முன் வந்த முறைக்கும் இப்போது வந்த முறைக்குமிடையே பலப்பல மாறுதல்கள். அப்போது சண்டை வெகு மும்முரமாக நடந்துகொண்டிருந்தது; இப்போது சண்டை நின்று சமாதானம் நிலவுகிறது. அன்று நாட்டிலே ஆகஸ்ட் கலவரம் எதிரொலித்துக் கொண்டிருந்தது. இன்று கலவரம் நின்று, காங்கிரஸ் சர்க்கார் ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. இப்படி நானாவித மாறுதல்கள் நடந்துள்ளன; நடக்கின்றன. மாறுதல்கள் இயற்கையாக நிகழும்; நிகழ்ந்தே தீரும். இதில் ஒன்றும் தவறில்லை.

காங்கிரஸ் சட்டசபை பிரவேசத்தால் சந்தோஷமோ, சலிப்போ இல்லை நமக்கு. அதிகாரத்தில் அமர்வதால் அகமகிழ்வோ, அழுக்காறோ அடைபவர்களல்லர் நாம்; அந்த சட்டசபை, அதிகாரம் யாவும் நம் கட்சி கண்டவை

தான்; ஒரு பதினேழு ஆண்டுகள் அனுபவித்தவைதான்; இன்று அவை வேண்டாம் நமக்கு—வேறுபல வேலைகள் இருப்பதால், இன்று நம் வேலைகள், நாட்டிலே இன உணர்ச்சியைத் தட்டி எழுப்புவது, இன இழிவைப் போக்குவது, திராவிட நாட்டுக் கிளர்ச்சிக்கான ஆக்கம் தேடுவது. திராவிடப் பண்பை மக்களிடைப் பக்குவமாகப் பரப்புவது, புதுமை காண்பது, பூசல்களை ஒழிப்பது, புத்துலகம் சமைப்பது, இன்னபிற.

நம் எதிர்கால வேலை மகத்தானது, மட்டற்றது, மடமையைப் போக்குவது, கடமையைக் கடைப்பிடிக்கச் செய்வது; இன உணர்ச்சி. திராவிடர் நாம் என்ற எழுச்சியை ஏற்படுத்துவதுதான்; திராவிட நாட்டைத் தனி நாடாகக் காண்பதுதான்; இதுதான் நம் திட்டம்; குறிக்கோள். நாங்கள் சொல்வதை சற்றே கேளுங்கள்! பரிசீலனை செய்து பாருங்கள் பகுத்தறிவுடன்! கூர்ந்து நோக்குங்கள் குறையுள்ளதா என்று. பின்னர் பின்பற்றுங்கள் எம்மை, எம் திட்டத்தை, குறிக்கோளை. எமக்காக அல்ல, உங்களுக்காக! உங்கள் நாட்டின், சமுதாயத்தின் உயர்வுக்காக; திராவிடத்தின் சீரும் சிறப்பும் ஓங்குவதற்காக, அல்லல்கள் அழிந்தொழிவதற்காக. ஏழ்மை போவதற்காக; இன்பவாழ்வு வாழ்வதற்காக.

சட்டசபையின் சிறப்பை, மந்திரி மண்டலத்தின் மாண்பை, நிர்வாக சபையின் நிம்மதியை, அதிகாரத்தின் ஆனந்தத்தை — காங்கிரஸ் வேண்டுமானால் கண்டு களிக்கட்டும்; பெற்று பெருமிதமடையட்டும். நாம், மறந்த இன உணர்ச்சியை மறுபடி தேடவும், இழந்த இன்பத்தைத் திரும்பப் பெறவும், தேய்ந்த இலட்சியத்தைப் புதுப்பிக்கவும், மருண்ட மனதை மலர்விக்கவும், கொண்ட கருத்தை முடிக்கவும்— அதன் பின்னால் நம்மைப் பார்க்கத் தேடிவருவார்கள், அவர்கள் — இது நிச்சயம்.

எல்லா மாகாணங்களிலும் கொட்டு முழக்குடன் கொடியேந்திக் கோலாகலத்துடன் பதவி ஏற்றது காங்கிரஸ்! குறைந்தது ஒரு நூற்றாண்டுக்கு எங்களை எவரும் அசைக்க முடியாது என்றெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்தது அப்போது. ஆனால் நடந்தது என்ன? இரண்டு ஆண்டுகட்கெல்லாம் தானே வலிய ஓடிப்போக நேர்ந்தது

நம் மாகாணத்தில் மட்டுமென்ன — ஆச்சாரியார் அடைந்த அல்லல்கள், கேட்ட நிபந்தனைகள். குறைவற்றவைகளா? அவர் சென்ற இடமெல்லாம், கருப்புக் கொடியுடன் — கண்டனக் கூட்டங்கள். திரும்பிப் பார்த்தால், செய்த தீச்செயல்களைப்பற்றிய கண்டனக் கூச்சல்; புகையிலை வரி, விற்பனை வரி, இன்னபிற — எல்லாவற்றிலும் எதிர்ப்பைக் கண்டார். அவர் புகுத்தின கட்டாய இந்தியும், நம்மை நாம் உணர்ந்து உணர்ச்சி பெற்று. உறுதியுடன் உழைக்கத்தான் உதவிற்று; திராவிட உணர்ச்சி தலையெடுக்க உதவிற்று. அவர் அடக்குமுறையால் நம் உணர்ச்சி மாறவில்லை; மாறாக உத்வேகம் பெற்று ஓடியது ஊற்றுப்போல. இன உணர்ச்சி பொங்கி வழிய, நம்முடைய தியாகம் தெரிய, உண்மை வெளிப்பட, உழைப்பு பலனளிக்க — கட்டாய இந்தி நல்ல வாய்ப்பாக விளைந்தது. நம்மில் எத்தனை எத்தனை தாய்மார்கள், சிறைக்கோட்டம் புகத் தயார் என்பதை அது எடுத்துக் காட்டிற்று, எத்தனை வாலிபர்கள் இப்போராட்டத்திற்கு இசைந்துள்ளார்கள் என்பதை அது விளக்கிற்று — தாலமுத்து, நடராசன் போல் தமது உயிரையும் தரும் மணிகளின் ஒளி தெரிய அது உதவிற்று. ஆயிரத்தொருவர் அன்று சிறையில் அவதிப்பட வைத்தது. அதன் பலன் இன்று ஐயாயிரவருக்கு மேல், நான் — நீ என்று, சிறை செல்வதற்கு முந்தும் உணர்ச்சியைத் திராவிட இனத்திலே தட்டியெழுப்பியுள்ளது; இன எழுச்சித் தீ நாடெங்கும் பரவியுள்ளது. இதைக் கண்டு தேசீயவாதிகள் சலிப்

புறலாம். விசாரமும் அடையலாம். நமக்கென்ன அதைப் பற்றி! நம் வேலை நமக்கு. நாடோடிகளல்ல நாம். நாடு இல்லையே என்று நாதியற்று நலிய. தொடை நடுங்கிகளல்ல நாம். தோல்வி கண்டு தேம்பியழ. நம் மிடம் தைரியமுண்டு; போராட நெஞ்சுரமுண்டு — காரணம்? துடுக்குத்தனமா? துன்மார்க்கமா? அல்ல, பத்திரிகை பலமா; பிரசார பலமா? அல்ல. அவை எல்லாம் காங்கிரசுக்குத்தான் அமோகமுண்டு. நம்மிடம் அமைப்பு இல்லை, பத்திரிகை இல்லை, பிரசாரமில்லை, பணம் இல்லை, பதவி இல்லை. பின் எதனால் இத்தனை வீரம் — தீரம் — நெஞ்சுரம் — எல்லாம்? நம்மிடம் நீதி நிறைந்திருக்கிறது! மானிட உரிமை மட்டற்று விளங்குகிறது, ஜீவசக்தி இருக் கிறது என்ற காரணங்களால்

காற்று வீசாதபோது வேண்டுமானால் விசிறி கொண்டு காற்றைப் பெறலாம். விசிறினால் வரும் காற்றைத் தடுக்கலாம் — விசிறியை வீசி எறிவதால். ஆனால், இயற்கையாக வீசுவதைத் தடுக்க, ஏன் என்று கேட்க, எவரால் முடியும்?

கணக்கற்ற காலமானாலும் தொடர்ந்து போராட் டத்தை நடத்த நெஞ்சிலே உரம் வேண்டும், தியாகம் செய்ய திட்டம் வேண்டும். நெஞ்சு நினைவற்றிருக்கும். மனம் மறந்திருக்கும், அறிவு அசட்டையாக இருக்கும் — இந்த நேரத்திலே, இனப்பற்றை, இலட்சியத்தை, குறிக் கோளைச் சற்றுத் தேடித் தடவி நினைவூட்டுகிறேன் — உணர்ச்சி கொள்ளுங்கள், எழுச்சி பெறுங்கள் என்று.

இன்று இன உணர்ச்சி, எதிர்காலத்திலே எதற்கும் சலியாத, சரியாத அளவுக்கு எழுச்சி பெற்று வளர்ந் துள்ளது. ஆம்! நமது இயக்கத்திலே அறுபதினாயிரம் அங்கத்தினர்கள் சேர்ந்துள்ளனர். இத்தகைய என்

ணிக்கை — பனகால், தியாகராயர், நாயர் போன்ற பெரு மக்கள் காலத்திலேகூட கிடையாது. ஒரு சமயம், பனகால் ஒரு கூட்டத்திலே பேசும்போது ''உங்கள் நீதிக்கட்சியில் எத்தனை அங்கத்தினர் உளர்'' என்று ஒரு காங்கிரஸ் தோழர் கேட்டார். அதற்குப் பனகால் அரசர், காங்கிரசில் எத்தனைப் பேர் என்று கேட்க, ஒன்றரை லட்சம் என்று அவர் கூறினார் — அந்த ஒன்றரை லட்சம் போக, மற்றப் பேர் நீதிக் கட்சிக்காரர்தானே! என்று பனகால் விடையிறுத்தார் என்று. சிலர் ஏளனம் செய்தனர். அந்த நிலையில் நாம் இல்லை. நமக்குப் பத்திரிகை, பிரசாரம், அமைப்பு என்பன எவையும் இல்லை. இப்படியிருந்தும் ஒரு சில மாதங்கட்குள்ளே அறுபதினாயிரம் பேர் சேர்ந்துள்ளனர் நம் கழகத்திலே. இது நீதிக்கட்சியின் வரலாற்றிலேயே பெருமையான கட்டம் என்றால் மிகையல்ல. எண்ணிப் பாருங்கள், எப்படிப்பட்ட அங்கத்தினர்கள் இவர்கள் என்று. இவர்களை அங்கத்தினர்கள் என்பது அவ்வளவு பொருத்த மல்ல, தொண்டர் படை என்பது மிகப் பொருந்தும். எதற்குத் தொண்டர் படை? தேர்தல் வேலைக்கா? எடுபிடி ஆட்களாகவா? மலர்மாலை சூட்டி ஆரவாரம் செய்யவா? கவர்னரின் கைலாகு பெறுவதற்கா? மன்னர் பேட்டிக்காகவா? இல்லவே இல்லை. பின் எதற்கு? இனத்துக்காக இரவு பகலும் பாடுபட, அவசியமானால் சிறைக் கதவுகளையும் சென்று தட்டுவதற்குத் தயாராக இருக்கும் காளைகள் இவர்கள். எனவே, நம் எதிர்கால வேலைத் திட்டங்களெல்லாம், காங்கிரசின் கபடத்தினின்றும் விலகி, கருத்தோடு கடமையைச் செய்து, வெற்றி—தோல்வி பற்றிக் கவலையின்றி, நம் நிரந்தரப் பிரச்னையைத் தீர்க்க, திராவிட நாட்டைத் தனி நாடாகக் காண, உறுதியுடன்— ஊக்கத்தோடு உழைப்பதற்கே.

அடிப்படையை அடைவதைத் தவிர நமக்கு வேறு வேலை இல்லை. திரவிட நாடுதான் நம் எதிர்கால வேலைத்

திட்டம், அதை அடைந்தே தீருவோம். எனவே, நாம்—நம்மில் எவரும், எக்காலத்தும், எந்நிலையினும் "நான் திராவிடன்" என்று சொல்லவும்—எண்ணவும் தயங்கக் கூடாது, அது பிழை என்று பின்வாங்கக் கூடாது.

ஆம்! திராவிடர் என்ற இனஉணர்ச்சி நம்மிடை எழுச்சியடையவேண்டும். எனவேதான் ஜஸ்டிஸ் கட்சியைத் திராவிடர் கட்சி என அழைக்கிறோம். இது நம்முடைய மாற்றுத் தோழர்களிடையே மாற்றத்தையும், கூட்டுத் தோழர்களிடையே கொந்தளிப்பையும் உண்டாக்கியது, அடிப்படையில் மாற்றம் செய்தோம் என்று. அன்று நீதிக் கட்சி ஆரம்ப காலத்திலே, நீதி கேட்கும் சபையாக, ராஜி பேசும் சபையாக, இன்னும் சொல்ல வேண்டுமானால், ஒரு வகுப்பாரின் பஞ்சாயத்துச் சபையாக விளங்கியது. நூற்றுக்குத் தொண்ணூற்று ஏழு பேர் பாடுபடுபவர்கள் நாங்கள்; மூன்று பேர்களாக உள்ள ஆசிரியர்கள் உயர்ந்த பதவிகளிலே அமர்ந்து ஆளுகின்றீர்களே இது நீதியா? பெரும் பெரும் உத்தியோகங்களில் ஆரியர்களே அதிகம்; மற்றவர்கள் மிகமிகக் குறைவு. இது முறையா? எங்களுக்கும் அதிகாரத்தில் பங்கு வேண்டும், தாருங்கள் என்று, நீதிக் கட்சி கேட்டது அன்று. நாங்கள் உழைக்க, வேறு ஒருவர் உண்டு களிப்பதா? இது நல்லதா என்று நீதி கேட்டது? கூக்குரலிட்டது. ஆனால் பலன்? ஆள்வது ஆங்கில சர்க்கார்; ஆனால் அதை ஆட்டி வைப்பது ஆரியம், நீதி கிடைக்குமா அங்கு? நாம் ஏன் அவரிடம் நீதி கேட்க வேண்டும்?

புலியிடம் மான் மன்றாடி மனம் வைத்து உயிர்ப் பிச்சை அளிக்கும்படி வேண்டுவது இயற்கை; நடக்கக்கூடியது. ஆனால், புலி மானிடம் பயந்து, அடங்கி ஒடுங்கி, நடுங்கி உயிர்ப்பிச்சை கேட்பதென்றால் இது விவேகமுள்ள செயலா? மிக விசித்திரமானதல்லவா? அது போலத்தான் அன்று பார்ப்பனரல்லாதார், பார்ப்பனரிடம், தம்மை

நல்ல முறையிலே நடத்தித் தம் வகுப்புக்கு நீதி வழங்கும்படி கேட்டனர். இது விசித்திரமான காரியம். ஏன்? பெரும்பான்மையோர் சிறுபான்மையோரிடம் பதுமை வேண்டி நின்றது விசித்திரம்; எனவே வழங்கப்படவில்லை நீதி. ஏன் இன்னும் அந்த இழிநிலை நம்மிடம்? இந்த நாட்டுக்கு உரிமையாளரான இனம், நாகரீக மிகுந்த இனம், நாடாண்ட இனம், நாடாளப்போகும் இனம், சரித்திரப் பிரசித்தி பெற்ற திராவிடர் இனம், இலக்கியத்திலே இன்பம் கண்ட இனம், வீரமிக்க இனம், வீணர்களிடம் வாது புரிந்து ஏன் நீதி கேட்க வேண்டும்? கேட்டும் ஏன் நீதி கிடைக்கவில்லை? என்று துருவித்துருவி ஆராய்ந்தோம்—நாம் திராவிடர், நம் இனம்—திராவிட இனம்; நம்முடைய நாடு திராவிட நாடு என்று கண்டோம். நம்மை நமக்காக உழைக்கும் கட்சியை நம் இனப் பெயரால், குழுஉக்குறிச் சொல்லால் அழைக்கலானோம். அதுதான் நீதிக் கட்சி என்னும் திராவிடர் கழகம்.

வீடு இடிந்து தாறுமாறாகக் கிடந்தது; அழகு இழந்திருந்தது. அதைப் புதுப்பித்தோம். எப்படி? இனி எக்காலத்திலும்—எதற்கும் ஆடாது அசையாது நின்று ஈடுகொடுக்கும்படி அத்தனை உறுதியாக அமைத்தோம்; அமைக்குமுன் அஸ்திவாரத்தைக் கொஞ்சம் கெட்டிப்படுத்தினோம்; அவ்வளவுதான். அடிப்படை, ஆணிவேர் போல் ஊன்றி விடவே, அதன் மேலுள்ள வீடு அற்புதமாக அமைந்தது. பொச்சரிப்பையும் பூசல்களையும் கண்டு மருளாது, புகழையும் நிந்தனையையும் பொருட்படுத்தாது. அடிப்படையைப் பலப்படுத்தினோம். பொச்சரிப்புக்காரர்களைப் போவென்றோம். 'புதையல் கிடைக்கும், பூமான்களாய் வாழலாம்' என்றிருப்போரை, உங்களுக்கு வேலையில்லை நடவுங்கள் என்றோம். பட்டம் பதவிப் பித்தர்களை விரட்டியடித்தோம்.

ஆம்! இடிந்த வீட்டைச் செப்பனிட்டோம். அஸ்தி வாரத்தைப் பலப்படுத்தி, கூரை வேய்ந்து, சுற்றுச் சுவர் எழுப்பி கூடகோபுரமாகக் கட்டினோம். அந்த வீட்டைக் கட்டுங்கால், எங்கள் நரம்பையுங்கூட நாராகக் கொடுத்திருப்போம். எங்கள் உழைப்பால் வந்த வியர்வைகூடச் சேருகப் பயன்பட்டிருக்கும். அத்தகைய அல்லல்களை அடைந்தோம். நாங்கள் ஈடற்ற இடுக்கண்களோடு இடிபட்டோம். அதன் பலன்—இன்று இடிந்த வீடு (ஜஸ்டிஸ் கட்சி) செப்பனிடப்பட்டது. செம்மையாக வீடு இடிந்த அன்று, எட்டு அடிக்கூட கிட்ட வராமல் எட்டிப் போனவர்கள், இன்று, இடிந்த வீடு புதுப்பிக்கப் பட்டு, பூச்சு வேலை செய்யப்பட்டு, புது மெருகுடன் விளங்குவதைக் கண்டு—விரைவாக, வேகமாக, வெற்றி முழக்குடன் வீருப்புப் பேசிக்கொண்டு, பூர்ணகும்பத்தைக் கையிலேந்தி உள்ளே நுழைய மந்திரம் ஜபிக்கப் புறப்பட்டு விட்டனர். பூரிப்போடு நாங்கள் அவர்களை வரவேற்கிறோம் வாருங்கள்! உள்ளே வந்து பாருங்கள்!! வீடு எவ்வளவு விசாலமானது, விரிவானது, காற்று எவ்வளவு நன்ருக வீசுகிறது. உள்ளே நுழைந்து வீட்டின் வாடை பட்ட உடனே கோழைக்கும் வீரம் பிறக்கும், துணிவும் நிமிரும், நரம்பிலே விசை அதிகமாகும், எண்ணத்திலே எழுச்சி ஏற்படும் என்று எடுத்துச் சொன்னோம். என்ன செய்தனர் பூர்ண கும்பமேந்திகள் உள்ளே வந்து யாவற்றையும் உற்றுத் துருவிப் பார்த்தனரா? இல்லை! பின் என்ன செய்தனர்? நாங்கள் உள்ளே வரமாட்டோம்; பயமாக இருக்கிறது. நீங்கள் என்ன என்னவோ செய்து வீட்டைக் குட்டிச்சுவராக்கி விட்டீர்கள். நீங்கள் செய்த மாறுதல் பிடிக்கவில்லை என்று பலபல பேசினர், அடிப்படையை அறியாததால். உள்ளே வந்து உள்ளத்தை உள்ளபடி அறிய பயம், ஆனால் குடியிருக்க மட்டும் ஆவல் அதிகம். பூர்ண கும்பேந்திகட்காக உழைப்பாளிகள் வீட்டைவிட்டுப் போக வேண்டுமா? எப்படி முடியும் அது? எனவே, சென்று

வாருங்கள் என்று செப்பினோம் அவர்களை. நம்முடைய கட்சியின் பெயர் மாற்றம் ஏன் என்பதைத் தெளிவுபடுத்தி விட்டோம். நம்முடைய தோழர்கள் இனியும் இனத்தை எழுச்சி பெறச் செய்யாதிருந்தால் அது இரங்கற்பாலதே!

குடந்தை, அறிவாளிகள் நிறைந்த இடம். அறிவாளிகள்—அதிலும் பார்ப்பன அறிவாளிகள், படித்த அறிவாளிகள் அதிகம். நான் கேட்கிறேன் அவர்களை; நினைத்துப் பாருங்கள்! சிந்தித்துப் பாருங்கள் சற்றே; ஆரியம்—திராவிடம் இரண்டும் ஒன்றா? ஆரிய நாகரிகத்திற்கும், திராவிட நாகரிகத்திற்கும் வேற்றுமை இருக்கிறதா இல்லையா என்று. வேற்றுமை—எதிலும் வேற்றுமை. எல்லாவற்றிலும் வேற்றுமை, எதற்கெடுத்தாலும் வேற்றுமை இல்லையா? கலையில், இனப்பண்பில், நடைமுறையில், வாழ்வில், வாழ்க்கை முறையில், உழைப்பில், உண்டு களிப்பதில் வேற்றுமையில்லையா? வேற்றுமை மிகத் தெளிவாக விளங்குகிறதே: இல்லை என்று நெஞ்சாரக் கூற முடியுமா?

இவ்வித வேற்றுமை ஏன்? அதை மாற்றுங்கள்—உங்கள் போக்கை மாற்றுங்கள், மறுமலர்ச்சி கொள்ளுங்கள்; அகம்பாவத்தை அகற்றுங்கள்; அறிவைக் கொள்ளுங்கள்; ஊரார் உழைப்பை உறிஞ்சாதீர்கள். உழைத்து மற்றவர்போல உண்ணுங்கள். பூதேவர்களாய் வாழாதீர்கள்; அது அறமல்ல; அறிவுடைமையல்ல; அற்பத்தனம்; அயோக்கியத்தனம்; அதைவிட்டு நீரும் மனிதர்களாய், மனிதத் தன்மையோடு வாழ்வதே வகையான செயல் என்று, வேண்டுகோள் விடுத்தோம். வேண்டுதல் விழலுக்கிறைத்த நீராயிற்று. ஆரியம் அதன் போக்கை, வாழ்க்கை முறையை, ஊரை உறிஞ்சும் உலுந்தர் வேலையை விடவில்லை, மாற்றவுமில்லை. மாறாக, ஏன்று தேசியத்தின் பெயரால் உருமாறி மக்களை ஏய்க்கப் பார்க்கிறது; ஏ

ஆரியமே! நீ உருமாற வேண்டாம். உன் போக்கை மாற்றவும் வேண்டாம். வேண்டுகோள் விடுத்த வேளை போய்விட்டது. நீ, நன்றாகப் பஞ்சகச்சம் வைத்து உடுத்து, பூதேவனென்று புகழ்ந்துகொள்! தர்ப்பைப் புல்லை காட்டிக் காசு பறி; அந்தரலோகத்திற்கு அழைத்துச் செல்வேனென்று ஆசைகாட்டி அகப்பட்டதைச் சுருட்டு! அதுபற்றிக் கவலையில்லை நமக்கு. ஏன்? ஆரிய சூழ்ச்சியை இன்று மக்கள் உணர ஆரம்பித்து விட்டனர். ஆரிய உருத்தாங்கி—தர்பாயுதத்துடன் வெளிவந்தால், பிழைப்பு இருக்காது—வருங்காலத்தில். இவன் ஆரியன் என்று அறிந்து நடக்க, உன் உருவம் உதவட்டும்! என்பதே எனது ஆசை!

முஸ்லீம்கள்—தங்களை முஸ்லீம்களென்றும், பார்சியர்—தங்களை பார்சியர் என்றும், சீக்கியர்—தங்களை சீக்கியர் என்றும் ஆப்ரிக்கர் தங்களை ஆப்ரிக்கர் என்றும் அழைக்க, அழைத்துக்கொள்ள வெட்கப்படவில்லையே; நீ ஏன் அவனைவிட கருப்பா? ஆரியன் என்று கூறிக் கொள்ள, வெட்கப்பட? அல்லது சிவப்பு இந்தியன்போல அவ்வளவு சிவப்பா? அதனால், "நான் ஆரியன்" என்று அறிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறாய்? உள்ளதை உள்ளபடி கூறுவதி லென்ன அபசாரம் உனக்கு? நீ ஆரியன் என்பதை மறைக்கிறாயே, ஏன்? அதனை அறியோமா நாங்கள்? கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னர், மாக்ஸ்முல்லர் வந்தபோது, ஆரிய வேதம்—எங்கள் வேதம். வடமொழி—எங்கள் மொழி, அது தேவ பாஷை என்று கூறி குதூகலமடையவில்லையா, பூரிப்படையவில்லையா நீங்கள்? அதுகண்டு, சென்னை மயிலையும் திருவல்லிக்கேணியும் திருநடனமாட வில்லையா? சின்னாட்களுக்கு முன்னருங்கூட மாணவரின் பள்ளிகளிலே ஆரியமத உபாக்யானம் என்றும், ஆரியதர்ம மென்றும் பாடபுத்தகங்கள் வைக்கப்பட்டிருக்க வில்லையா? எதனால் அகமகிழ்ந்தீர் அப்போது, ஆரியர் நீங்கள்;

ஆகையால்தானே ஆனந்தம்! ஜெர்மானியர் போரில் ஜெயித்துக் கொண்டிருக்கும் போது என்ன ரொம்பப் பேசினீர்கள்? 'அவாளும் ஆரியன்' என்று அகங்குழைய வில்லையா? ஆரியத்தின் உயர்வைக் கண்டு ஆனந்த நடன மாடுகின்றீர்; ஆனால், 'நாங்கள் ஆரியர்' என்று கூறிக் கொள்ள நீங்கள் அச்சப்படுகிறீர்களே, ஏன்? வெட்கமா, துக்கமா, மர்மமென்ன? மக்களை ஏமாற்றத்தானே! செல்லாது அது இனி.

ஜெர்மானிய நாட்டிலே ஜெர்மானியர் அதிகம் ஆங்கில நாட்டிலே ஆங்கிலேயர் அதிகம்; சீன நாட்டிலே சீனர் மிகுதி. கிரேக்க நாட்டில் கிரேக்கர் எண்ணிக்கை மேம்பட்டது. எனவே, அந்தந்த நாடு அவரவர்களுக்குச் சொந்தமாக உள்ளது. திராவிட நாட்டிலே யார் பெருவாரி? உழைப்பவர்கள் யார்? இது யாருக்குச் சொந்தம்? எங்களுக்கு—எங்கள் திராவிட இனத்திற்குச் சொந்தம். இது ஆரிய நாடல்ல; அல்லது ஆரியர் ஆதிக்கத் திற்கு அடங்கும் நாடுமல்ல. ஆரியருக்கு நாடில்லையே என்ற எண்ணம் ஏற்படலாம், அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை.

உலகிலேயே இரு இனங்களுக்குச் சொந்த நாடு கிடையாது. இது வரலாற்றுச் சான்று. ஆனால், வருங் காலத்திலே திராவிட நாட்டிலே ஆரியருக்கென்று தனி இடமுண்டு அக்ரகாரத்திலே. ஆரியம் அன்றும் இருக்கும்; ஆனால் சற்று பேதமுண்டு, இன்றைய நிலைக்கும் அன்றைய நிலைக்கும். ஆரியம் வாழும் பிறரைச் சுரண்டியல்ல; பூ தேவர்களாகவல்ல; விளக்காது அறுக்கும் வஞ்சகர்களாக அல்ல; உழைப்பாளிகளாய்—மனிதர்களாய் ஆரியம் விளங்கும் அன்று. ஆரியம் தன் இடத்தை விட்டு வெளிப் போந்தால் ஊர்காவலர் ஒரு கேள்வி கேட்பார், பதிலளித்த பின்னர்தான் வெளிப்படலாம். எங்குப் புறப் பட்டீர்? எதற்காக? மக்களுடன் எவ்வகையில் கலக்கக்

கருத்துக்கொண்டிருக்கிறீர்? என்ற வினாக்களுக்குவிளக்கமாக விடை வேண்டும்· அவர்கள் கூறும் பதிலிலிருந்து அவர்கள் செயல் விவேகமான செயல், வஞ்சக வேலையல்ல என்று தெரிந்த பிறகுதான் வழிவிடுவார். ஏன்? ஆரியம் அத்துணை அறிவு படைத்துளது தாங்கள் முன்னேறுவதில்.

சிலர் கேட்கலாம் ஆரியம் வேறு திராவிடம் வேறு என்று பலப்பல பேசுகிறீர்; திராவிடத்திலே கூடப் பள்ளர், பறையர் என்றும் முதலியார், நாயுடு, சைவ, வைணவர், வேளாளர் என்றும் பல பிரிவுகள் உள்ளனவே, இது உங்கள் கண்ணில் உறுத்தவில்லையா? வீணே ஆரியத்தை மட்டும் ஏன் தூற்றுகிறீர் என்று ஒப்பாரி வைக்கலாம்.

நான் கூறுகிறேன் அத்தகைய தோழர்களுக்கு ஆரியத்தின் அக்ரமச் செயல்களால் உண்டான பிழைகள் இவை—வேறுபாடுகள் இவை. திராவிடத்திலே உள்ள இத்தகைய வேறுபாடுகளை நீக்கிக்கொள்ள முடியும். ஆரியத்திற்கும் திராவிடத்திற்குமிடையே அளவற்ற முரண்பாடுகள் உள்ளன. வேறுபாட்டை நீக்கிக்கொள்ளமுடியும். ஆனால் முரண்பாடு நீக்கமுடியாது. சான்றாக, திராவிடத்திலுள்ள வேறுபாடு தண்ணீருக்கும் பன்னீருக்கும் உள்ளதை ஒத்தது. தண்ணீரோடு பன்னீரைக் கலக்கலாம்; கெடுதியில்லை; தண்ணீரும் பன்னீரும் மனத்தில் பங்குபெறும். இதில் முரண்பாடு இல்லை; வேறுபாடு தான் உளது. இன்னும் இந்த வேறுபாடு தண்ணீருக்கும் இளநீருக்கும் உள்ள வேறுபாட்டைப் போன்றது. இளநீர் சற்று இனிப்பாக இருக்கும்; தண்ணீர் சுவையற்று இருக்கும். வேற்றுமை அவ்வளவே. இளநீரோடு தண்ணீர் கலந்தால் உபயோகமற்றதாகி விடாது. இது

வும் முரண்பாடல்ல — வேற்றுமைதான். இத்தகைய வேற்றுமைகளை விவேகமிருந்தால் விலக்கிக் கொள்ளலாம்; அறிவு இருந்தால் அகற்ற முடியும்; ஆனால் ஆரியத்திற்கும் திராவிடத்திற்குமுள்ள முரண்பாடு — பார்த்த அளவிலேயே முரண்பாடு உடையவை என்பது தெள்ளிதில் **விளங்கும்.**

ஆரிய — திராவிட முரண்பாடுகளை நாம் வாழ்க்கையிலேயே காணலாம். கலையிலே, கருத்திலே இன்ன பிற எல்லாவற்றிலும் காணலாம். எடுத்துக் காட்டாக ஒரு சில உரைக்கிறேன்; உள்ளத்திலே ஊற்றுங்கள். ஆரியர்களின் கடவுள்கள் அனந்தம் கோடி, அநேக அவதாரங்கள், அற்புத வடிவங்கள். ஆனால், திராவிடர், ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற பண்பைப் பெற்றிருந்தனர். ஆரியரிடையே ஜாதி வேற்றுமை உண்டு; திராவிடரிடம் இல்லை. ஆரியம் — பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் சூத்திரர், பஞ்சமன் என்ற படிப் படியான உயர்வு தாழ்வு தரும் சாதிகளைக் கொண்டது. திராவிடம் — அரசர், வணிகர், வேளாளர் என்ற முறையிலே பாகுபாடு உடையதாக இருந்தாலும் உயர்வு தாழ்வைக் கொண்டதல்ல. உழுத்தரை உயர்த்தி - உழைப்பாளியை உறிஞ்சும் முறை இல்லை. ஆரியன் பிறரைத் தொட்டால் தீட்டு, பார்த்தால் தீட்டு, என்று பலப்பல பேசுவர். இங்கு, திராவிடத்தில் அது இல்லை. ஒரு சில இருப்பினும் அது விலக்கக்கூடியதே.

ஆரிய மொழிவேறு, திராவிட மொழி வேறு. ஆரிய மொழியைத் தேவமொழி யென்று, ஆரியர் கூறிக் கொள்வர், வழக்கத்திலே இல்லாதிருப்பினும். அவர்களது வீரமெல்லாம் நம்ப முடியாதவை; அதிலும் ஆண்டவனுடைய அவதார லீலைகளை அடிப்படையாகக் கொண்டவை. நம்முடைய வீரமோ, கலிங்கத்துப் பரணியில், சிலப்பதிகா

ரத்தில் காணக் கிடக்கிறது. ஆரியக்கலை கற்பனை நிறைந்தது; திராவிடக் கலை பகுத்தறிவுக் கேற்ற - உண்மைகள் நிறைந்தது.

சான்ருக, ஒரு நிகழ்ச்சியைக் காண்மின். சங்க நூலிலே ஒரு செய்யுள் - வில்வீரன் ஒருவன் வில்லிலே நாணேற்றி, அம்பைப் பூட்டி, விசையாக விடுகிருன் - ஒரு புலியைக் குறிபார்த்து. அம்பு-வில்லினின்றும் விடுபட்டது. மிகவேகமாகப் புலியின் உடலிலே ஊடுருவிச் சென்று — அருகிலிருந்த வாழைமரத்திலே பாய்ந்து நின்று விட்டது. இந் நிகழ்ச்சி உண்மையானது. உருவகபபடுத்தியதன்று. அம்பு—புலியின் உடலைத் துளைத்துச் சென்றது என்பது அம்பின் கூர்மையையும், வேகத்தையும், அதை எறிந்தோனுடைய சக்தியையும், குறி தவருத் திறமையையும் குறிக்கிறது. புலியைத் துளைத்த பின் அம்பின் வேகம் குறைகிறது. தடை ஏற்பட்டதால். எனவே, புலியைத் துளைத்த அம்பு வாழையைத் துளைத்துச்செல்ல முடியாமல் அதிலேயே பதிந்து நின்றுவிட்டது. வில்வீரனின் செய்கை இவ்விதம் கூறப்படுகிறது — திராவிடக் கலையிலே.

இத்தகைய நிகழ்ச்சியை—ஆரியம் கலந்த காவியத்திலே எவ்வாறுகூறப்படுகிறதுஎன்பதைக்காண்போம். இராமனது அம்புருத் தூணியிலிருந்து அம்பு புறப்பட்டது; புறப்பட்டு இராவணனது உடலெங்கும் "சீதை என்னும் சிந்தனை எங்கே—எங்கே! என்று தேடித்தேடி திரிந்து, அங்கெல்லாம் மாய்ந்த பின், வெளிப்பட்டுக் கடலிலே சென்று குளித்துப் புனிதமாகி மீண்டும் இராமனது அம்புருத்தூணியில் வந்தமர்ந்தது" என்று இயம்பப்படுகிறது. இத்தகைய செயல்கள் கவைக்கு உதவுமா? ஆராய்ச்சிக்குத்தான் நிற்குமா? கற்பனை என்று காணும்போதே கருத்திற்படவில்லையா? இதுதான் வீரமா?

இவ்விதம் திராவிடத்திற்கும்—ஆரியத்திற்கும் உள்ள முரண்பாடுகளை விளக்கமாக எடுத்துக் கூறப்புகின் ஏடு இடந்தராது.

அண்மையில் நாட்டில் நடந்த செயல்களைக் காண்மின்; அவை எதைக் குறிக்கின்றன என்பதைக் கூறுங்கள். பத்திரிகைகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். மலையாளத்திலே ஒரு குளம், சிலர் நீராடினர்—அதில். அவரும் மனிதர்தான் ஆனல், சுக ஆண்டவனுடைய அபிஷேகத்திற்கென்று அமைக்கப்பட்ட திருக்குளமாம். அதில் அவர்கள் நீராடியது தவறு; ஆடு, மாடு முதலிய அறிவற்றவைகள் அதிலே ஆனந்தமாக நீராடலாம், ஆனல், அறிவு படைத்த மனிதன் நீராடக் கூடாது. ஏன்? அவர்கள் ஈழவர்கள்; ஆலயத்திலே நுழையத் தகாதவர்கள். அதுமட்டுமல்ல; மனித ஜாதியில் மிக மட்டமாகக் கருதப்படுகின்றவர்கள் சமூகத்தால். குளத்திலே நீராடியதற்காகக் குற்றம் சாட்டப்பட்டனர்; குளத்தைப் புனிதமாக்கச் செய்யப் படும் பூஜை கைங்கர்யங்களுக்கு வேண்டிய பொருள் கொடுத்துத் தீர வேண்டுமென்று கட்டளையிடப்பட்டனர். சட்டம் செய்தது இவ்விதம் என்று சன்மார்க்கம் பேசலாம். ஏன் அவ்விதச் சட்டம்? அசட்டுச் சட்டம்! அறிவுக்குப் பொருந்தாத சட்டம் ஆட்சியிலே அமைந்துள்ளது? அதிலும் இருபதாம் நூற்றுண்டிலே, இந்த ஆங்கில அரசாங்கத்தில்? அன்று ஆரியம் செய்த அநேக சூழ்ச்சிகளில் இதுவுமொன்று. இத்தகைய செயல்களிலே அறிவு, அன்பு, அல்லது ஆரிய அகம்பாவம், எது உளது, உரையுங்கள்!

மற்ருெரு மன்னர் சின்னுட்களுக்கு முன்னர், கோவிலுக்குச் சென்ருர் ஆண்டவனை அர்ச்சிக்க. அவர், தாம் ஆண்டவனை உள்ளே சென்று தரிசிக்க வேண்டும், பூஜிக்க வேண்டும் என்று வேண்டினுர் அர்ச்சகரை. அய்யர் அனுமதிப்பாரா இதனை! அரசரும் அசாதாரணமானவர் தான். உண்ணுவிரதமிருந்தார், உலகைப் படைத்தோனை

உள்ளே சென்று உபாசனை செய்ய. என்ன செய்தும் என்ன? அவர் கடைசிவரை அனுமதிக்கப்படவே இல்லை. பின் அவர் மனையிலே இலிங்கம் செய்து பூஜித்து வீடு திரும்பினாராம். ஆண்டவனைத் தங்கள் உடைமை, தங்கள் உயர்வுக்கான ஊன்றுகோல் என்று கருதும் உலுத்தர்களைக் கொண்ட நாடு இது.

மற்றொரு செய்தி, மனதை வாட்டும் செய்தி, மனிதத் தன்மையைப் பரிகசிக்கும் சேதி, சில கிழமைகட்கு முன் பத்திரிகையிலே பார்த்தோம். ஆம்; குவாலியர் சமஸ்தானத்திலே நடந்தது. வருடா வருடம் நடந்து வருகிறது. அங்கொரு பண்டிகையுண்டு, மதத்தின் பெயரால். ஜம்ஸா பண்டிகையென்று அதற்குப் பெயர். அன்று உயர் ஜாதி மக்கள் அனைவரும் கூடி, விழாக் கொண்டாடுவர், ஆடிப் பாடிக் கேளிக்கைகள் புரிவர். அதுபற்றி அக்கறையில்லை நமக்கு. ஆனால், அந்த விழாவிற்கு ஆதித் திராவிடர்கள் தங்கள் பெண் மக்களை அனுப்ப வேண்டுமாம், எதற்கு? விழாவிலே பங்கெடுக்கவா? அல்ல. அந்தப் பெண்களைக் கேலியாகப் பேசுவர், தூற்றுவர்—உயர் சாதியினர் தாம் இன்புற. இது நடப்பது மதத்தின் பெயரால். விழா கொண்டாடி அதிலே பெண்களை, அதிலும் ஒரு குலத்தவரைத் தூற்றுவதா? எத்துணை நாள் அறிவற்றிருப்பர் அக்குல மக்கள்! தன்மானம் பெற்றனர்—அவர்களும் இவ்வாண்டு. தருக்கர் கொட்டத்தைச் சட்டை செய்யவில்லை. விழாவிற்குப் பெண்களை அனுப்ப முடியாது என அறிவித்துவிட்டனர். இது அறமல்லவா? அறிவுடைமைதானே! மானம் அவர்களுக்கும் உண்டல்லவா? இதன் விளைவு சாதி இந்துக்கள் ஆத்திரமடைந்தனர். தொன்று தொட்டு நடந்து வரும் சம்பிரதாயத்தை எப்படி மீறலாம் என்று கொதித்தெழுந்தனர். தடியெடுத்தனர் கையில், புகுந்தனர் சேரியில், அடி அடியென்று அடித்தனர்—அங்குள்ள மக்களை, மமதை கொண்டு. இதன் விளைவாக

இரண்டு உயிர்ச் சேதங்களும் விளைந்தனவாம். என்ன இழிமதி இன்னும் நாட்டில்? மக்களை, அதிலும் பெண் மக்களைத் தூற்றுவதற்கு ஒரு திருவிழாவா? அதுவும் மதத்தின் பேரால். மானங் கெடவில்லையா இதனால்? என்ன நயவஞ்சகம் மதத்தின் பேரால்!

மதம் மக்களுக்கு மாசு தராதது என்று மகாத்மாக்கள் மனங்குழைந்து பேசும் இந்த காலத்திலே, மதத்தின் பேரால் இத்தகைய அநீதியும் அட்டூழியங்களும் நாட்டில் நடப்பதா? இது தெரியாதா அந்தராத்மாவுக்கு? பண்டித ஜவஹர் போன்றோர் வாழும் நாட்டிலே நடக்கும் நியாயம் இது. ஒரு குலத்தோர் ஒதுக்கித் தள்ளப்பட்டிருப்பது மல்லாமல், எங்களுக்கும் மானம் உண்டு என்று கூறும் காரணத்தால் கொடுமைக்குள்ளாவதா? இதைப் பார்க்கா விட்டாலும் காதால் கேட்டும் கண்டியாமல் இருக்கிறார்களே! ஆனால், அலங்கார ஆர்ப்பாட்டத்துடன்—அகில உலக தேசீயம் பேசப் புறப்பட்டு விடுவார். இதனைத் தடுக்க ஏதாவது செய்தார்களா? இந்த தேசீயவாதிகள்—மதக் கட்டுப்பாட்டை, மதிகொண்டு மாற்றினார்களா? இல்லை—தங்கள் சிறு விரலையும் அசைக்கவில்லை இதுபற்றி. சமுதாயக் குறைபாட்டை நீக்க முற்படவில்லை தேசீய வாதிகள். மாறாக சனாதனத்திற்கு சப்பைக்கட்டுக் கட்டிச் சபையில் சிந்து பாடுகின்றனர். உண்மையை வெளிப் படுத்த, உலுத்தரை உழைப்பாளராக்க உரமில்லை நெஞ்சில். கேட்டை நீக்க உள்ளம் இல்லை. உலக உத்தமர் என்ற விளம்பரத்திற்கு வேண்டுமானால் இவர் செய்கை பயன்படலாம். இதுவா தேசீயத் தொண்டு?

ஆரிய—திராவிட முரண்பாடுகள் அளவிறந்தன. ஆரியம் மிகத் தந்திரமுள்ளது. இல்லாவிட்டால் இன்று சட்டசபையிலும்கூட அதன் ஆட்சி செல்லுமா? இன்று நாட்டில் நம் போன்ற திராவிடர்கள் இந்துமதச் சட்டத்

திலே நான்காவது சூத்திர சாதியாகத்தானே பொறிக்கப் பட்டிருக்கின்றனர். இந்த இழிவைப் போக்க முற்பட்டவர் யார்? இது என்று நீங்கும்? தனி இன உணர்ச்சி—ஆரியத் தினின்றும் அடியோடு முரண்பட்டவர் நாம், அதை உணர்த்த, தெரிந்துகொள்ள, திராவிடர் என்ற இன எழுச்சி பெறவேண்டும். இன்றேல் ஆரிய மாயை நம்மை விட்டு அகலாது.

இந்த உண்மை இந்த நாட்டு மக்களுக்குச் சுலபத்தில் புரியாது. ஆம்! இதுதானா வாழ்க்கையில் நடப்பவை? எவற்றையுமே புரிந்து கொள்ள முடியாத நாடு இது. நீங்கள் வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள் — நாட்டிலே பெரும்பான்மையான கிராமத்தாரை, ஆகாயத்திலே விமானம் பறப்பது எப்படி என்று? வரும் — பதில் -- தெரியாது, புரியாது, என்று. இதே போன்று கப்பல் போவது எப்படி? என்றால் — தெரியாது. தண்ணீரின் அடியிலே ஒரு கப்பல் போகிறதே தெரியுமா? அமெரிக் காவின் அகல — நீளம் தெரியுமா? இந்தியா எத்தனை மாகாணம் சொல் என்றால், தெரியாது என்பதே பதில். மற்றும் தந்தி, டெலிபோன், இரயில் இன்னபிற இயங்கும் முறை யாவும் தெரியாது என்றே கிராமத்தான் கூறுவான். ஆனால், அவனைக் கேளுங்கள் — எமனுக்கு என்ன வாகனம் என்று, உடனே பதில் வரும், எருமைக் கடா என்று. எப்படித் தெரியும் அவனுக்கு இது? நாட்டின் நிலை இவ்விதம் நலிந்துள்ளது; அறியாமை அரசோச்சுகிறது; உலுத்தர்கள் ஊராள்கின்றனர்; உழைப்பாளிகள் உதா சீனம் செய்யப்படுகின்றனர். இதை விட்டுப் பலப்பல பேசுகிறோம். அடிவயிறு வலிக்கக் கூச்சலிடுகிறோம்.

சர்க்கஸ் பார்க்கிறோம். அதில் ஒரு மனிதன் சிங்கம், புலி முதலிய மூர்க்கப் பிராணிகளையும் அடக்கி ஆட்டு விக்கிறான் ஒரு சிறு கோலைக் கையிலேந்தி. அதுகண்டு

ஆச்சரியப்படுகிறோம் நாம். அதிலென்ன விசித்திரமுள்ளது — விந்தையுற? ஐந்தறிவு படைத்த மிருகத்தை ஆறறிவு படைத்த மனிதன் ஆட்டுவிப்பதில் அற்புதமில்லை. அசம்பாவிதமுமில்லை. அவன், தன் ஆருவது அறிவால் ஆட்டுகிருன் ஐந்தறிவை. இதைவிட ஆச்சரியமானது, அசம்பாவிதமானது, அன்ருட வாழ்வில் நடைபெறுவது என்ன? அதுதான் ஆறு அறிவு படைத்த மனிதன் அதே தன்மையுள்ள பிறிதொரு மனிதனுக்கு அடங்கி நடப்பது. ஆம்; திராவிடன் ஆரியனைக் கண்டதும் அடிபணிகிருன் ஏன்? பார்ப்பனன் நம்மைத் தெருவில் கண்டால் — விலகிப்போ என்று கட்டளை இடுகிருன்; கோவிலில் விலகி நில் என்ற உத்தரவு. கல்யாணமாளுல் முதலில், அய்யருக்கு முதல் தாம்பூலம்; அவரில்லாமல் ஆகாது எதுவும் என்ற பேச்சு; அய்யர் அடே என்பதற்குள் 'ஆமாம் சாமி, அடியேன் இருக்கேனுங்க' என்ற பணிவு. எங்கும் அய்யருக்கு ஏகபோக உரிமை. எவரும் அவருக்குத் தாழ்வு; இவை யாவும் ஏற்படுவது வெறும் பிறப்பிளுல். ஏன் இவை எல்லாம்? எதளுல் மனிதன் — மனிதனுக்குப் பணிகிருன்? இது அர்த்தமற்ற போக்கு; அறிவுக்கு அப்பாற்பட்ட அநாகரிகம். ஒருவருக்கு மற்ெருருவர் அடங்குவது அவசியத்தைப் பொறுத்தது, காரணத்தோடு கூடியது என்ருல் குற்றமில்லை. படுத்திருக்கும் நோயாளியிடம் மருத்துவர் வருகிருர், நாக்கை நீட்டு என நவில்கிருர் — நோயாளி நாக்கை நீட்டுகிருன். எதளுல்? இது அவனுக்கு அவசியமானது. நோயைத் தீர்ப்பவர் மருத்துவர் என்ற காரணத்தால். இது முறை — முற்றிலும் அவசியம்கூட. ஆளுல் ஆரியனிடம் தாசளுக அடங்கிக் கிடப்பதற்கு ஆதாரம் என்ன? அன்றிப் பலன்தான் என்ன? ஒன்றுமில்லை. பின் ஏன் நாம் அவனுக்கு அடங்கவேண்டும் என்று, நம்மவர் எண்ணிப் பார்ப்பதில்லை. இன்று ஆரியர்கள் ஆங்கிலேயனைக் கண்டு சீறுகின்றனர். நான் அதைப் பாராட்டுகிறேன். ஏன்? ஒரு சிறிய கும்பல்.

நாட்டிலே அன்று தொட்டு இன்றுவரை — குறுக்கில்லாத இனம். மோட்ச நரக உலகைக் காட்டி வயிறு வளர்க்கும் கும்பல் வீருப்பு பேசுகிறது, வீர உணர்ச்சி கொள்கிறது இந்நாளில். அன்று முதல் இன்றுவரை, வீரர் வழிவந்த இனம், கனக விசயரைக் கல் சுமக்க வைத்த இனம், இமயத்தில் இனக் கொடியை நாட்டிய இனம். வீரமே வடிவாகிய இனம், வீரமற்று வீணர்களாய்த் திரியும் அந்தக் கும்பலுக்கு அடங்கிக் கிடக்கிறதே! இது என்ன அற்புதம்? இதற்குக் காரணம் என்ன? ஏன் அடங்க வேண்டும்? அறிவுள்ள காரணம் உண்டா? இல்லை. நீ என்ன உயர்வு என்று கேட்டால், மறுவைக் காட்டுகிறான்— மாந்தாதாவைக் காட்டுகிறான். சட்டத்தைக் காட்டு கிறான், சம்பிரதாயத்தைக் காட்டுகிறான், சாஸ்திரத்தைக் காட்டுகிறான். பழக்க வழக்கத்தை வழிவழி முறையே பாட்டன் தீட்டின ஏட்டை, புராணத்தைக் காட்டுகிறான். ஒன்றில்லாவிட்டால் ஒன்று என்று பலப்பல சூழ்ச்சிகள் செய்கிறான்; அதனால் நம்மினம் அறிவிழந்து, சூடு சுரணையற்று ஆரியனுக்குத் தாசனாக அடிமைப்பட்டுக் கிடக்கிறது. துப்பாக்கியைக்கூடத் துச்சமாகக் கருதும் இனம், தர்ப்பையைக் கண்டு தத்தளிக்கிறது.

அறிவு, ஆற்றல், செல்வம், சிறப்பு முதலிய எதிலே சிறந்தவர்கள் ஆரியர்கள் நம்மைவிட? படிப்பில் சிறந்தவராக நம்மிடை சர். இராமசாமி இல்லையா? நிர்வாகத் திறமையில் சர். சண்முகத்தை மிஞ்சுபவர் யார்? மருத்துவத்தில் சிறந்தவர்களாக சர். இலட்சுமணசாமி, குருசாமி முதலியோர் இல்லையா? பணத்தில் ராஜா சர். அண்ணாமலை இல்லையா? இன்னும் மன்னவர்கள்தான் குறைவா? எது இல்லை நம்மிடம்? படிப்பு, பணம், பலம், அறிவு, ஆற்றல், அரசு எல்லாம் இருக்கின்றன நம்மிடம். ஆனால், ஒன்று தான் இல்லை; பக்குவமில்லை; அது இருந்தால் ஆரியக்

கொட்டம் அடங்கும். எனவேதான் இன உணர்ச்சி வேண்டும் என்கிறோம்; படித்த கூட்டம் பக்குவம் பெற வேண்டுமென்கிறோம். பாராண்ட இனம் பராரியாய் வாழ்வதா? கனக விசயரைக் கல் தூக்க வைத்த இனம் கயவரின் காலடியில் கிடப்பதா? என்று கேட்கிறோம். இன உணர்ச்சி ஒடுக்கியுறுகிறது இன்று. ஆடிக்காற்றிலும் கூட அசையாத அளவுக்கு அஸ்திவாரம் பெற்றுத் தூண்டா விளக்காய்த் துலங்குகிறது; அதை உணருங்கள்! அதன் வழி நடவுங்கள்.

நாட்டிலே ஒரு குலம் பாடுபடாது உண்டு உறங்கிக் கிடக்க, மற்றவர் உடல் தேய, உள்ளமும் உணர்வும் தேய, உழைத்துக் கெடுவதா? இன்று தோழர்கள் நெசவில் நெய்வது நூற்றுக்கு நூறு, அறுபதுக்கு அறுபது என்ற நயமான (நூல்) துணிகள். பொள்ளாச்சி பார்டர், பெங்களூர் டிசைன் என்ற, புது மாதிரிகள்; ஆனால், அவர்கள் அணியும் ஆடையின் தரமோ முப்பதுக்கும் குறைவானது; பண்ணையில் பாடுபட்டுப் பயிர் செய்வது சீரகச் சம்பா, கிச்சிலிச் சம்பா. ஆனால் அவன் உண்பது கால் வயிற்றுக் கஞ்சி, அதுவும் கம்பங்கூழோ, கேழ்வரகுக் கஞ்சியோதான். பாட்டாளி பாடுபட்டுக் கட்டுவது, மாடமாளிகைகள் — கூடகோபுரங்கள் போன்ற கட்டிடங்கள், நான்கடுக்கு — ஐந்தடுக்கு அரண்மனைகள். அவைகளை நிமிர்ந்து நோக்கினால் கழுத்து வலிக்கும். ஆனால், அவன் அண்டியிருப்பது — குனிந்து நுழைய வேண்டிய குடிசை! ஏன் இந்த பேதம், இந்த நாட்டிலே!

வளமில்லாத நாடு—வறுமையுடனிருந்தால் ஆச்சரியமில்லை; பாங்கற்ற நாட்டிலே பஞ்சம் மிகுந்துள்ளது என்றால்—குற்றம் கூறுவோர் இல்லை; அரபு நாட்டுப் பாலைவனத்தில், ஐஸ்லாந்தில் எஸ்கிமோ நாட்டுப் பனித் காட்டில் வளமிராது. இங்கு நீர்வளத்திற்கும், நிலவளத்

திற்கும், குடிவளத்திற்கும் குறைவில்லை, மக்கள் மன வளம் ஒன்று தவிர, வற்றாத ஜீவ நதிகள், அவைகளால் வளர்க்கப்படும் வயல்கள், அவைகளில் விளையும் வகை வகையான மணிகள், நஞ்சை புஞ்சை ஆகியவைகள் ஏராளமுண்டு இந்த நாட்டில்.

நாடெங்கும் சாலைகள்-சோலைகள், அவற்றில் கனிகள் குலுங்கும். அதைக் கண்டு கவிகள் பல தீட்டுவர்; மண்ணுக்கடியில் பொன்; கடலுக்குள்ளே முத்து; காட்டிலே சந்தனம், கஸ்தூரி வகைகள். இத்தனை இயற்கை எழிலுடன் விளங்கும் இந்த நாட்டில்—இல்லாமை இருக்கக் காரணம் என்ன? மக்கள் உழைத்து உழைத்துத் தேய்ந்து உற்சாகமிழந்திருப்பதேன்? அந்த இல்லாமையும் அதன் பயனாக ஈனத் தொழில் புரியும் நிலைமையும் திராவிடரை மட்டும் தாக்குவானேன்?

இந்நாள், நம் திருநாட்டில் ஒருசிலர் கிளம்பி இருக்கின்றார், பொது உடைமையெனும் போர்வையைப் போர்த்திக் கொண்டு. அவர்கள் முதலாளி யார் என்று தெரியாமலே முதலாளிகளை ஒழிக்கப் புறப்பட்டு இருக்கிறார்கள். பாவம்! பணக்காரர்களை எல்லாம் முதலாளிகளென்று, அவர்கள் தவறாகக் கருதிக்கொண்டு, வீண் வேலையில் ஈடுபடுகின்றனர். பார்ப்பனப் பிறவி முதலாளியை அவர்கள் கண்டிப்பதில்லை; கண்டு கொள்வதுமில்லை. ஆண்டவன் பெயரால் ஆயிரமாயிரம் வேலி நிலங்களும், கோடானுகோடி பொருள்களும் குவிந்து கிடப்பதை அவர்கள் காண்பதில்லை. ஏன்? அவர்கள் விழிப்புற்று எழுச்சியுறும், நம் இனத் தோழர்களின் கவனத்தை வேறு திசையில் திருப்ப முயல்கின்றனர். அத்தகைய முயற்சியல்லாமல் வேறென்ன இது? உண்மை முதலாளிகளை, பிறர் உழைப்பை உறிஞ்சும் உலுத்தர்களை, கண்மூடிக் கடவுட்கொள்கையில் கருத்தழியாது, மதமயக்

கத்தில் வீழாது ஒழிக்க முயலும் போது அவர்கள் அதை மறைத்து வேறு மார்க்கத்திலே, மக்கள் மனதைத் திருப்பப் பாடுபடுகிறார்கள். சமதர்மம் என்று சனாதனத்திற்குச் சிறப்புத் தேடுகிறார்கள். பொது உடைமை என்று அதற்குப் பெயர் கூறுகிறார்கள். ஆனால், மானிடரின் பிறப்பும் பொது—உயர்வு தாழ்வற்றது என்பதை அவர்கள் மறுக்கின்றனர். இந்த ஏமாற்றுவித்தை இன்னும் எத்தனை நாட்களுக்குச் செல்லும்?

இவர்கள் செய்கையை எண்ணும்போது, ஒரு சம்பவம் என் நினைவிற்கு வருகிறது. சென்னையில்—சைனா பஜார் தெருவில்—போவோர் வருவோரின் சட்டைப் பையைக் கத்தரிக்கும் ஓர் எத்தனால்-பணம் பறிகொடுத்தவர் பதறுவார், திருடனைத் தேடி ஓடுவார், உடனிருப்பவரும் உதவுவார் அவருக்கு. ஆனால், அந்த எத்தனின் பங்காளர்கள் கூட்டத்தின் கவனத்தை வேறு பக்கம் திருப்பி, குற்றவாளியைக் காப்பாற்றவேண்டி, வேறு திசையை நோக்கி—இதோ திருடன், அதோ கள்ளன் என்று இரைச்சலிடுவர். அது கேட்டு அனைவரும் உண்மை வழியை—திருடனை—விட்டு, உலுத்தர் பேச்சைக் கேட்டுத் தவறான திசையிலே திருடனைத் தேடி-ஓடி-அலுத்துத் திரும்புவர். அத்தகைய எத்தனுக்குத் துணை புரியும் கயவனின் கருத்துப் போன்றதுதானே, இந்நாள் பொதுவுடைமையாளரின் போக்கு.

நான் ஒரு வார்த்தை கேட்கிறேன் பொது உடைமைத் தோழர்களே; பொது உடைமை பேசும் புனிதர்களே! பஞ்சம், பஞ்சமென்று பறை சாற்றுகிறீர்களே! அந்தப் பஞ்சம் யாவருக்கும் பொதுவா? ஏன் ஒரு குலத்தைப் பஞ்சம் பீடிப்பதில்லை? உங்களுக்கு நல்லெண்ணமிருந்தால்—உங்கள் நெஞ்சில் தோன்றாமலிருக்குமா இது? பஞ்சத்தால் சும்மட்டி ஏந்தும் பார்ப்பானை பார்ப்பதில்லை,

ஏன்? கல்லுடைக்கும் பார்ப்பானைத்தான் கண்டதுண்டா நீங்கள். ஏன்? அந்தக் குலம் மட்டும் குனியாது-வளையாது குந்திக் குதிர்போல் பெருகுகிறது, ஏன்? அவர்கள் கட்டை வண்டி ஓட்டுவதில்லை? கனமூட்டை சுமப்பதில்லை; மலத்தைக் கூட்டுவதில்லை; பஞ்சம்கூட பார்ப்பானுக்கு ஒருவிதம், பாட்டாளிக்கு வேறுவிதம், பார்த்துத்தான் வருமா? ஏன் நம்மவர் மட்டும் உச்சிவேளையிலே உழைக்கின்றனர் மாடுபோல், நம்முடைய மகளிர் அனிச்சம் பூவினும் மென்மையார் என்று புலவரால் புகழப்படும் பூவையர்கள் மட்டும் காடேறி, மேடேறி—நாடு சுற்றிச் சுள்ளி பொறுக்குகின்றனர். கவிகள் பாடும் கரும் குவளை மலர்போன்ற கண் படைத்த நம் இனக்காரிகைகள் கடு வெயில் நேரத்தில் கல் உடைக்கக் காணலாம். ஆனால், பார்ப்பனக் கும்பலில் ஒருவர்கூட செய்யவில்லை எந்த வேலையும்! பார்ப்பனப் பெண் ஒருத்திகூடப் பிறர் வீட்டில் பணிப்பெண்ணாக இருக்கக் காணோமே? ஏ, பொதுவுடைமை வாதிகளே! ஏன் இதைக் கவனிப்பதில்லை? இது எந்தப் பொருளாதாரப் பேதத்தில் அடங்கியது? எவரும் இது வரை ஏற்படுத்தாத தந்திர முதலாளி ஏற்பாடல்லவா இது? பலர் உழைப்பை—ஒரு சிலர் உறிஞ்சி உண்டு களிப்பது உத்தமம் என்று எண்ணுகிறீர்களா? ஏன் மௌனம் இதுபற்றி? முதலாளிகள் ஒழிந்தால் யாவும் நன்கு நடக்கும் எனப் பொதுவுடைமை வாதிகள் நவில்கின்றனர். ஆனால், இந்த நாட்டுப் பொதுவுடைமையாளர்கள் உண்மை முதலாளியைப்பற்றிக் கவலைப் படுவதில்லை.

குடந்தையில், எப்படிப் பார்த்தாலும் கும்பேஸ்வர நாதரைவிடப் பெரிய முதலாளி எவருமில்லை. உண்மையுந்தான். மனித முதலாளியைவிட அவர் மிகமிகப் பெரிய முதலாளி. மனிதனுக்கு இல்லாத சௌகர்யங்கள் அவருக்கு உண்டு. அவருடைய ஆட்சியோ இப்பூமண்டல

மெங்கும் பரவும்; குடி படைகள் குவலயத்தோரெல்லாம்; அவரது இருப்பிடமோ கோவில்; கோட்டை போன்றது, கொத்தளங்களோடு கூடியது; பணம் பலகோடி; நிலம் ஏராளம்; பண்ணையாட்கள் பலப்பலர்; வாகனங்கள் வகை வகையானவை; வெள்ளி, தங்கம் முதலியவற்றால் ஆனவை; ஊர் சுற்றிவர உன்னதத் தேர்; உல்லாசத்திற்குப் பல்லக்குச் சவாரி; ஆம். இத்தனைக்கும் அவர்தம் கைவிட்டுச் சல்லிக் காசும் செலவிடார்; மாறாக அவரிடம் பணம் மலைபோல் மேலும் மேலும் குவியும்; தம்முடைய பணம் போகுமோ, குறையுமோ, பெருக வேண்டுமே என்ற கவலை அவருக்கில்லை. அவருக்கு வழக்கில்லை, தொல்லையில்லை. கிண்டி குதிரைப் பந்தயமில்லை. திருமணமும் வருடாவருடம் தவறாமல் பக்தகோடிகள் செய்து வைக்கக் காத்திருக்கின்றனர். இத்தகைய முதலாளியைப் பொதுவுடைமைவாதிகள் கண்டிப்பதில்லை. ஏன்? அவர்கள் 'பொது உடைமை—பொது உடைமை' என்றுகூறி தங்கட்குப் 'புதுவுடைமை' தேடுகின்றனர் போலும்! இது போழ்து ஒன்று என் நினைவிற்கு வருகிறது. பொது உடைமைத் தோழர்கள், அண்மையில் இங்கு, பஸ் தொழிலாளர் குறைகளைத் தீர்த்துக்கட்ட ஒரு மாநாடு நடத்தினராம். நல்ல வேளை, நான் பாராட்டுகிறேன் அதை. அதோடு ஒரு செய்தி — இதே குடந்தையில் அடிக்கடி இருபது டன் நிறையுள்ள இரதத்தில், கால் டன், அரை டன் எடையுள்ள சாமிகளை வைத்து, அத்துடன் கோயில் பட்டாச்சாரியையும் இன்னும் அவர் அத்திம்பேர், அம்மாமி குழந்தை குட்டிகளையும், அக்கப்போர் ஆசாமிகளையும் அமரவைத்து நம் இனத் தோழர்கள் வீதி வீதியாய், நெஞ்சு உடைய, மார்பு விரிய இழுத்துச்செல்லுகின்றனரே! இது படவில்லையா அவர்கள் கண்களில்? என்று தீரும் இவர்கள் குறை-மடமை? அதற்கு மருந்து — மாற்று பொதுவுடைமைவாதிகள் தேடார். ஏன்? அவர்களுக்குச் சங்கம் அமைத்துச்

சந்தா செலுத்தத் தெரியாது என்பதாலா? சமுதாயத்தைச் சீர்திருத்த, செப்பனிட, உண்மையிலேயே பொதுவுடைமையாளருக்கு உறுதி இருக்குமானால் அவர்கள் செய்யவேண்டிய வேலையே வேறு. முதலில் பிறவி முதலாளியை ஒழிக்க வேண்டும்.

நான் கூறுகிறேன், இந்தப் பொது உடைமை வாதிகளுக்கு முதலாளி யார் என்பது தெரியவில்லை, புரியவில்லை, சரிவரத் தெரிந்து புரிந்துகொள்ள மனமில்லை. பணக்காரன்தான் முதலாளி என்று அவர்கள் தவறாகக் கருதுகின்றனர். பணக்காரனுக்கும் முதலாளிக்கும் உள்ள பேதத்தை அவர்கள் அறியவில்லை. பணக்காரன் முதலாளி அல்ல. எப்படி எனில், பங்களா வைத்திருப்பவன் — பங்களாக்காரன், ரிக்ஷா இழுப்பவன் — ரிக்ஷாக்காரன்— கூலி வேலை செய்பவன் — கூலிக்காரன், கடை வைத்திருப்பவன் — கடைக்காரன். அதுபோலவே பணம் வைத்திருப்பவன் — பணக்காரன் ஆகிறான், அழைக்கப்படுகிறான்.

நான் மறுமுறையும் கூறுகிறேன், பணக்காரன் முதலாளி அல்ல என்று. ஆனால், பணக்காரன் யார் என்று பார்ப்போம். குடந்தையில் ஒருவர் பணக்காரராய் இருப்பார். ஐந்தாவது மைலில் அவரைவிடப் பெரிய பணக்காரர் இருப்பார். அதற்குமேல் நண்பர் நாடிமுத்து இருப்பார். அவரைவிட வட நாட்டில் பிர்லா, அதற்குமேல் தலால், அதைவிட டாட்டா என்று போகும். அதையும் கடந்தால் ஆங்கில நாட்டில் பல பணக்காரர்கள் இருப்பார்கள். ஒவ்வொருவருக்கும் மேல் மற்றொரு பணக்காரன் இருப்பது சகஜம். இயற்கையும் கூட. இன்று வண்டியோட்டி. அதனால் அவன் வண்டிக்காரன். நாளை கிண்டி குதிரைப் பந்தயத்தில் அல்லது பகுத்தறிவு போட்டிப் பந்தயத்தில் ரூபாய் அறுபதினாயிரம் அதிர்ஷ்டம் அடிக்கும், அப்போது புதுப் 'பணக்காரன்' பழைய வண்டியோட்டியாய் மாறிவிடுகிறான். எனவே,

பணக்காரன் முதலாளியல்ல; ஆனுல் பணம் உண்டு பண்ணும் இயந்திரத்தை, பண உற்பத்தி ஸ்தாபனத்தை வைத்திருப்பவன்தான் முதலாளி.

பணக்காரன் குளம் — குட்டைகளுக்குச் சமமானவன்; முதலாளி ஊற்றுக்குச் சமமானவன். மழை பெய்தால் தான் குளம் — குட்டைகளில் நீர் இருக்கும்; இன்றேல் வறண்டுவிடும். ஆனுல், ஊற்ருே என்றும் நீர் சுரந்து கொண்டே இருக்கும். இத்தகைய பேதம் இருக்கிறது பணக்காரனுக்கும் முதலாளிக்கும்.

ஐந்து கோடி வைத்திருப்பவன் அதனை ஆறு கோடி, பத்து கோடி என்று பெருக்கும் முறையை, தொழிலை, இயந்திரத்தை, சிமிட்டி ஆலையை, இரும்புத் தொழிற் சாலையை, பருத்தி ஆலையை, வட்டிக் கடையை வைத் திருப்பவன் முதலாளி. அதிலும் சிறந்த முதலாளி— வடிகட்டின அசல் பிறவி முதலாளி—ஆரியன்.

கோயில் என்றும், குடமுழுக்கு என்றும், கும்பாபி ஷேகம் என்றும் செல்வத்தைக் கொட்டி அழுகிருேம். பூரிதட்சணையாகப் படைக்கிருேம்; எதற்கும் பீசு உண்டு. ஏன் என்று கேட்பார் எவருமில்லை. இந்த எதேச்சதி காரம் எத்தனை நாளைக்கு? இத்தனை விதங்களில் பணம் போகிறதே! இது மக்களுக்குத் தெரியவில்லையா? அடாதது என அறியவில்லையா? ஏன் என்று எவரும் கேட்கவில்லை, அன்று முதல் இன்றுவரை. காரணம் மக்கள் மனத்தில் இவை மடமை என்று படாதது, கருத்தில் கண்மூடி வழக்கம் ஆகியவையே என்று கூறலாம் துணிந்து.

வர்ணுச்சிரம தர்மம் வேண்டும் என்று பேசுகின்றனரே இந்நாளும்! வகையான மார்க்கமா அது? உழைக்க ஒரு குலம், அதனை உறிஞ்சப் பிறிதொரு குலம் என்ற நியதி நியாயமா? மற்றவர் மாடென உழைக்கும்போது ஒருசிலர்

மட்டும் உட்கார்ந்து உல்லாசமாகக் காலம் தள்ள வேண்டுமா? இதுவே தன் விதியா? நாதன் கட்டளையா? நயவஞ்சகச் சூழ்ச்சியா? நவிலுங்கள்! பாடு படுவதற்குப் பரமன் கட்டளை வேண்டுமா? வேண்டாம். பலரும் பாடு பட்டுத்தான் ஆகவேண்டும் பாங்கான வாழ்க்கை நடத்த. ஆனால், இந்த வேதன் விதி ஒரு பெரிய சதி; நாதன் கட்டளை நாணயமற்ற செய்கை. ஏன்? ஒரு குலம் மட்டும் பாடுபடவே தன் விதியில்லை ஏன்? அவர்களையும் உழைப் பாளிகளாக்க உரமில்லை அந்த உத்தமனுக்கு (கடவுளுக்கு). ஒருவனைப் பிறப்பால் உயர்ந்தவனாகவும் உல்லாசியாகவும், குருவாகவும் படைத்து, மற்றவனைத் தாழ்ந்தவனாகவும், உழைப்பாளியாகவும், அடிமையாகவும் அமைக்கிறார், அந்த ஆண்டவன். எல்லோரையும் தன் குழந்தைகள் என்று கருதும் ஆண்டவன், ஒருவனை வேதமோதுபவனாகவும், மற்றவனை அவன் திருவடி தொழுபவனாகவுமா படைப்பார்? அவருக்கு அறிவில்லையா? அன்பில்லையா? அறம் அறியாரா அவர்? அத்தகைய ஆண்டவன் உண்மையில் இருந்தால் அதைவிட நயவஞ்சகப் பொருள் இந்த அகில உலகிலும் இல்லை; இருக்க முடியாது.

வேதன் விதி என்றும் நாதன் கட்டளையென்றும், பழக்கமென்றும், வழக்கமென்றும் அற்பத்தனங்களை அர்ச்சிக்கிறோமே! இது தகுமா நமக்கு, நம் இன நலனுக்கு? நம்மிடம் பட்டம் இருந்தென்ன? பதவி இருந்தென்ன? செல்வமும். சிறப்பும், அறிவும்—ஆற்றலும், உழைப்பும் ஊதியமும் இருந்தென்ன; பக்குவமிழந்தோம்—பராரி யானோம், பகுத்தறிவு இழந்தோம்—பாரிழந்தோம். நாம் எதில் சிறந்திருந்தாலும் மதமெனும் மடமைக்குள் சிக்கி விடுகிறோம். மனிதனை பூதேவனாக, ஆண்டவன் தூதனாக, அர்ச்சித்து ஆனந்தமடைகிறோம். இத்தகைய இழி நிலைக்குக் காரணம் என்ன?

நம்முடைய முன்னோர்கள் மடமைக்கு முதன்மை யளித்து முற்போக்கடையும்படி செய்து விட்டனர் கபடமறியாக் குணத்தினால், வஞ்சகமறியா மனத்தினால். ஆம்! மன்னர்கள் இதிகாசம் படித்தனர்—இனத்தை மறந்தனர்; புராணங்களைக் கேட்டனர்—புரோகிதர்களைப் போற்றினர், மதமகிமையைப் பாடினர்—மக்களை மறந்தனர், மடையர்களாக்கினர், பக்தியால் சித்தங்கலங்கிப் பித்துக் கொண்டனர். இதனால் இவர்கள் மட்டுமல்ல, இனமே இழிவுற்றது. எடுப்பார் கைப் பிள்ளையானது, ஏய்ப்போர் ஏறினர் அரியணை! உழைப்போர் தாழ்ந்தனர் உளப் பண்பற்றதால்.

நமது மன்னன் ஒருவன், வரகுணன் என்று நினைக்கின்றேன். காட்டுக்குச் சென்று வேட்டையாடி வீட்டுக்குத் திரும்புகிறான். வழியில் ஓர் குளம்—தவளைகள் காகாவென்று கத்துகின்றன; மன்னனோ மகா சிவ பக்தன். அவன் காதில் இந்தக் காகா என்ற ஓசை அரகர என்று என்று வீழ்ந்தது, சிவநேசர் அல்லவா! உடனே மன்னன் மந்திரிக்குக் கட்டளையிட்டான்—அரண்மனை ஐஸ்வர்யத்தைத் தடாகத்தில் கொண்டுவந்து கொட்டும்படி. ஏன்? குளிரால் வாடுகின்றனராம் சிவனடியார் திருக்கூட்டங்கள். எங்கு? திருக்குளத்தில்! இருக்குமா அவ்விதம்? நடக்குமா அந்தச் செயல்? நடக்கத்தான் முடியுமா? ஆனால், அதைப் பற்றி ஆராய அறிவில்லை அவனுக்கு. ஆண்டவன் அடியார்க்குப் பணி புரிவதே பரமபதமடைய மார்க்கம் என்று கருதினான்; மதியூக மிருந்தால் செய்வானா இப்படி? மாணிக்கத்தைக் குளத்தில் வாரியிறைக்கும் மதியற்ற மன்னர்கள் வாழ்ந்த இந்த நாடு அழியாமலிருக்குமா? மதமயக்கமல்லவா இது? அறிவியுங்கள் தோழர்களே!

பிறிதொரு மன்னன் கான மயிலாடக் கண்டான், கார்மேகத்தைக் கண்ட களிப்பின் மிகுதியால். கண்ட

மன்னன் மயில் குளிரால் வாடுகிறது என்று நினைத்தான்; அளித்தான் அதற்கோர் ஆடை; அதிலும் பட்டுப் பீதாம் பரம். மன்னர் அவர்; எதுவும் தரமுடியும் அவரால். அவரது செயல் கருணையுள்ளதாக இருக்கலாம்; கவைக்குதவுமா? அன்பு மிகுந்ததாகக் காணப்படலாம். ஆனால்—அறிவு தொக்கியுளதா அதில்?

இந்த வகையிற்றானே இன்று மக்களிடம் உள்ள செல்வம், சிந்தனை, சிறப்பு, யாவும் ஆண்டவனுக்குச் செலவிடப்படுகின்றன. இந்த அகில உலகைப் படைத்த வனுக்குக் கோவில் கட்டுவதிலும், கும்பாபிஷேகம் செய் வதிலும், அவற்றின் வாலறுந்தால், காதறுந்தால், காலொடிந்தால் அவற்றை ஈடுசெய்வதிலுந்தான், இன்று, மக்கள் அறிவையும் பணத்தையும் பயன்படுத்துகின்றனர். படிக்கும் மக்கள் ஹாஸ்டல் வசதியற்றிருக்கும் போது, படிக்கப் பள்ளியில் இடமில்லாது ஏங்கித் தவிக்கும் போது. பரந்த—இந்தத் திருநாட்டின் நிலையைப் பாருங்கள்! படிக்கப் பள்ளியில்லை—ஹாஸ்டல் வசதியில்லை—பணமில்லை புதிய கட்டிடம் கட்ட; ஈரமில்லை மக்கள் நெஞ்சில் கொடையளிக்க. ஆனால், ஏட்டில் தீட்டிய ஆரிய முறைப்படி கோயிலிலே பணம் கோடி கோடியாகப் போய்ச் சேருகிறது. பாடுபட்டு மக்கள் பஞ்சையாய் வாழும்போது, பரமனுக்குப் பல லட்சத்தில் பதக்கங்கள், வாகனங்கள். என்ன அறியாமை மக்களிடம்? மக்கள் மாக்களாக மாறி, மனமுடைந்து, வாழ வழியின்றித் திகைக்கின்றனர். ஆனால் மகேஸ்வர பூஜைக்குத் தட்டில்லை, தடங்கலில்லை. காரணம் என்ன? மக்கள் மதத்துறையிலே தவறான கருத்துக் கொண்டிருக்கின்றனர், ஆம்! மக்களை மறந்து மகேஸ்வர பூஜையை மேலாகப் பாவிக்கின்றனர். இந்நிலை மாற வேண்டும். எவரும் தாழாது தன்மானத்துடன் வாழ வேண்டும் என்பதுதான் எமது எண்ணம், எதிர்கால வேலைத் திட்டம்.

குந்த் குடிசையின்றி, உண்ண உணவின்றி, அணிய ஆடையின்றி மக்கள் நிர்க்கதியாய் நிலவும்போது, ஆண்டவன் பேரால் கோட்டைகள் போன்ற கோயில்களை யும், வாகனங்களையும், மண்டபங்களையும் கட்டுகிறீரே! இது அந்த அன்புடைய ஆண்டவனுக்கு, அருள் படைத்த தந்தைக்கு, உவந்த செயலா? இது அறமெனப்படுமா, அன்றி அசட்டுச் சொல் எனப்படுமா என்று ஓர் அரைக் கணம் ஆராயுங்கள் தோழர்களே—உம் அறிவைக் கொண்டு!

ஆண்டவனுக்குப் பேசும் சக்தி இருந்து அவன் உங்களிடம் பேசுவதானால், அது ஒன்றே ஒன்ருகத்தான் இருக்க முடியும். ஆண்டவன் நயவஞ்சக மற்றவரானால், அறிவுடைய, அன்புடைய, அறம் மிகுந்த தந்தையரானால், அவர் கேட்டிருப்பார் உங்களை; "அப்பா! நான் இந்த அகில உலகை, அண்ட சராசரங்களைப் படைத்தேன், அதிலே ஜீவராசிகளைப் படைத்தேன், நெல்லைப் படைத்தேன், நீரைப் படைத்தேன், கடலைப் படைத்தேன், அதிலே முத்தைப் படைத்தேன், முத்தெடுக்கும் முறையைப் படைத்தேன், உன்னிடம்—அதைத் தடுக்க திமிங்கிலத்தைப் படைத்தேன்; எதையும் எண்ணிச் செய்ய, பகுத்துச் செய்ய, பகுத்தறிவைப் படைத்தேன் உனக்கு. அதன் மூலம் பாராள்வாய், பலரும் வாழ வகை செய்வாய் என நினைத்தேன். அதைவிட்டு நீ எனக்கு அரை வீசை வெண் பொங்கல் தந்து வரம் வேண்டுகிருயே! வகையற்ற மூடனே! அறிவைக் கொண்டு ஆவன செய்!" என்று தான் கேட்பார்.

ஆனல், ஆண்டவன் அவ்விதம் கேட்பதில்லை உங்களை, ஏன்? அவர் எப்பொழுதும் பேசினதில்லை. எப்பொழுதும் வெளிப்படையாக, விவேகத்துடன் பேசிப் பழக்கமுமில்லை அவருக்கு. அவர் பேசி இருப்பதெல்லாம்—தம் திருத்தூதர் வாயிலாக சித்தர்கள்—ஆச்சாரியர்கள்—அந்தணர் வாயி

லாகத்தான் ; ஒன்றுக்கொன்று முரண்பட்ட குணங்கள், கூறக் கூசிடும் குடிகாரச் செயல்கள், கடவுளைக் குணமற்ற கயவனாக, கபோதியாகக் காட்டும் கதைகள், இவைதானா மக்களை இன்பபுரிக்கு இழுத்துச் செல்லும் மார்க்கம் ?

கோயில் உள்ளே சிலை, இடையே திரை, அதன் பின்னே ஐயர். அவர் தயவு வைத்தால் திரை விலகும் ; தயவுக்குத் தட்சிணை தரவேண்டும். தயாபரனைக் காணவா இத்தனை தடைகள் ? என்ன நயவஞ்சகம் பொதுவிடத்தில்? அன்று, ரஸ்புடீன், ஜார் முதலானோரின் கொடுமைகளும் கூட மதத்தை முன் வைத்து, ஆண்டவன் ஆணை என்று, அலங்கார ஆர்ப்பாட்டங்கள் செய்துதான் நடந்தேறின. இன்று அதே முறையில் நம் நாட்டில் நடந்து வருகின்றன; எத்துணை நாள் இந்த இழிநிலை நம்மிடம் ?

பணம் கோயில்களிலே நகையாய், வாகனமாய், நில மாய் முடங்கிக் கிடக்கிறது. இந்த முடக்கு வாதம் தீர்ந்தால் முடிவுறும் வறுமை, கொடுமை, இல்லாமை என்பன வெல்லாம். இது எதை உணர்த்துகிறது ? இந்த நாடு ஏழை என்பதையா ? எப்படி ஏழை என்று கூற முடியும் இந்த நாட்டை ? தில்லைக் கூத்தரின் தங்க ஒடு வேய்ந்த சன்னிதானத்தையும், வரதரின் வைர நாமத்தையும், காஞ்சி காமாட்சியின் வைடூரியக் கற்களையும், அரங்கனாதரின் அற்புத ரத்தினங்களையும், வேங்கடத்தானின் பத்து லட்சம் பெறும் வைர முடியையும் காணும்போதும் கேட்கும்போதும்—அதிலும் இந்தத் திரவியம் எவ்வித நலனுமின்றி மூலையில் முடங்கிக் கிடக்கிறது—ஒரு சில சாமி (ஆசாமி)களின் உல்லாச வாழ்வைக் கருதி என்பதை அறிந்த பிறகு—இந்த நாட்டை ஏழை நாடென்று எவராவது கூற முடியுமா ? பொருளில்லையா இந்த நாட்டில் ? இருக்கிறது. யாரிடம் பொருள் உளது ? மதத்தின் பெயரால் கோயிலாகவும், வாகனமாகவும்,

ஆண்டவன் சொத்தாகவும் அடைந்து கிடக்கிறது. அந்தப் பொருள் பிறவி முதலாளிகளைக் (ஆரியரை) கொழுக்க வைக்கப் பயன்படுகிறது. பரமன் பேரால் உள்ள பணம் அதிர்வெடிக்கும், அலங்கார ஆர்ப்பாட்ட பூஜைக்கும், தேருக்கும் திருவிழாவிற்கும் உபயோகமாகிறது அநாவசிய மாக, அர்த்தமற்று. இது நீதியா? முறையா? என்று கண்டிக்கிறோம். இதில் தவறென்ன?

செல்வமிக்க இந்த நாட்டில் வறுமையால் வாடி வதங்கி வெளிநாடு செல்லும் தோழர்கள் இந்த நாட்டை வாழ்த்தி இருப்பர் என்று நினைக்கின்றீர்கள்! துக்கம் நெஞ்சையடைக்க—கண்ணீர் கடல் நீரிலே கலக்க, இந்த கதியற்றவர்கள் இந்நாட்டைப் பார்த்து, ‘அளவற்ற செல்வம் உன்னிடம் இருந்தென்ன? நாங்கள் அனாதைகள் தானே! வற்றாத நதிகள் இங்கே பாய்ந்தென்ன? எங்கள் வாழ்க்கை பாலைவனம்தானே! நஞ்சையும் புஞ்சையும் இருந்தென்ன? நாங்கள் பஞ்சைகள்தானே! பணமிருந் தென்ன? பராரிகள்தானே நாங்கள்! ஒரு கவளம் சோறில்லாது ஓடுகிறோம் நாட்டைவிட்டு, தங்க ஓடு வேய்ந்த கோயில் உள்ள தில்லையான் வாழும் இந்த நாட்டில் வதியும் நாங்கள்! வள்ளல்கள் வாழ்ந்த நாடாம்! நாதியற்ற நாங்கள் வாழ வழியில்லை இந்த நாட்டில்! செல்வமுண்டு இந்த நாட்டில், எங்களுக்குச் சோறிட மக்களில்லை! ஈரமில்லை நெஞ்சில் ஈசனைப் போற்றி யேத்தும் மக்களிடம் நாங்கள் வாழ வழி செய்யாமல் எங்களை வெளிநாட்டிற்குப் போகச் செய்யும் திருநாடே! அரசியலை அன்னியனிடமும், ஆத்மார்த்தத்தை ஆரிய னிடமும் வாணிபத்தை வட நாட்டானிடமும் ஒப்படைத்து விட்டுக் கிடக்கும் ஏ அடைநாடே! சோறில்லை எங்களுக்கு, சொர்ணம் விளையும் இந்த நாட்டில். எங்களை இக்கதியில் விடும் நீ இருந்தென்ன! போயென்ன! அக்கருத்துக்கு

இடமளித்து அனைதைகளைத் துரத்துகிறாய் அறிவிழந்து. ஏ. அறிவிழந்த நாடே! நீ அழிந்து படு! அழிந்து படு!, என்று தான் சபித்திருப்பர்; தம் நெஞ்சுக் குமுறலைக் கொட்டி யிருப்பர்.

இத்தகைய நிலைமை நாட்டிலே நிலவக் காரணம் என்ன? ஒரு குலம், அந்தப் பஞ்சமும் பிணியும் பீடையும் அண்டாது வாழ, அதற்காக மற்றவர் மாடென உழைக்க வேண்டுமென்பது ஆண்டவன் ஆணையா? இது நியாயமா? நெஞ்சில் கை வைத்து நினைத்துப் பாருங்கள்! உண்மையை உணர்வீர்கள், உலுத்தரை ஒடுக்க வழி காண்பீர்கள். நம்முடைய மன்னர்கள் இதிகாச புராணம் படித்து அடுத்த பிறவிக் கவலையில் ஆழ்ந்து ஆட்சியை மறந்தனர். அதனால் அந்தணர் புகுந்தனர் அரசியலில். அதன் பலன் இன்று நாம் சகல துறைகளிலும் வகையற்று, வாழ வழி யின்றி வாடிக் கிடக்கின்றோம். மாற்றானுக்கு இடமளித்து மக்களை மறந்தோம். நாம் நல்வாழ்வு பெற, மாற்றானைத் தொலைக்க, மதியைப் பெற, விதியை விரட்ட, பஞ்சப் பிணியையும் பறக்கடிக்க, ஓர் இடம் தேடுகிறோம். நாம் வாழ, நம் குறிக்கோளுடன் வாழ ஒரு எல்லைக்கோடு வகுத் துள்ளோம். எனவே, திராவிட நாட்டைத் தனி நாடாகப் பிரிக்க வேண்டுமென்கிறோம். திராவிடக் கூட்டாட்சியிலே தெலுங்கரும், மலையாளரும் சேர்வர். ஏன்? தெலுங் குக்கும் மலையாளத்துக்கும் மூலம் தமிழ்மொழியே. தமிழுக்கு ஆதியாக இருப்பது திராவிடம். எனவே மூன்று மொழிகளும் சேர்ந்த கூட்டரசு இங்கே நடைபெறும். அதிலே தமிழர் தனி மொழியோடு வாழ்வர். தெலுங்கரும், அவ்விதம், கேரளரும் அவ்விதமே. ஆனால், டெல்லி ஆட்சிக்குப் பதில் திராவிடக் கூட்டரசு நடக்கும்.

திராவிட நாட்டிலே எல்லோரும் ஓர் குலம் என்ற நியதி உண்டு. பாடுபடுவோர் பலனையனுபவிப்பவர்;

பதைக்க மாட்டார்கள்; உழைப்பு வீணுகாது; உலுத்தர் உயரமாட்டார்கள்; சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக் கேற்ற வசதியுண்டு; கீழ்சாதி மேல் சாதி கிடையாது; குருமாரில்லை இன்றுபோல் குந்தியுண்ண; வேதமோதி வீணராய் வாழும் வகையுமிராது; ஆண்டவனிடையே தரகனுய் வாழ வகையிராது. அன்றும் ஆரியனிருப்பான்; எவ்விதம்? மக்களைச் சுரண்டியல்ல, பூதேவனுக அல்ல, ஆண்டவன் திருத்தூதனுகவும் அல்ல, பிறர் உழைப்பை உறிஞ்சுபவனுகவுமல்ல, ஆரியர் மனிதனுக வாழ்வான் அன்று. மனிதனுக்கு மனிதன் பிறப்பிஞல் தனிச் சலுகை பெறமாட்டான். நஞ்சு நீங்கிய நாகம் போல், பல்லில்லா பாம்புபோல், கூண்டிலடைக்கப்பட்ட புலிபோல், வெறி நீங்கிய நாய்போல், வஞ்சனை சூது, சுரண்டல் முதலிய பிறவிக் குணங்கள் நீங்கி, நீக்கப்பட்டு வாழ்வர், வாழ வேண்டும். வீணராய்த் திரிந்து, விருந்துண்டும் வகை யிராது; இருக்க முடியாது, இருக்கக்கூடாது என்ற காரணத் தால். இன்றேல் ஆரியர் விலகுவர்—விலக்கப்படுவர் இந்த நாட்டைவிட்டு. இதுதான் திராவிட நாட்டில் ஆரியர் நிலை.

திராவிடநாட்டுப் பிரிவினை ஏன்? சமுதாயம் சந்தோஷ மாக வாழ வழி வகுக்க என்பதை கூறினேன். மற்றும் நம் மக்கள் பொருளாதாரத்தில் எவ்விதம் வஞ்சிக்கப் படுகிருர்கள் என்பதையும், காணுங்கள். வாணிபம் முழுதும் வட நாட்டார் வசம்விட்டு, வாழ வழியின்றித் திண்டாடு கிரும் நம்முடைய நாட்டில் (சென்னை மாநகரம்). இரும்புண்டு, தங்கமுண்டு, கட்டையுண்டு, கப்பல் கட்ட; பருத்தியுண்டு, பட்டுண்டு துணிநெய்ய; எல்லாம் இருக் கிறது. ஆனல் முதன்மையான வியாபாரிகள் யாவரும் வடநாட்டவரே. வைரம் வேண்டுமா; சுராஜ்மல்லுக்குப் போக வேண்டும். வெள்ளி தங்க நகைகளா! பாபாலால் இருக்கிறது. இரும்பு சாமான்களா! டாட்டாவை

விட்டால் வேறு வழியில்லை, விதியில்லை, பருத்தி ஆடைகளா! தலாலிடம் தஞ்சமடையத்தான் வேண்டும். பட்டாடைகளா! செல்லாராமுக்குச் செல்லவேண்டும். சிமிட்டி வேண்டுமானால் டால்மியாவிடம் ஏஜெண்டாக அமரத்தான் வேண்டும். பல சரக்குச் சாமானுக்கோ குப்தாவிடம் செல்ல வேண்டும், மருந்து வகைகளா தாதா விடம் தாளம் போட வேண்டும் என்ற நிலையில் இருக்கிறோம். முதலாளிகளாக வடநாட்டார் வகையாக அமர்ந்துவிட்டனர். நம்மவரெல்லாம் அவருடைய தரகர்களாய்த்தான் வாழ்க்கை நடத்த முடிகிறது, நடத்துகின்றனர்.

எனவே, நாம் நம் நிலையை உயர்த்திக்கொள்ள, தொழில்வளர பாதுகாப்பு (Protection) தேடுகிறோம். திராவிடநாடு பிரிந்து தனி நாடானால், திராவிட நாட்டில் ஒரு பத்து அல்லது இருபது ஆண்டுகட்கு வடநாட்டுப் பொருள்கள் தென்னாடு வரக்கூடாது என்று சட்டமிருக்கும். சான்றாக நம்மிடம் கிடைக்கும் சர்க்கரை, அரிசி முதலியவைகள் வெளிநாடுகளிலிருந்து வரக்கூடாது. இரும்பு, துணி முதலியவைகள் வந்தாலும் அவைகளுக்கு சுங்கம் (Tariff) போட்டுத் திராவிடநாட்டுத் தொழிலுக்கு ஊக்கந்தந்து ஆக்கம் தேடுவோம். வடநாட்டுப் பொருள் தென்னாடு வந்தால் தென்னாட்டு விலைக்குத்தான் விற்க முடியும். விளங்கக் கூறவேண்டுமானால் கிண்டியில் (Handicap Race) சலுகைப் பந்தயம் என்று ஒரு நாள் இருக்குமே அதையொத்தது இது. அன்று சாமர்த்தியமும் பலமுமுள்ள குதிரைகளைப் பின்னாலும் பலமற்றவைகளை முன்னாலும் நிற்கவைத்து ஓட்டம் விடுவர். அதனை நாம் தொழிலில்கையாளவேண்டும்.

தோழர்களே! இறுதியாக, உங்களுக்கு விடும் வேண்டுகோள்களை கேட்டுச் சிந்தனை செய்து பின்பற்றுங்கள்!

மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ, நம்குறிக்கோள் குன்றாதிருக்க, உழைப்பாளி உண்டுகளிக்க, உலுத்தர் ஒழிய; ஆண்டவன் பேரால் ஆபாசம், அநீதி, சுரண்டல், சூது நடவாதிருக்க, ஆங்கிலேயனின் அரசியல் சூழ்ச்சியிலிருந்தும், ஆரியனின் ஆத்மார்த்தினின்றும், வடநாட்டு வாணிபப் பிடியினின்றும் விலகி, மனிதர் மனிதர்களாய் வாழ வழியிருக்கும் திராவிட நாட்டைப் பெறவேண்டும் என்று கொட்டுங்கள் போர்முரசு; "பெற்றே தீருவோம் திராவிட நாட்டை என்ற எழுச்சி கொள்ளுங்கள்!" சிந்தனை செய்து சீர் தூக்கிப் பார்த்துச் செயலில் காட்டுங்கள்! என்று விரும்பி கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.